21093
SC
M.L2-19.7-9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1942
MADRAS

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இது
முப்பத்தொன்பது ஆண்டுகளாக நடைபெறும்
தனிச் செந்தமிழ் வெளியீடு
A BI-MONTHLY

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௨, ஆம், ஆவணி, புரட்டாசி.
திருமலர், ௧௧.] [தொகுதி, ...

பொருளடக்கம்

சிவஞானபோத ஆராய்ச்சி
(The Critique of Sivajnana Bodham)
சோமசுந்தர நாயகர் வரலாறு
(Life-Sketch of Somasundara Nayakar)
மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி
(Personal Magnetism)
இளைஞர்க்கான இன்றமிழ்
(Tamil Reader for the Young)
நாகநாட்டரசி குமுதவல்லி
(Kumudavalli, a high class Tamil Novel)

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
SWAMI VEDACHALAM,
பொதுநிலைக்கழக குரு.
பல்லாவரம்
PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
திருமுருகன் அச்சுக்கூடத்திற்
T. M. PRESS
பதிப்பிக்கப்பட்டது.

7th January, 1942.

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ரூபா ஆறணா

All Rights Reserved.

மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை 2 ஆம் பதிப்பு

முதற்பாகம்

இறைவனாற் கொடுக்கப்பட்ட இம்மக்கட்பிறவியானது மக்களுயிர்க்கு அறிவை யும் இன்பத்தையும் பெருகச்செய்யும் நோக்கத்தை யுடையதாகும். உயிர்கள் அடையவேண்டுவது இன்பம்; அவ்வின்பத்தை அடைதற்கும் அதனை நுகர் தற்கும் வழிகாட்டுவது அறிவு. அறிவும் இன்பமுமோ உடம்பின் சேர்க்கை யால் அன்றி உயிர்கள் உடம்பைவிட்டுத் தனிநின்று அடைவன அல்ல. உயி ரானது உடம்போடு உடன்கூடி நெடுங்காலம் வாழ வாழ, அறிவும் இன்பமும் அதற்கு உடன்சேர்ந்து பெருகிக்கொண்டே போகக் காண்கின்றோம். உடம் பானது நீளநில்லாது இடையே அழிந்துபோகுமானால், அதன்கணிருந்த உயிரும் இவ்வுலகில் அறிவும் இன்பமும் பெறுமலேபோய், மறுமையுலகிலும் அறியாமையில் அமிழ்ந்தி அளவிறந்த துன்பத்தை உழக்கும். ஆகையால், ஒரு வன் கோடி கோடியாகச் செல்வப்பொருளையும், அதனால் நுகரக்கூடிய இன் சுவைப்பண்டங்களையும் வைத்திருந்தாலும், இறைவன் தந்த உடம்பைமட்டும் அவன் இழந்துவிடுவானானால், அவன் அச்செல்வத்தாலும் அப்பண்டங்களாலும் யாதுபயன் பெறக்கூடும்? ஆகவே, நீண்டகாலந் தனதுடம்பைப் பழுதுபடாமல் வைத்திருந்தால்மட்டும் அவன் எல்லாநலங்களையும் அடைந்து இனிது வாழக் கூடுமென்பது நன்கு விளங்குகின்றதன்றோ? சிலர் பலர் நீண்டகாலம் உயிரோ டிருத்தல்கூடும்; ஆனால், அவர் மேன்மேல் அறிவையும் மேன்மேல் இன்பத் தையும் பெறுதற்கு இயலாத நோய்கொண்ட யாக்கையினராய் இருக்கின்றனர்; ஒரு சிறுநூல்தானும் படித்தின்புறமுடியாமலும், ஒருவாய்கொண்ட நல்லுணவு தானும் அருந்தி மகிழக்கூடாமலும், எந்நேரமும் மருந்துங்கையுமாய்க்கிடந்து, நீண்டகாலம் உயிரோடிருந்து துன்புற்றுறைதலினும் விரைவில் மாண்டுபோதல் அவர்க்கும் பிறர்க்கும் நன்றன்றோ? ஆகையால், நீண்டநாள் உயிரோடிருத்தல் மட்டும் போதாது; உடம்பும் உயிரும் நோயின்றி அறிவும் இன்பமும் மேன் மேற் பெறுதற்கேற்ற நல்லநிலைமையிலும் இருத்தல் இன்றியமையாததாகும்.

ஆகவே, நோய்இன்றி அறிவும் இன்பமும் பெருகி நீண்டகாலம் உயிர்வாழ் தற்குரிய சிறந்த எளிய இயற்கை முறைகளை, ஆசிரியர் மறைமலையடிகள் சென்ற முப்பதாண்டுகளாக ஆராய்ந்து கண்டு, அம்முறைகளின்படி தாமுந் தம் மைச் சேர்ந்தவர்களும் நெடுக நடந்துபார்த்து அவை திண்ணமாக எல்லார்க்கும் நன்மைதருமெனத் திட்டமாக அறிந்தபின்பே, அவைகளை எல்லாரும் எளிதில் உணரத்தக்க எளிய இனிய தனிச்செந்தமிழ் உரைநடையில் இந்நூலின்கண் எழுதியிருக்கின்றார்கள்.

இந்நூலின் முதற்பதிப்புப் படிகளைப் பலர்படித்து, அவற்றிற்சொல்லிய முறைகளின்படி நடந்து, தாம் பெரும்பயன் பெற்றதனைத் தம்மவர்க்குச் சொல்ல, அவரும் இந்நூற்படிகளை வாங்கிப்படிக்க, இந்நூலின் முதற்பதிப்புப் படிகள் விரைவிற் செலவாய்ப்போயின. அதன்பின், மேலும் மேலுந் தாம் ஆராய்ந்து நல்லவெனக்கண்ட புதியபொருள்களையும் இடையிடையேசேர்த்து, முதற்பதிப்பிலிருந்த வடசொற்களையும் அறவேகளைந்து, இந்நூலின் இரண் டாம் பதிப்பை 200-பக்கங்களுக்குமேல் அச்சிட்டபின், ஆசிரியர் டுவே தமிழர் மதம் என்னும் அரியபெரிய நூலை ஒன்றரையாண்டுகளாக மிக ஆராய்ந்தெழுத வேண்டுவதானமையின், இந்நூலின் பதிப்பு இடையே நின்றுபோகலாயிற்று. மீண்டும் அதனைப் பதிப்பிக்க முயல்கையில், மேல்நாடு கீழ்நாடுகளில் இப் போது நடைபெறும் பெருங்கொடும்போரால், காகிதம் முதலான அச்சுக்கருவி களின் விலை அளவுக்குமிஞ்சி ஏறிக்கொண்டே போகலானமையின் இந்நூலை இப்போது தொடர்ந்தச்சிட்டு முடித்தல் இயலவில்லை. ஆயினும், இதனைத் திரும்பப் பதிப்பிட்டவரையில் முதற்பாகமாக இப்போது வெளிப்படுத்தினால் நிரம்ப நலமாயிருக்குமென்றும், அச்சுக்கருவிகளின் விலை நயந்தபின் எஞ்சிய பிற்பகுதியை 2-ஆம் பாகமாக வெளியிடலாமென்றும் அன்பர் பலருந் தெரிவித் துக்கொள்ளுதலின், இப்போது இந்நூலின் முதல் 232-பக்கங்களை முதற்பாக மாக வெளியேற்றலாயிற்று; [illegible], விலை இரண்டரைரூபா [illegible]

OFFICE OF THE REG... 15 JAN 194 MADRAS

னைத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்தாரல்லரென்பது நன்கு பெறப்படுதல் காண்க.

இனி, மெய்கண்டதேவர் சிவஞானபோதம் அருளிச் செய்தற்கு முன், அப்பெயர்கொண்ட நூல் ஒன்று வடமொழியிலாதல் தென்மொழியிலாதல் இருந்ததென்பதற்குச் சான்று ஏதுமில்லாமையுங் கருத்திற் பதிக்கற்பாற்று. மாணிக்கவாசகர்க்கு இறைவன் அறிவுறுத்தியது சிவஞானபோதமேயென்று பரஞ்சோதிமுனிவர் தாமியற்றிய 'திருவிளையாடற் புராணத்துங்' கடவுண்மாமுனிவர் தாமியற்றிய 'திருவாதவூரர் புராணத்துங்' கூறினாரேனும், இவ்விருவர்க்கும் பலநூற்றாண்டுகள் முற்பட்டிருந்த பெரும்பற்றப் புலியூர் நம்பி அங்ஙனம் இறைவன் மாணிக்கவாசகர்க் குணர்த்தியது சிவஞானபோதம் எனக் கூறாமையானும், இறைவனவர்க்கறிவுறுத்தியதெல்லாம் ஐந்தெழுத்துண்மையேயெனக் கூறுதலானும் பிற்காலத்திருந்த அவ்விருவருரையுங் கொள்ளற்பாலனவல்ல. அவ்விருவரும் மெய்கண்டதேவ நாயனார்க்குப் பல நூற்றாண்டுகள் பின்னேயிருந்து அவரருளிச்செய்த சிவஞானபோத நூலைப் பயின்றவராகலின், அவர் அந்நூற்குத் தாங்கருதியவாறு ஓர் ஏற்றங் கற்பித்தற்பொருட்டே, அது சிவபிரான்கையி லிருந்ததென்றும் அதனையே இறைவன் திருவாதவூரர்க்கு அறிவுறுத்தருளினனென்றும் நிகழாததொன்றை நிகழ்ந்ததாக வைத்துப் படைத்துமொழிந்திட்டார். ஆனால், இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முன்னிருந்த பெரும்பற்றப் புலியூர் நம்பியோ பெயரளவாகவேனுஞ் சிவஞானபோத நூலைத் தமது திருவிளையாடலில் யாண்டுங் குறிப்பிடாமையின், மெய்கண்டதேவர்க்குமுன் சிவஞானபோதம் எனப் பெயரிய நூல் ஏதும் இருந்திலாமை தேற்றமே யாமென்க. எனவே, சிவஞானபோதம் எனும் நூலை முதன் முதல் அருளிச்செய்தவர் மெய்கண்டதேவரே யல்லாமல் வேறெ

வரும் அல்லரென்பது துணிபொருளாகப் பெறப்படுதல் காண்க.

இங்ஙனமாகச், சிவஞானபோதம் என்னுஞ் செம்பொருணூலை முதன் முதல் இயற்றிய மெய்கண்டதேவர் பிள்ளைமைப்பருவத்திலேயே எல்லாம்வல்ல அறிவுநூலாசிரியராய்த் திகழ்தல் உணர்ந்த அறிஞர்பலரும் அவரையணுகி வணங்கித், தாங்கேட்டுத் தெளியவிழைந்த அறிவுநூற்பொருள்கள் பலவும் அவர்பால் உசாவி ஆராயலாயினர். அதனால் மெய்கண்ட தேவரின் பொன்றாப்புகழ் இத்தென்றமிழ் நாடெங்கணும் பரவி ஒளிரலாயிற்று.

இவ்வாறு நிகழ்கையில், மெய்கண்டதேவர் பிறந்தருளிய குடும்பத்திற்குக் குருவும், வடமொழிக்கண் உள்ள சிவாகமங்களெல்லாம் ஒருங்கே ஆராய்ந்து தெளிந்து வல்லராய் விளங்கிய காரணத்தாற் 'சகலாகமபண்டிதர்' எனச் சிறப்புப்பெயர் வாய்ந்தவருந், திருவெண்ணெய் நல்லூர்க்கு அணித்தான திருத்துறையூரில் வாழ்ந்தவருமான அருணந்திசிவாசாரியார் என்னுந் திருக்கோயில் அந்தணர் சிவாகமமுடிபொருளான சைவசித்தாந்தப் பொருள்களைத் தம்மாணாக்கர்க்குச் செவியறிவுறுத்திவந்தனர். அங்ஙனம் அவர்பாற் சைவசித்தாந்தப் பொருளுணர்ச்சி பெற்றுவரும் அவர்தம் மாணவரிற் பலர், திருவெண்ணெய் நல்லூரிற் பிள்ளைமைப்பருவத்தினரா யிருக்கும் மெய்கண்ட தேவர் சைவசித்தாந்தப் பொருள்விளக்கஞ் செய்து வருதலைக் கேள்வியுற்றுப் பெரிதும் வியப்பெய்தி, அப்பிள்ளையாரை யணுகி அவர்தந் திருவடிகளைத் தொழுது, அவர் அறிவுறுக்கும் மெய்ப்பொருளுரைகளைச் செவியாரப் பருகி, இதற்குமுன் தாம் அறியாமலும் ஐயுற்றுந் தியங்கிய பொருட்டன்மைகளை அறிந்தும் ஐயந்தெளிந்தும் மெய்யுணர்வின்பத்திற் றிளைத்தவண்ணமாய்ப் பிள்ளையாரைப் பிரியாமல் இருந்து மேன்மேன் மெய்யறிவு பெற்று வரலானார்.

210493

இவ்வாற்றால் தம் மாணவர்குழாம் நாளுக்கு நாட் குறைந்துவர, அதனைக்கண்ட அருணந்தியார் அதற்குக் காரணம் என்னென்று எஞ்சிய தம் மாணவரை வினவ, அவர் அம்மற்றை மாணவரெல்லாம் மெய்கண்டதேவர்பாற் சென்று மெய்யுணர்வு பெற்றுவருஞ் செய்தியினை எடுத்தியம்பினார். அதுகேட்ட அருணந்தியார், பிள்ளைமைப் பருவத்தினரான மெய்கண்டார் அறிவுநூற் பொருள்விளக்கஞ் செய்கின்றார் என்னுஞ் செய்தியில் ஐயமும் வியப்புந் தமதுள்ளத்தை ஒருபுறங் கதுவத், தம்மாணவர் பலர் தம்பால் மெய்ப்பொருள் கேட்டு வருதலை விடுத்து மெய்கண்டார்பால் அதனைக் கேட்கப்போயினார் என்னுஞ் செய்தியில் அழுக்காறுஞ் சினமுந் தமதுள்ளத்தை மற்றொருபுறங் கதுவத், தாமே அச்செய்தியின் மெய்ம்மையினை நேரிற் கண்டறிதற் பொருட்டு ஒருநாள் திருவெண்ணெய் நல்லூர்க்கு ஏகி, மெய்கண்டதேவர்பாற் சென்றனர். அருணந்தியார் வந்த நேரத்தில், மெய்கண்டதேவர் தம்மெதிரே குழுமியிருந்த மாணவர்க்கு ஆணவமலத்தின் இயல்புஞ் செயலும் எடுத்து விரித்து விளக்கிக்கொண்டிருந்தனர். அருணந்தியாரின் வருகையைக் காண்டலும், அங்கிருந்தாரில் முன்னே அருணந்தியார்க்கு மாணவராயிருந்தார் பலரும் எழுந்து அவரை வணங்கினர். அருணந்தியார் உடனே அவர்களைநோக்கி, "இப்போது எதனைப்பற்றிக் கேட்டுக்கொண் டிருக்கின்றீர்கள்?" என வினவ, அவர்களுள் ஒருவர் "ஆணவமலத்தின் இயல்பையுஞ் செயலையும்பற்றிக் கேட்டுக்கொண் டிருக்கின்றோம்" என்று பணிவுடன் விடைகூறினர். அவ்வளவில் அருணந்தியார் அவர்களுடன் உரையாடுதலைவிடுத்து, மெய்கண்டதேவரையே செருக்குடன் எதிர்நோக்கி, "ஆணவமலத்தின் உண்மை நிலை யாது?" என்று தலையசைப்புடன் வினவினர். அதற்கு மெய்கண்டதேவர் ஏதும் விடைபகராமல், "நீர் இங்ஙனம் இறுமாந்து நின்றுவினவும் இந்நிலையே ஆணவமலத்தின்

இங்ஙனமாக, மெய்கண்டதேவர்க்கு முன் உய்யவந்த தேவநாயனர் இருவரும் அருளிச்செய்த 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்' என்னும் இருநூல்களுடன், மெய்கண்டதேவரும் அவர்தம் மாணவரும், அவர்தம்மாணவரின் மாணவரும் அருளிச்செய்த நூல்கள் பன்னிரண்டுஞ் சேர்த்துச் சைவசித்தாந்த நூல்கள் பதினான்கென்று சென்ற அறுநூறாண்டுகளாக வழங்கிவருகின்றன.

முழுமுதற்கடவுள் உண்மை

ஆசிரியர் மெய்கண்டதேவநாயனரால் அறிவாராய்ச்சிப் பொருளெல்லாம் நன்கினிதுவிளங்கப் பன்னிரண்டு சூத்திரங்களிலே செறித்து அருளிச்செய்யப்பட்ட சிவஞானபோத நூல் உரையிடற்காகா அருமை பெருமையுடைத்தாய்த் திகழும் வாய்மை முன்னமே காட்டப்பட்டது. இது தன்னைத் துறைபோகக்கற்றாராய்ந்து தெளிந்தார் எல்லாநூற்பொருளும் ஒருங்குணர்ந்தாராய் மெய்ப்பொருளுறுதிகூடி முதல்வன் றிருவடிப்பேற்றினைத் தலைப்படுவரென்பது துணிபாமாகலின், இதன் சூத்திரப்பொருளை முறையே ஆராயப்புகுந்து, முதற்கண் முதற்சூத்திரத்தான் ஆராய்ந்து நிறுவப்படும் முழுமுதற்கடவுளுண்மையினை எடுத்து விளக்குவாம்:

"அவனென்றும் அவளென்றும் அதுவென்றுஞ் சுட்டியுரைக்கப்படும் அவ்வமைப்புகள் ஒருகாற்றோன்றிச் சிலகால் நிலவிப் பின்னொருகால் அழிதலாகிய மூன்று தொழில்களின் வயப்பட்டனவாய் நடைபெறக்காண்டலின், அவ்வமைப்புகள் தாமாகவே தோன்றியனவாகாமற், பிறிதோர் அறிவுப்பொருளாற் றோற்றுவிக்கப்பட்ட உள்பொருள்களேயாம்; அவை சிலகாற் சென்றபின் அழிந்து மறையினும் அவற்றின்கண் உள்ள வாலாமை நீங்காமையின், அது நீங்குங்காறும் அவை மீளமீளத் தோன்றுநிற்கும்; தோற்றுவித்த அவ்வமைப்புகளை அழிக்கும் எல்லாம்வல்ல அறிவுப்பொருளே அவ்வமைப்புகளுக்கு முன்னுமுள்ள

முதற்பொருளாகுமென்று அறியற்பாற்று" என்பதே முதற்சூத்திரப்பொருளாகும்.

இதன்கட், சுட்டியறியத்தக்க அமைப்புகளை ஆராயுமுகத்தானன்றிச், சுட்டியாராய்தற்கு இயலாத பொருளுணர்ச்சிகொண்டு முழுமுதற் கடவுளிருப்பினைத் துணிதல்செல்லாதென்பது முதற்கண் அறிவுறுத்தப்படுகின்றது. மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளின் வாயிலாக நாம் உணரும் பொருள்கள் அத்தனையுஞ் சிற்றளவுவாய்ந்த சிறுபொருள்களேயல்லாமற் பேரளவுவாய்ந்த பெரும்பொருள்கள் அல்ல. ஒன்றையொன்று நோக்கச் சிறுமை பெருமை யுடையனவாக வழங்கப்படினும் நம்புலன்களால் அறியப்படும் பொருள்களெல்லாம் நம்மாற் சுட்டியறியப்படுஞ் சிறுமை யுடையனவேயாம். நம்புலன்களாற் கவரப்படாத சாலப்பெரிய பொருளின் அமைப்பு நம்மால் ஒருசிறிதும் அறியப்படாதென் றுணர்தல்வேண்டும். இம்மண்ணுலகிற்றோன்றும் பொருள்கள் அத்துணையும் நம்முடம்பின் உறுப்புகளாற் றொடப்படுவனவாயும், அவற்றுட் சில பல நாவாற் சுவைக்கப்படுவனவாயும், மற்றுஞ்சில மூக்கால் மோக்கப்படுவனவாயும், இன்னும் பல கண்ணாற் காணப்படுவனவாயும் இருக்கின்றன. இவற்றுள்ளும், நாவாலும் மூக்காலும் நுகரப்படுவன அளவில் மிகச்சிறியனவேயாம்; உடம்பினுறுப்புகளாற் றொடப்படுவனவோ சிறியனவும் பெரியனவுமா யிருப்பினும், ஒருகாலத்தோரிடத்து ஓர் உறுப்பாற் றொடப்படுவது ஒரு பொருளின் மிகச்சிறு பகுதியேயாம் என்றுணர்தல் வேண்டும்; ஒரு பெருமலை அளவிற் பெரியதேயாயினும், அதனை நங்கைகள் தொட்டுணரக்கூடியவே யாயினும், ஒரேகாலத்தில் அவை அம்மலையின் பேரளவினையெல்லாந் தொட்டுணர வல்லன அல்ல, அதன் மிகச்சிறிய ஒரு பகுதியினையே அவை தொட்டுணரவல்லனவாகும். அங்ஙனமே, நங்கண்களானவை சிறியவும் பெரியவுமாய பல பொருள்களையும் பார்க்க

ஓர் உரைநூல் இயற்றினாரன்றி, இவராதல், வேறே ஆழ்வார்களாதல் சைவசமயத்தவரை வென்றனரென்பது வெறும் புனைவேயாமென்க.

இன்னும், வைணவசமய முன்னோர் பலர், சிவனடியார் சிலருடன் வழக்கிட்டுத் தோல்வியுற்ற வரலாறுகள் பலவற்றை நாயகரவர்கள் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றனர்:

கஞ்சனூரில் மதுசூதனாசாரி எனப்பெயரிய வைணவர் ஒருவர், சிவபிரானைப் பழித்தலையே ஒருதொழிலாக்கொண்டு, மாந்தர்பலரைப் பொய்ந்நெறியிற் புகுத்தி வந்தனர். அத்தன்மையினார்க்குப் பிறந்த தவப்புதல்வன் ஒருவன் கல்வியில் வல்லனாய் வளர்ந்து வடநூல் தென்னூல்களைப் பழுதற ஓதியுணர்ந்து தெளிந்தபின், தன் தந்தையின் வைணவக்கொள்கையை மறுத்து, வைணவக்குறிகளை இடானாய்த், திருநீறுஞ் சிவமணியும் அணிந்து, தன்னை அரனுக்கு ஒப்படைத்துவிட்டகாரணத்தால் 'அரதத்தன்' எனப்பெயர் பூண்டு, சிவனடியார் குழுவிற்சேர்ந்து சைவசமய உண்மையை எங்கும் பரவச் செய்துவந்தனன். அதுகண்ட அவ்விளைஞரின் தந்தையான மதுசூதனாசாரி அக்காலத்திருந்த அரசனிடஞ்சென்று, தன் புதல்வன் தனக்குமாறாய் ஒழுகுதலைக் கூறி முறையிட, அவ்வரசன் அரதத்தரைத் தனது அவைக்குவருவித்து, அவர்தங் கொள்கையை ஒவ்வொன்றாச்சொல்லி நாட்டும்படி கேட்ப, அவரும் நெருப்பிட்டுப் பழுக்கக் காய்ச்சிய இருப்புப்படிகள் ஒவ்வொன்றன்மேல் ஏறியிருந்து தம்முடைய சைவ உண்மைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லிவர, அவர்தந் தந்தையும் அவருடன்போந்த வைணவக்குருமாரும் அவ்வுண்மைகளை மறுக்கமாட்டாமல் தோல்வியுற்றனர். அங்ஙனம் அரதத்தர் நாட்டிய சிவபிரான் முழுமுதன்மைகளிற் சில வருமாறு:

சிவபிரானே முழுமுதற் கடவுள்.

இருக்குவேத மூன்றாம்மண்டிலத்தில் உள்ளதும், அந்தணர்களாற் காலை நண்பகல் மாலை என்னும் முப்போதும் ஓதப்படுவதுமான காயத்திரி மந்திர உரையுளிற் 'பர்க்கன்' என்னும் பெயரால் வழுத்தப்படும் முழுமுதற்கடவுள் சிவபிரானேயென்பது மைத்திராயணியுபநிடதத்தினாலும், அமரநிகண்டினாலுந் துணியப்படும் உண்மையாகும்.

சிவபிரான் வழிபாட்டிற் சிறந்தவனான இராவணனைக்கொன்ற பாவம் நீங்கும்பொருட்டு, இராமன் சிவலிங்கத்தை அமைத்து வழி

பட்டகாரணத்தால் 'இராமேசுரம்' எனப்பெயரிய திருக்கோயில் அன்றிருந்து இன்றுகாறும் இத்தென்றமிழ்நாட்டில் நிலவுதல் இமயம் வரையிலுள்ள மக்கள் அனைவரும் அறிந்ததொரு வாய்மையன்றோ?

கண்ணன் கயிலைமலையை நண்ணிச் சிவபிரானை நோக்கித் தவம் புரிந்து தனக்குப் பிள்ளைப்பேறுண்டாகும்படி வேண்ட, அங்ஙனமே சிவபிரான் அவற்கு அருள் செய்ததை அறியாதார் யார்?

திருமால் தன்னால் வெல்லப்படாத அரக்கரை அழிக்குங் கருவியாக ஆழிப்படை (சக்கராயுதம்) ஒன்றனைப் பெறவான்வேண்டிச் சிவபிரானை நாடோறும் ஆயிரந்தாமரைமலர் தூவி வழிபாடாற்றி வருகையில், ஒருநாள் ஆயிரம் பூக்களில் ஒருபூக்குறைய, உடனே அதற்கு ஈடாகத் தாமரையிதழ்போன்ற தன் கண்களில் ஒன்றைப்பிடுங்கி அதனைச் சிவபிரான் திருவடிகளில் இட்டு வணங்கச், சிவபிரான் திருமாலின் மனவுறைப்புக்குமகிழ்ந்து அவர்க்கு அவர்வேண்டிய ஆழிப்படையினை நல்கினரென்பதும் நூல்களால் அறியக்கிடக்கின்றதன்றோ?

சிவபிரான் சனகர் முதலான முனிவர்க்கு வாய்வாளாத் தவநிலையினை அறிவிக்கும்பொருட்டு, உமைப்பிராட்டியாரைப் பிரிந்து தவநிலையில் அமர, உலகத்துள்ள எல்லாவுயிர்களும் ஆண் பெண் சேர்க்கையின்றி முயற்சி யவிந்து கிடத்தலால் உலகியல் நடைபெறாமை கண்டு, தேவர்கள் திருமால் மகனான காமவேளை இறைவன்பால் விடுத்தாராகக், காமவேளும் இறைவனை அணுகி அவர்க்குக் காமவிருப்பினை எழுப்பமுயலவே, இறைவன் நெற்றிக்கண்ணால் அவனை வெகுண்டு நோக்கக் காமவேள் வெந்து சாம்பராயினதூஉம் அறியாதார் யார்?

தேவர்கள் தாம் அரக்கரோடு இடும்போரிற் சாவாதிருத்தல் வேண்டித் திருமாலின் துணைகொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுக்க முயல்கையில், அதன்கண் முதலில் எழுந்துபெருகிய நஞ்சின் தாக்குதலால் திருமாலும் மறைத்தேவர்களும் உடல் கரிந்து ஓடிச் சிவபிரானை அடைக்கலமாய்ப் புகப், பிரான் அந்நஞ்சினைத் தான் பருகித் தேவர்களைக் காத்த அருட்பெருஞ் செயலும் இருக்குவேதத்திலேயே ஓதப்பட்டிருக்கின்றதன்றோ?

தன்னை ஓவாது வணங்கி வழுத்துதலையே தவமாய்க்கொண்ட மார்க்கண்டேயருயிரைக் கொள்ளைகொள்ள வந்த கூற்றுவனைக் காலால் உதைத்துக் கீழ்வீழ்த்தி, இளைஞரான அம்மார்க்கண்டேயரை என்றும் இளைஞராயிருக்கப் பணித்த சிவபிரான்றன் அருட்பெருஞ் செயல் எவர்தாம் அறியாதவர்?

சிவபிரான் முப்புரங்களை நெற்றிக்கண்ணால் எரித்துத் தேவர்களைக் காத்த அருட்பெருஞ் செயலும் இருக்குவேதத்திலேயே நன்கெடுத்து நவிலப்பட்டிருக்கின்றதன்றோ?

சிவபிரானைப் பழித்துத் தக்கன் வேட்ட வேள்வியானது, சிவபிரான் ஏவிய வீரபத்திரரால், அழிக்கப்பட்டதுடன், தக்கனுந் தலை வெட்டுண்டு இறந்துபட, அவனுக்குத் துணைநின்ற விஷ்ணு பிரமன் முதலான தேவர்களும் அவரால் ஒறுக்கப்பட்டசெய்தி 'தைத்திரீய சங்கிதை,' 'சதபத பிராமணம்,' 'இராமாயணம்,' 'மாபாரதம்,' 'காந்தம்' முதலான நூல்களிலெல்லாம் மிகப்பழைய காலந்தொட்டு ஓதப்பட்டு வருகின்றதன்றோ?

தமது கையிலுள்ள படைக்கலங்களைக்கொண்டு பகைவரை வேறல் இயலாதெனக்கண்ட அருச்சுனன், கண்ணன் அறிவுறுத்தியபடி சிவபிரானைநோக்கிக் கடுந்தவம்புரியச், சிவபிரான் அவனது தவத்திற்கு உவந்து பாசுபதப்படை அவனுக்கு வழங்க அவன் அதனாற் பகைவரை வென்றசெய்தி மாபாரதத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ?

இரணியனைப் பிடித்துப் பிளந்து அவனது செங்குருதியினைப் பருகிய நரசிங்கன், அதனால் வெறிகொண்டு உலகத்தையே அழித்துவிடுதற்கு ஆரவாரஞ் செய்தல் கண்ட தேவர்கள் வெருக்கொண்டு சிவபெருமானை வழுத்த, அவரது ஆணையால் வீரபத்திரர் ஒரு சரபப்புள்ளின் வடிவில் வந்து நரசிங்கனைப்பிடித்துக் கிழித்தசெய்தி 'சரபோப நிடதத்திற்' கூறப்பட்டிருக்கின்றதன்றோ?

தாருகவனத்து முனிவர்கள் வேள்விவேட்டலே எல்லாநலனும் அளிக்கவல்லது, சிவபிரானை வணங்குதல் வேண்டாச்செயலே யாம் என்று பகர்ந்து இறுமாந்தொழுகிய காலையிற் சிவபிரான் ஓர் ஆண்டியாகவும் அவரது ஏவலால் திருமால் அழகிற்சிறந்த ஒரு மோகினிப் பெண்ணாகவும் போந்து அம்முனிவரின் இறுமாப்பைக் குலைத்தபின், சிவபிரான் அம்மோகினிப்பெண்ணைக்கூடிச்'சாத்தன்'எனப்பெயரிய 'ஐயனாரை' ஈன்ற வரலாறு இவ்விந்தியநாடு முழுதும் அறிந்ததொன்றன்றோ?

திருமாலும் நான்முகனுந் தாந்தாமே பெரியரென வழக்கிட்டுப் போர்புரியுங்கால் அவ்விருவரின் நடுவே சிவபிரான் தழற்பிழம்பு வடிவாய்த்தோன்றி, "எமது முடியையாதல் அடியையாதல் எவர் தேடிக் கண்டுபிடிக்கின்றனரோ அவரே பெரியர்" எனக்கூறியருளத், திரு

மால் பன்றிவடிவெடுத்து அவ்வழற்பிழம்பின் அடியையும் நான்முகன் ஓர் அன்னப்புள்ளின் வடிவெடுத்து அதன் முடியையுங் காணப்புக்குப் பன்னெடுங்காலம் முயன்றும், இருவரும் அவைதம்மைக் காணமுடியாமல் அலுத்துச் செருக்கு அடங்கிய வரலாறு பழையநூல்களிலும் உலகவழக்கிலும் பண்டுதொட்டு வழங்கிவருகின்றதன்றோ?

திருமால், நான்முகன் இந்திரன்முதலான தேவர்கள் அனைவரும் பிறந்தார்கள் இறந்தார்கள் என்னுங்கதை அவரவர் பெருமைகூறும் புராணங்களிலேயே வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டிருக்கச், சிவபிரான் பிறந்தார் இறந்தார் என்னுங்கதை குறிப்பாலேனும் எந்நூலினும் நவிலப்படாமையின், சிவபிரான் ஒருவரே பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற்கடவுளாதலுந், திருமால் முதலான ஏனையோரெல்லாம் பிறந்திறக்குஞ் சிற்றுயிர்களேயாதலும் உள்ளங்கை நெல்லிக்கனி போற் றெள்ளிதின் விளங்குகின்றதன்றோ?

காசியின்கட் கங்கைக்கரையிலே நின்று வியாசன் அறிவுமயங்கித் தன் மாணாக்கரெதிரே தன் கைகளை உயரவெடுத்துத் திருமாலே முழுமுதற்கடவுள் என ஆணையிட்டுரைப்ப, உடனே வியாசனுடைய கைகள் மரத்துப்போய் மடக்க இயலாமல் நின்று கோவினை விளைவியா நிற்கவே, திருமால் அவன்பாற்போந்து, "அறிவற்றமடையனாகிய வியாசனே, யான் உலகிற்குத் தலைவன், எனக்குத்தலைவன் சிவபெருமானே யாவன் என்றறிந்து அவனையே வழிபடக்கடவாய்" என்றறிவுறுத்திய வரலாறு பழைய நூல்களிற் சொல்லப்பட்டதொன்றன்றோ?

முப்புரங்களைச் சிவபிரான் எரித்தகாலையில் திருமால் ஓர் எருதின் வடிவெடுத்து இறைவனைத்தாங்கிய செய்தியும் பண்டைநூல்கள் மொழிந்ததேயன்றோ?

இங்ஙனமாகச், சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுளாம் உண்மைகளை அரதத்தர் ஒவ்வொன்றாச் சொல்லிவர, அவர்தந்தையாகிய மதுசூதனாசாரியும் அவருடன் அரசவையிற்போந்து குழுமிய வைணவரும அவைதம்மை ஒருசிறிதும் மறுக்கமாட்டாமல் வாயவிந்து அவரைவணங்க, அரதத்தர் அவரெல்லாரையுந் திருத்திச் சிவதீக்கைசெய்து மெய்வழிப்படுத்தினர். இவ்வாறு அப்பையதீக்கிதர் இயற்றிய "ஹரதத்த மாங்மியம்" என்னும் நூலில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

சைவாசிரியரால் தோல்வியுற்ற வைணவர்கள்

இன்னும், இங்ஙனமே சிவபெருமானைப்பழித்துத் திருமாலையே முழுமுதற்கடவுளாக்க விழைந்த வைணவக்குருமார் மற்றுஞ்சிலருஞ் சைவாசிரியரால் வெல்லப்பட்ட வரலாறுகளை நாயகரவர்கள் எடுத்துக் காட்டி யிருக்கின்றார்கள். அவையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிக விரியுமாகலின் அவற்றை இங்கே சுருக்கிக்காட்டுவாம்.

காஞ்சிமாநகரிலிருந்த 'தாத்தாசாரி' என்னும் வைணவகுரு தங் காலத்திருந்த அப்பையதீக்ஷிதர் என்னுஞ் சைவாசிரியரைத் தாம் எந்த வகையிலும் வெல்லமுடியாமை கண்டு மனம் பெரிதுபுழுங்கி, நஞ்சங் கலந்தபாலை அவர் பருகுமாறுகொடுக்க, அவர் 'சிவதத்வவிவேகம்' என்னும் நூலையியற்றிச் சிவபெருமானைவழுத்தி அதனைப்பருக அந் நஞ்சு அவரைக் கொல்லமாட்டாதாயிற்று. அதன்பின் தாத்தாசாரி தங்காலத்திருந்த அரசனவைக்களத்தில் அவரை வருவித்துவைத்து, வியாசபட்டர், பராசரபட்டர் என்னும் மத்துவமத குருமார்களை நடுநின்று தீர்ப்புச்சொல்பவராக நிறுவி, அப்பைய தீக்ஷிதருடன் பல நாள் வழக்காடியுங் கடைசியில் தோல்வியுற்றார். நடுவர் இருவரில் வியாசபட்டர் எழுந்து, அப்பையதீக்ஷிதரால் வைணவ மதத்தின் பொய்ம்மை புலப்படுத்தப்பட்ட வகைகளை எடுத்துமொழிந்து தீக்ஷிதருக்கு மாணவராய்ச் சைவசமயந்தழீஇயினார். அதுகண்டு பராசரபட்டர் வயிறெரிந்து தாமே தீக்ஷிதருடன் எழுநாள்வரையில் வழக்கிட்டு முடிவில் தாமுந்தோல்வியுற்றுத் தீக்ஷிதரைவணங்கிச் சைவராயினர். அதன்பின் பௌத்தகுரு ஒருவரும் அவருடன் வழக்கிட்டு வாய் அவிந்தனர். அதன்பின் மாயாவாதிகளாகிய சுமார்த்தர் சிலர் சிவாகமங்களை இகழ்ந்துபேச, அவர்களை மறுத்து 'வைதிகாசார நிர்ணயம்' என்னும் நூலொன்றை யியற்றி அவர்கட்கு அறிவுதெருட்டினர். இங்ஙனம், மத்வராமாநுஜ பௌத்த மாயவாத மதங்களை மறுத்துத் துகளாக்கியதுபோலவே, சைவசமயத்திற்கு மாறான ஏனையெல்லா மதங்களையும் பொடிபடுத்தி அப்பையதீக்ஷிதர் 'பரமததிமிரபாநு' என்னும் நூலொன்றியற்றினர்.

இவ்வாறு எந்தவகையிலுந் தொலைக்கமுடியாத சைவசமய கோளரியாய்த் தீக்ஷிதர் வீறிவிளங்குதல் கண்ட தாத்தாசாரி கொலைகாரர் சிலரை ஏவித், தீக்ஷிதர் ஆற்றில் நீராடித் தனியேவரும் நேரம்பார்த்து அவரைக் கொல்லுதற்கு முயலத், தீக்ஷிதரைச்சூழச் சூலமேந்திய கையினராய்ச் சிலர் நிற்கக்கண்டு, அக்கொலைஞர் பெரிதும் வெருக்

கொண்டு, தம்மைத் தாத்தாசாரி ஏவியதனைத் தீக்ஷிதருக்குத் தெரிவித்து, அவரைப்பணிந்தேகினர். உடனே தீக்ஷிதர் நடுநிலைவழீஇச் சிவனடியார்க்குத் தீங்கிழைக்குந் தாத்தாசாரி மாண்டொழிகவெனச் சிவபிரானைவேண்டி வசவுகூறத், தலையில் இடிவிழுந்து தாத்தாசாரி மாண்டனனெனச் சிவஞான சுவாமிகள் இயற்றிய ''திகநிதமாங்கியம்'' என்னும் நூல் நுவல்கின்றது.

இன்னுந், தஞ்சைமாநகரிற் சிவாக்கிரயோகிகள் என்னுஞ் சைவப்பெரியார் ஒருவர் சைவசமயவுண்மையை எங்கும் விளங்கச்செய்து கொண்டு வருங்காலத்தில் 'மணவாளமாமுனி' என்னும் வைணவகுரு ஒருவர், அந்நகரில் அரசுசெலுத்திவந்த சரபோஜி மன்னன்பாற் சென்று, 'யாம் சிவாக்கிரயோகியுடன் வழக்கிட்டுச் சைவத்தைப் பொய்யாக்கல்வேண்டும்; அதற்கு நீர் ஓர் அவைகூட்டல்வேண்டும்' என்று வற்புறுத்த, அது தக்கதன்றென்று அரசன் மறுத்துரைத்தும், அவர்கேளாமையின், சிவாக்கிரயோகிகளின் உடம்பாடுபெற்றுச் சரபோஜிமன்னன் தனதாண்மனையிலேயே ஒரு பேரவைகூட்டுவித்து, 'எவர் தோல்வியடைகின்றனரோ அவர் வெற்றிபெற்றவரின் மதத்தைச் சார்தல்வேண்டு'மென ஆணைதந்தனன். சமயவழக்கானது பதினெட்டுநாள்மட்டும் நடைபெறல் வேண்டுமென்பதும் அறிஞரால் வரையறுக்கப்பட்டது. அதன்பிற் சிவாக்கிரயோகிகட்கும் மணவாள மாமுனிக்குஞ் சமயவழக்கு நடந்துவருகையில் ஒவ்வொருநாளுஞ் சிவாக்கிரயோகிகள் பக்கமே வெற்றியுண்டாகிவரலாயிற்று; கடைசியாகப் பதினேழாம் நாளிலுஞ் சிவாக்கிரயோகிகள் வெற்றிபெற்று விளங்க, அரசனும் அரசவையிலுள்ள அறிஞர்பலரும் அதுகண்டு மிக மகிழ்ந்த வுள்ளத்தினரா யிருத்தலுணர்ந்து, மணவாள மாமுனியும் அவர்தம் வைணவக் கூட்டத்தினருந் திகிலடைந்து, 'நாளைப்பதினெட்டாம்நாள் வழக்கு நடக்குமுன்னமே யோகியாரைத் தொலைத்துவிடல் வேண்டு'மென்று தமக்குள் உறுதிசெய்து, அன்றிரவே சிவாக்கிர யோகிகள் இருந்த திருமடத்தைத் தீவைத்துக் கொளுத்திவிட்டனர். மறுநாள் அதனையறிந்த அரசன் பதைபதைத்துச்சென்று திருமடத்தைநோக்கத் திருமடம் முற்றும் எரிந்து சாம்பராய்க்கிடக்க, அதன்கண் வேகாத ஓர் அறையில்மட்டுஞ் சிவாக்கிரயோகிகள் பழுதுஏதுமின்றித் தவத்தில் அமர்ந்திருக்கக்கண்டு மகிழ்ந்து, அவரைவணங்கினன். பின்னர் அரசன் தேர்ந்துபார்த்துத் திருமடத்தை நெருப்பிட்டுக் கொளுத்தினவர்கள் மணவாள மாமுனியும் அவரைச்சேர்ந்தவர்

களுமே என்பதனை நன்கறிந்து, அவர்களெல்லாரையும் ஓர் அறையிற் புகுத்தித் தீவைத்துக் கொளுத்திவிட்டனனெனச் 'சிவாக்கிரயோகிகள் மாந்மியம்' புகலாநிற்கின்றது. இச்சிவாக்கிரர் 'சிவஞானபோதம்,' 'சிவஞானசித்தியார்' என்னும் அறிவுநூல்கட்குச் சிறந்த உரைகளும் வேறு சில நூல்களும் இயற்றியிருக்கின்றனர்.

இன்னுங், கொப்பூரிலேயிருந்த பிப்பபாச்சையர் என்னும் பெரியார் ஒருவர் தாம் சிவனடியார்களை அமுதுசெய்வித்தபின் எஞ்சிய உணவுப்பண்டங்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு தமது திருமடத்தைநோக்கிச் செல்லுகையில் தெருவின் இருபுறத்துமுள்ள வீடுகளின் திண்ணைகண்மேலிருந்த சுமார்த்த வைணவப் பார்ப்பனர்கள், 'எங்கள் அக்கிரகாரத்தின்வழியே இவ்வெச்சிற்பொருள்களைக் கொண்டுசெல்லல் ஆகாது' என வழிமறிக்கப், பிப்பபாச்சையர் தம்முடைய கைகளால் அவ்வண்டிகளிலிருந்த பண்டங்களை வாரியெடுத்து, அப்பார்ப்பனர்களின் இல்லங்களின்மேல் வீசியெறிய, அவ்வில்லங்களெல்லாந் தீப்பற்றியெரிந்தன. அதுகண்ட அப்பார்ப்பனர்கள் பெரிதும் அஞ்சி அவரைவணங்கி உயிர்பிழைத்தனரெனச் 'சைவபுராணங்' கூறாநிற்கின்றது.

இன்னுங், காசிமாநகரில் மஞ்சிதேவர் என்னுஞ் சைவப்பெரியார் ஒருவர் சைவவுண்மைகளை எடுத்து மக்களுக்கு விளக்கிவருதல் கண்டு மனம்புழுங்கிய வைணவர் சிலர் அவரைத் தம்முடன் வழக்காடும்படி அழைக்க, அவர் 'யான் நுங்களுடன் வழக்காடுவதினும், நுங்கள் பெருமாளே கோயிலினின்றும் எழுந்தருளிவந்து எங்கள் விசுவநாதப் பெருமானை வணங்கும்படி செய்வேன்' என்று மொழிந்து, அங்ஙனமே அங்குள்ளதொரு திருமால் கோயிலினுட்சென்று, திருமாலின் றிருவுருவத்தை அழைக்க, அத்திருவுருவந் தெருவிலுள்ளார் அனைவருங் கண்டு வியப்புறத் தெருவழியே நடந்துசென்று காசிப்பிரான் றிருவுருவின் முன்வீழ்ந்து வணங்கிற்றென அச்'சைவபுராணமே' மீண்டும் நுவலாநிற்கின்றது.

இன்னுந், 'திக்விஜயம் எம்பா வையங்கார்' என்னும் வைணவர் ஒருவர் 'அதர்வசிகாவிலாசம்' என்றொருநூலெழுதிச் சைவத்தைப் புறம்பழிக்க, அதற்கு மறுப்பாக 'அதர்வசிகாவிலாச நிரசனம்' எனப் பெயரிய ஓர் அரியநூலை மைசூர் வீரபத்திரா ராத்யர் என்னுஞ் சிவனடியார் எழுதிவெளியிட்டனர். அதைக் கண்டவுடன் ஐயங்கார் மனம்வெந்து ஆராத்தியர்பாற் போந்து வழக்காட, அவ்வழக்கிலுந்

மருத்துநூற் புலவர் ஒருவர்* நன்கு ஆராய்ந்து எழுதியிருக்கின்றார். இனிய தன்மைகள் உடம்பை இனிது வளர்க்குந் தூயநுண்ணிய வன்பொருள்களைப் பிறப்பிக்கின்றனவென்றும் அவரே பின்னும் விளக்கமாக ஆராய்ந்து உரைக்கின்றார். இவ்வாற்றால் தீயதன்மைகள் வாய்ந்தவர்க்குக் களைப்பும் நோயும் உண்டாதலோடு, எல்லாமுயற்சிகளையும் நிறைவேற்றுதற்குரிய அவரது எண்ணமும் வலிவிழந்து போகின்றது. மற்று, நல்ல தன்மைகளுடையவர்க்கோ மனக்கிளர்ச்சியும் உடம்பு வலிவும் மிகுதலோடு அவரது எண்ணமும் நாளுக்குநாள் வலிவுமுதிர்ந்து உயர்ந்த பல முயற்சிகளை நிறைவேற்றி உலகிற்குப் பெரிதும் பயனுடையதாகின்றது.

இன்னும், அன்பினாலும் இரக்கத்தினாலும் இரத்தந் தூயதாகி உடம்பிலுள்ள கருவிகள் வலிவெய்தவே, இக்கருவிகள் எல்லாவற்றையும் இயக்குதற்கேற்ற அருந்திறல் வாய்ந்த மூளையென்னும் வியத்தகும் உறுப்பானது நுட்ப ஆற்றல் சாலவும் பெருகப்பெற்று விளங்கும். அஃது அங்ஙனம் விளங்குமாயின் அதனைப்பற்றிய மனமும் அம்மனத்தினுள் இயங்கும் உயிரின் எண்ணமும் அளவிறந்த ஆற்றலுடையவாகும்.

இங்ஙனமெல்லாம் எண்ணங்கள் வலுப்படுதற்கு முதல் ஏதுவாய் இருப்பன; அன்பும் அருளும் அருளொழுக்கமுமேயாமென்பது தெளிவாகப் புலப்படுதலால், தம்முயிரின் அகத்தேயுள்ள எண்ணங்களை வெளித்தோற்றுவிக்குங்காலத்து அவற்றை அவ்வுயர்ந்த தன்மைகளின் வாயிலாகவே செல்லவிடுதல் வேண்டும். யாங்ஙனமெனிற் காட்டுதும். ஒருவன் தன் மனைவி மக்கள் உற்றார் பெற்றார் முதலாயினாரையுந் தன்னையும் பாதுகாக்கும் பொருட்டு ஒரு தொழின்முயற்சியிலேனும் அல்லது ஓர் அலுவல் முயற்சியிலேனும் இறங்குங்கால் 'எப்படியாகவேனும் பணஞ்சேர்க்கவேண்டும்' என்னும் ஓர் இழிந்த எண்ணங் கொள்ளாது, 'என் ஆண்டவன் என்னை இவ்வுலகத்திற் பிறப்பித்ததும், என்னோடு இவ்வுயிர்களை மனைவி மக்கள் முதலான உறவினிற் சேர்த்துவைத்ததும் நான் அவர்கட்கும் அவர்கள் எனக்குமாகத் துணைநின்று இருவரும் ஒருங்குசேர்ந்து உலகத்திலுள்ள பல்வகை

* Professor Elmer Gates.

உயிர்கட்கும் பலதிறப்பட்ட உதவிகளைச் செய்தற்பொருட்டேயாம். இவ்வுதவிகளைப் பிறவுயிர்கட்குச் செய்யவும், இவற்றைச் செய்தற்குரிய எங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் இன்றியமையாது வேண்டப்படும் பொருளை எவர்க்குந் தீங்கு நிகழாமல் நான் தேடித்தொகுத்தல் வேண்டும். அங்ஙனந் தேடித்தொகுத்தற்கு ஒரு சிறந்த வழியாக இத்தொழின் முயற்சியில் அல்லது இவ்வலுவல் முயற்சியில் யான் புகுகின்றேன். இம்முயற்சி எல்லார்க்கும் பயனுடையதாய் நடைபெறல்வேண்டும்; இதனால் வரும் வருவாய்ப்பொருள் எனக்கும் என்னைச்சேர்ந்தவர்க்கும் உலகத்தில் அரிய பெரிய நன்மைகள் பலவற்றைச் செய்தற்கும் உதவியாதல் வேண்டும்.' என எப்போதும் எண்ணிவந்தால் அருட்டன்மையின் வழித்தோன்றிய அவ்வெண்ணமானது பெரிதும் வலிவேறப்பெற்று, அவன் மேற்கொண்ட அத்தொழின் முயற்சியினைச் செவ்வைபாக நடைபெறச்செய்து பெரியதோர் ஊதியத்தைத் தரும். அவன் அமர்ந்திருக்குங் கடையைச்சூழக் கட்புலனுக்குத் தென்படாத ஓர் அருளொளி பரவியிருக்கும்; அவனது கடைப்பக்கமாய் வருவாரெல்லாரும் அவ்வருளொளியினால் இழுக்கப்பட்டு அவனிடத்திலேயே கொடுக்கல்வாங்கல் செய்ய விரும்புவர். எண்ணங்களின் தன்மைக்கேற்பவே முகத்தின் வடிவமும் அமைவதால், அருளொளியில் தோய்ந்த அவனது முகங்கவரும் ஆற்றல் மிகுதியும்பெற்று விளங்கும். அவனது முகத்தைப் பார்ப்பவர்க்கெல்லாம் அன்பும் மகிழ்ச்சியும் எழும்.

இனி, எண்ணமானது இங்ஙனம் அருட்டன்மையின் வழித்தோன்றியதற்கு ஏற்பவே, பேசுகின்ற சொற்களும் இனிமை வாய்ந்து உண்மையே கூறுவனவாய் இருத்தல்வேண்டும். நல்லெண்ணமுடையவர்களும் இனிதாகப் பேசுந் திறம் அறியாராயின் அவரெடுத்த முயற்சி நன்கு நிறைவேறாதாகும். இனிமையாகவும் உண்மையாகவும் பேச அறிந்தாலும் எடுத்த பொருளை விட்டு வேறுபலவற்றை ஓயாமற் பேசிக்கொண்டிருத்தலுமாகாது. எடுத்த செய்தியைப் பேசுங்காலுங் கேட்பவர்க்கு மனக்கிளர்ச்சி தோன்றி அவர் கருத்து அதிற் பதியுமாறு பேசுதல்வேண்டும். இவற்றுடன் பேசுகின்ற தனக்குங் கேட்கின்ற பிறர்க்கும் ஏதா

யினும் ஒரு பயன் விளைவதான செய்தியையே எடுத்துப்பேச வேண்டுமல்லாற் பயனற்றதொன்றைத் தொடுதலும் ஆகாது.

ஏனென்றால், இனிமையில்லாத சொற்கள் எவ்வளவு உண்மையுடையனவாயினும் அவை கேட்பவரைத் தம்வழிப்படுத்த மாட்டா; ஏதொரு கெடுதியுஞ் செய்யாதிருக்கையிலுங் கழுதையின் குரலைக் கேட்பவர் ஏன் அருவருப்படைகின்றனர்? ஏதொரு நன்மையுஞ் செய்யாதிருக்கையிலுங் குயிலின்குரலைக் கேட்டு எல்லாரும் ஏன் உவப்படைகின்றனர்? இனிமையாகப் பேசுகிறவர்களைக் கண்டால் எவரும் மகிழ்ச்சியடைகின்றனர்.

இங்ஙனம் இனிமையான சொல் எல்லாரையுந் தன்வழிப்படுத்துமாயினும், அதனைப் பேசுவோர் உண்மையல்லாத செய்திகளை எடுத்துரைப்பாராயின், கேட்பவர் அவர் சொல்லின் பொய்ம்மை யறிந்தவளவானே அவர்மேற் பெரிதும் வெறுப்புக்கொள்வர். எவ்வளவு திறமையொடு கட்டிப்பேசிய பொய்யுஞ் சில நாட்களில் தன் நிலைமையைக் காட்டிவிடும். 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்' என்னும் பழமொழி பொய் நிலைக்கு நில்லாது என்பதை அறிவிக்கின்றதன்றோ? மேலும், பொய் பேசுகிறவர் தாஞ்சொல்லும் ஒரு பொய்யை மறைக்கப் பல பொய்கள் சொல்லவேண்டி வருதலாலும், அங்ஙனஞ் சொல்லுமிடத்து அவர் கூற்றில் ஒன்று மற்றொன்றனொடு மாறுபடாமல் இராதாகலானும் அவர் உள்ளம் அதனைப் பேசுகிறதற்கு முன்னும் பின்னும் பேசும்போதுமெல்லாங் கலக்கத்தையே அடையும்; உள்ளங்கலங்கவே அதனுள் நின்று இயங்கும் எண்ணமுங் கலங்கி வலிவு குன்றிப்போம்.

இனி, இனிதாக உண்மையே பேசுவாராயினுஞ், சிலர், கேட்பவர் நிலை உணராமலும் வாய் ஓயாமலுந் தம்பிறப்புவளர்ப்பு தமது குடும்பச் சீர்கேடுகள் கவலைகள் முதலியவற்றை நீளக் கூறிக்கொண்டே போகின்றனர். இங்ஙனம் பேசுவது பெரிதும் அருவருக்கற்பாலதொன்றாம். உலகத்தின்கண் ஒவ்வொருவருக்குந் துன்பமுங் கவலையும் இருக்கின்றன; இவையில்லாதவர் முற்றத்துறந்த முனிவரேயன்றி வேறெவருமே இலர். இங்ஙனம் இங்குள்ள துன்பங்கள் போதாவென்றோ, இவர்கள் பிறரைச் காணும்போதெல்லாந் தம்முடைய துன்பங்கள் கவலைகளை எடுத்

துரைக்கின்றனர்! தாம் பட்ட இடர்களை நினைவுக்குக் கொண்டு வந்து பேசப்பேச, இவர் மேலும்மேலுந் தமக்கு மனநோயை வருவித்துக்கொள்வதோடு தஞ்சொற்கேட்பாரையும் மனம் உளையச் செய்கின்றனர். இதனாற், பேசுகின்றவர் கேட்கின்றவர் இருவர்க்கும் எண்ணம் நிலைகுலைந்து போதலின், அறிவு வளங்குன்றி அறியாமையும் அதன்வாயிலாக வருந் துன்பங்களும் அவரைச் சூழ்ந்துகொள்கின்றன. இவையிரண்டன் பிடியில் அகப்பட்டுக் கொண்டவர்க்கு ஏதோர் இன்பமுந் தோன்றாதாகலின், அவர் தமக்கு இறைவன் வகுத்த வாழ்நாள் கழியுந்தனையும் இடரையே அடைந்து இறந்து மேலுலகங்கட்குச் சென்றால் அங்கும் நுண்ணுடம்புகளில் துன்பமே உழப்பர். ஆதலாற், பிறர் எவரிடத்துங் கட்டாயமான ஏது இருந்தாலன்றித், தமது துன்பநிலைமையை எடுத்துப்பேச லாகாது. ஏதேனும் ஒரு துன்பத்தில் அகப்பட்டவர் அதனினின்றுந் தம்மைமீட்கும் ஒருவரைக் கண்டால் அவரிடத்து மட்டும் அதனைச் சுருக்கமாகக்கூறி, அது தீரும் வழியைக் கடைப்பிடிக்கலாம். உலகத்திற்குப் பயன்படும் ஓர் அரும்பெரும்முயற்சியை மேற்கொண்டவர் அதற்கு இடையூறுவன வந்து வருத்தினால் அவை நீக்குதற்குரியாரைக் காண நேர்ந்தவிடத்து அவற்றை யெடுத்துச்சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம். இவ்வாறன்றி, வீணே கண்டவரிடத்தெல்லாந் தமது துயரைப் பற்றிப் பேசுதல் சிறிதும் பொருந்தாது.

அவ்வாறாயின், தம்மோடு அளவளாவுவாரிடத்துத் தாம் அடைந்த இன்பங்களைப் பற்றியாவது பேசலாமோவென்றால்; அதற்குத் தக்க இயைபு இருந்தாலன்றி அவ்வாறு கூறுதலும் ஆகாது. ஆழ்ந்தகுளமானது தனது ஆழத்தை எவர்க்கும் எளிதிற் காட்டாமல் அமைதியாய் இருத்தல்போல, அரும்பெருந்தன்மைகளால் நிறைந்து ஆழமான அறிவுடையராய்இருப்பவர் தமதுள்ளத்தில் நிறைந்த செய்திகளை எளிதிற் பிறர்க்குத் தெரிவித்துவிடமாட்டார். ஆழமில்லாக் கால்வாயில் ஓடும் நீர் சலசலவென்றோடிப் பின் இல்லையாதல்போல ஆழ்ந்த நெஞ்சம் இல்லாதவர் தம்மிடத்துள்ளவற்றை யெல்லாம் வெளியே சிதறிக் கொட்டிவிடுவர். ஆகையால்.தம்மையுந் தமதுள்ளத்தையும் அதில் நிறைந்த செய்திகளையுங் காத்துக்கொள்வது எண்ணத்தை வலுப்படுத்திக்

கொள்வார்க்கு இன்றியமையாத தொன்றாகும். உள்ளீடு நிறைந்து உறுதியாயுள்ள இருப்புத்தூண் காற்றுக்கும் மழைக்குஞ் சிறிதும் அசையாமல் நேர்நின்று, தன்மே லேற்றிய பெருஞ்சுமையையும் ஒரு பொருட்படுத்தாமல் ஏற்று நிலைபெறும்; உள்ளீடில்லாப் புழைபான மூங்கிற் கோலோ தன்மேல் வைத்த சிறுசுமையையும் பொறுக்கலாற்றாது சிறு காற்றினாலும் இடைமுறிந்து விழும். இவைபோலவே, தமதுள்ளத்தைச் சிதறவிடாது காத்துக் கொள்ளவல்லவர் எவ்வளவு துன்பங்கள் எவ்வளவு இடையூறுகள் மேன்மேல் வந்து தாக்கினாலும் அவற்றாற் சிறிதுங் கலங்காமல் எத்தனைப் பெருமுயற்சியையும் ஏற்று நடத்துவர்; உள்ளத்தின் வலிமையில்லாதவர்களோ சிறிய துன்பம் வந்தாலும் நினைவு கலைந்து சிறு முயற்சியையுங் கொண்டுநடத்த மாட்டார். ஆகலாற், றாம் அடைந்த இனபங்களையுந் தமக்கேயுரியவான மறைவுகளையும் பிறரெவர்க்கும் புலப்படுத்தாமல் ஒழுகுதல் பெரிதும் நன்மை தருவதொன்றாம்.

மேலும், மக்களில் ஒவ்வொருவர்கருத்தும் ஒவ்வொருவர் நினைவும் ஒரேதன்மையாய் இராமல் பலதன்மையாயும் ஒன்றோடொன்று மாறுபட்டும் இருக்கின்றன. ஒருவர்க்குப் பொருத்தமாகக் காணப்படும் எண்ணமுஞ் செயலும் வேறொருவர்க்குப் பொருத்தமில்லாதனவாய்த் தோன்றும், ஒருவர்க்கு மாறாய்த் தோன்றுவன பிறர் ஒருவர்க்கு நேராய்த்தோன்றும். இங்ஙனம் பலவேறுவகைப்பட்ட மக்கட்பரப்பினிடையேயிருந்து காலங் கழிக்கும் ஒருவர் தமக்கு இனியனவாயும் பொருந்துவனவாயுந் தோன்றிய மறைஇயற் செயல்களைப் பிறர்க்குப் புலப்படுத்துவாராயின், அவருடைய தன்மைக்குப் பெரும்பாலும் மாறுபட்ட நிலையிலுள்ள அம்மற்றவர் அவற்றை இன்னாதனவாயும் பொருந்தாதனவாயும் இருக்கவே கண்டு அவர்மேல் அருவருப்புக் கொள்வர். இதனாலன்றோ இருவர் கலந்து பேசுங்காலெல்லாம் முக்காலே மூன்றுவீசம்பங்கு பிறர் குற்றங்களையே யெடுத்துப்பேசுகின்றனர்? மக்களியற்கையைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பவர்க்கும் மாந்தர்கள் எப்போதும் பிறர் குற்றம் பேசுதலிலேயே மகிழ்ச்சியுங் கிளர்ச்சியும் வாய்ந்தவராயிருக்கின்றார் என்னும் உண்மை தென்படாமற் போகாது. இவ்வளவு தீய நிலைமையிலுள்ள மாந்தர்களின்

நடுவே யிருந்து ஒருவர் தமது உள்ளத்தை பாதுகாத்து வைக்கற்பாலனவற்றை அங்ஙனம் வையாமல் எங்கும் பறையறைந்து தெரிவித்தாற்போல வெளிப்படுக்குவராயின், அவர் அதனால் எத்துணைக் கொடுந்துன்பத்திற்கு உள்ளாகுவர் என்பதனை யாம் விண்டு விளப்புதல் வேண்டா.

அவ்வாறாயின், பிறரொடு பேசுங்கால் உண்மையே பேசுதல் வேண்டுமென முதலிற் கூறிவைத்து, இப்போது அதனைப் பேசுதலாகாதெனக் கிளத்தல் என்னையெனின்; நமது கருத்து அங்ஙனங் கொள்ளப்படுவதாகாது. உலகத்திற்குப் பயன்படும் பொருள்களைப்பற்றி உரையாடுங்காலத்து மெய்யே கூறுதல் வேண்டும்; தம்மைப்பற்றியது ஏதும் வெளிப்படுத்தலாகாதென்பதே நமதுகருத்தாவதாம். அன்றித் தம்மொடு நெருங்கிப்பழகுவார் சிலர் தம்மைஅணுகித் தம் மறைவுகளைச் சொல்லும்படி விரும்பிக்கேட்டால், அவற்றை வெளிவிடாமல் நயமாக மறைத்துக்கொள்ளல் வேண்டுமேயல்லாமல் தமது உண்மையைப் புலப்படுத்தலுமாகாது, அதனின் வேறான பொய்ம்மையைப் பேசுதலும் ஆகாது. இங்ஙனமே எல்லாரிடத்தும் நடந்துகொள்ளல் வேண்டுமோவென்றால், தம்மனங் கலந்து உயிர்க்குயிராய்த் திகழும் நண்பர் ஒருவர் இருவர்பால் தம் உண்மைகளிற் சிலவற்றைத் தக்க ஏது நேர்ந்தவிடத்து வெளியிடுதல் குற்றமன்று; மற்றைக் காலங்களிலெல்லாந் தமது நிலைமையைப் பிறர் அறியாமலிருக்கும்படி ஒழுகுதலே எண்ணவலிவுடையார்க்குச் சிறப்பாவதாம். ஏதுபற்றியெனின், மக்கள் தம்மால் நன்கு அறியப்பட்ட ஒருவரைப் புறக்கணித்துவிடுதல் வழக்கமாய் இருக்கின்றது; ஒருவரிடத்துத் தாம் எதனையேனும் பிழையெனக் கண்டுகொள்வராயின், பின்னர் அவரிடத்து நூறாயிர நல்லியல்பிருந்தாலும் அவற்றைப் பாராட்டமாட்டார்; அவர்பாற் றாங் குற்றமெனக் கண்ட அதனையே இறுக்கமாய்ப் பிடித்துக்கொண்டு மற்ற நலங்களையெல்லாம் இழந்துவிடுவர்; தம்மால் நன்கு அறிந்துகொள்ளப்படாமல் மறைவான நிலைமையில் உயர்ந்து நிற்கும் பெரியோன் ஒருவனைக்கண்டாலோ அவனைப் பெரிதுபாராட்டி வணங்கி அவனுக்கு வேண்டுவனவெல்லாஞ் செய்வர். தம்மிற் சிலர் பலர் அவனை எங்ஙனம் இகழினும் அவ்விகழுரைகளை ஒருபொருட்

படுத்தார். ஆகலால், எண்ணத்தை வலுப்படுத்தி உலகத்திற்கு அரும்பெருநலங்களைச் செய்யவிரும்பும்பெரியோன் எவனுந் தன்னுண்மையை இயன்றவரையிற் பிறர்க்குப் புலப்படாமல் மறைத்துவைத்து ஒழுகுதலே இன்றியமையாக் கடமையாமென்க.

இனித் தன் உண்மையை வெளிப்படுத்தாது தன்னிலையில் திண்ணமாய் நிற்றல்போலவே, பிறர்தமக்கேஉரிய மறைபொருள்களை அறிய விரும்பாமையும் முயலாமையும் அப்பெரியோனுக்கு விழுமிய கடமையாகும். மாந்தருள் ஒவ்வொருவர்க்கும் உயிர்போற் சிறந்தமறைபொருள்கள் சில பல உண்டு. அவற்றை அறிய ஆவலுறுவது எவர்க்கும் பெருந்தன்மை யாகமாட்டாது. ஒவ்வொருவர் மறைவுகளையும் வருந்தி யுணர்தலாற் போதரும் பயன் சிறிதும் இன்றாம். உலகத்தைத் திருத்துதற்பொருட்டு இனிய கட்டுக்கதைகள் எழுதும் புலவனுக்கு மட்டும் இன்னோரன்ன மறைபொருட் குறிப்புகள் பயன்படுமேயல்லது, மற்றையோர் அவற்றையுணர்வது அல்லலுக்கே இடனாய் முடியும். மாண்டுபோனவர் கடல்மணலினும் பலர், மாளப்போபவரும் அங்ஙனமே, மீளப்பிறப்பவரை எண்ணப்புகுதல் கடனீரிலுள்ள அணுக்களைப் பகுத்துக் கணக்கிடப்புகுதலுக்கே ஒப்பாம். இவ்வாறெல்லாம் அளவிடப்படாத வெள்ளக்கணக்காய் மாறிமாறி வரும் மாந்தர் ஒவ்வொருவரின் மறைவுகளையுஞ், சில நாளில் இவ்வுலகத்தை நீத்துப்போகும் ஒருவர் அறிந்துகொள்வதனால் யாது பயன் விளையப்போகின்றது! ஆகையால், நிலையில்லா வாழ்க்கையையுடைய மாந்தர் மின்னல்போற்றோன்றி மறையும் இப்பிறவியில் ஒவ்வொருவர்க்குஞ் சிறப்பாயுள்ள மறை பொருள்களை அறிதற்கு எள்ளளவும் ஆவலுறாதிருக்கக்கடவராக! இங்ஙனந் தமதுள்ளத்தைத் தம்மை நோக்கியும் பிறரைநோக்கியும் வறிதே கலையவிடாது பாதுகாத்து எண்ணத்தை வலிவேறச்செய்தால், அதனால் எல்லாரும் அளவிறந்தநலங்களைப் பெறலாம்.

இங்ஙனம் வீணான செய்திகளைப் பேசாமற் சொல்லடக்கம் வாய்க்கப் பழகிக்கொண்டவர்களும், பிறர்க்குப்பயன்படும் நலங்களை மட்டும் எடுத்துரைக்குங்காற் கேட்பவர்க்கு மனக்கிளர்ச்சி பிறவாமல் வழவழவென்று மொழிகுவராயிற் கேட்பவர் அலுத்துப்போய்விடுவர்; சக்கிமுக்கிக் கல்லில் இருப்புச்சத்தியால்

தட்டியவுடன் அதிலிருந்து தீப்பொறி பறத்தல்போல. அறிவான் மிக்கவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லுங் கேட்போர் உள்ளத்திற் கிளர்ச்சியினை எழுப்புதல் வேண்டும். இஃதெங்ஙனங் கூடுமெனிற்; பேசும் அறிஞர் தாம் பேசத் துவங்கிய பொருளைத் தமதறிவில் தெளிவாய் நன்குணர்ந்திருப்பாராயின், அவர் அதனை எடுத்துப் பேசும் பொழுதுந் தெளிவாய் நன்றாகப் பேசுவர்; கேட்பவரும் அதனைத் தெளிவாய் அறிந்துகொள்வர். இன்னும் அப்பொருளை அவர் அறிவுறுத்திவருங்கால் அதற்குப் பல எடுத்துக்காட்டுகளை உலக வழக்கிலிருந்து எடுத்துக்காட்டுதல் வேண்டும்; தாங் கூறும் பொருளை உலக வழக்கிற் பொருத்திக் காட்டாதவரையிற் கேட்பவர்க்கு அப்பொருள் விளங்காது, விளங்கினும் இன்பந் தோன்றாது. இன்னுந், தாம் வலியுறுத்திப் பேசும் பொருளின் தன்மைக்கு ஏற்ப அவர் பலவகை உருக்கத்துடன் அதனைப் பேசுதல் வேண்டும்; இரக்கமான தொன்றைச் சொல்லும்போது மனம் உருகத்தக்க பாங்காகவும், மகிழ்ச்சிக்கு ஏதுவான தொன்றை விளக்கும்போது உள்ளம் பொங்கத்தக்க வகையாகவும், அருவருக்கத் தக்க தொன்றைக் குறிக்கும்போது அவர்கள்பால் வெறுப்படையத்தக்கவாறாகவும் எல்லாம் பேசப் பழகல் வேண்டும். இவற்றிற்கெல்லாந் தாம் அறிந்தமொழியில் தேர்ந்த புலமையிருக்கவேண்டுமாதலின், தத்தம் மொழிப் பயிற்சியிற் பராமுகமாய் இராமல் அதனைச் செவ்வையாகக் கற்றறிந்து பழகல் அவ்வத் தேயமாந்தர்க்கும் இன்றியமையாத கடமையாம்.

இனிப், பயன்றராத செய்தி கேட்கும்போது எவ்வளவு தித்தித்தாலும், நாட்செல்லச்செல்ல அது பயனற்றதாதல் கண்டு அதனைச் சொன்னவர்பால் எல்லாரும் மனம் உவர்க்கத் தொடங்குவர். அங்ஙனமாயிற், பயன்றரும் பொருள்கள்தாம் யாவையோவெனின்; அவை இம்மையுலகத்தைப்பற்றியனவும் மறுமையுலகத்தைப்பற்றியனவும் என இருபகுப்பில் அடங்கும். இம்மையுலகைப்பற்றியன: உழவு, கைத்தொழில், கொண்டுவிற்றல், இல்லறவியல், அரசியல் என்பன ஆகும்; மறுமையுலகைப்பற்றியன: கடவுள், உயிர், உலகு, வினை, அறியாமை என்பனவும் இவற்றைக் குறித்த ஆராய்ச்சிகளுந், துறவு, இரக்கந், தவம், திருக்கோயில் வழிபாடு, அன்பர்பெருமை, அடியார்ப்பேணல் முதலியனவும்

ஆகும். இவ்விருபகுதியினும் அடங்கும் உயர்ந்த இனிய பயன்படும் பொருள்களையே எடுத்துச் சொல்லிவந்தால், அவற்றைக் கேட்டவர் தமதறியாமை நீங்கப்பெற்று அறிவில் ஓங்கிப் பொலிகுவர்; அவரங்ஙனஞ் சிறக்கவே உலகத்தார்க்குப் பலதிறப்பட்ட நன்மைகளெல்லாங் கிளைப்பதுடன் தமக்கு அறிவுவிளக்கிய அவர்மாட்டுங் கேட்பவர் நன்றிமிக்கவராய் ஒழுகுவர். இதனாற், பயன்படுஞ்சொல்லின் அருமையும், அஃதெல்லாரையுந் தன்வழிப்படுத்தி நன்மை பயத்தலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்குகின்றன அல்லவோ? சொல்லுஞ் சொல்லினுயிராய் நின்று விளங்கும் எண்ணமும் ஒன்றோடொன்று பிரிவறத் தொடர்புபட்டிருத்தலாற், சொல்லைப் பாதுகாத்து வழங்குதல் எண்ணத்திட்பமுடையார்க்கு இன்றியமையாததாமென்பதும், அதனைக்காவாது கண்டவாறு பிதற்றித் திரிதல் எத்துணைப் பெரியார்க்கும் பெருந்துன்பமாமென்பதும் வலியுறுத்துதற்கன்றே ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்று கூறியருளினார். இஃது இத்துணைச் சிறந்ததாயிருத்தல்பற்றியே சொல்லடக்கத்தை இங்ஙனஞ் சிறிது விரித்தெழுதலானேம்.

இனி, அருட்டன்மையின் வாயிலாகவும் இனியசொல்லின் வாயிலாகவும் புனிதமாக்கி வலியேற்றிய எண்ணத்தைச் செய்கையிலும் அங்ஙனமே புனிதமாக்கி உறுதிப்படுத்தல் வேண்டும். மக்களுடைய செய்கைகள் ஒவ்வொன்றும் எண்ணத்தொடு கூடியுங் கூடாமலும் நடைபெறுகின்றன. எண்ணத்தொடு கூடி நடப்பது வலுவுடையதாயிருக்கும், கூடாதது சோர்வுள்ளதாயிருக்கும். ஒருவர் நடந்து செல்லும்போது அச்செயலின்கண் தமது எண்ணத்தைச் செலுத்தி நடப்பாராயின் அந்நடை முறுக்குடையதாயிருத்தலும், அதனை அதன்கட் செலுத்தாமல் நடப்பாராயின் அது தளர்ச்சியுடையதாயிருத்தலுங் கண்டுகொள்ளலாம். முறுக்கான நடை மனவெழுச்சியினைத்தரும்; தளர்வான நடையோ சோம்பலையுங் களைப்பினையும் உண்டுபண்ணும். அங்ஙனமாயின், எண்ணத்தின் சேர்க்கையின்றி உடம்பின்கட் பலவகைச்செயலுங் காணப்படுமோவெனின்; மனத்தின் சேர்க்கையால் அச்

செயல்கள் நடைபெறுதலின், தளர்ந்த செயல்கட்கு எண்ணத்தின் தொடர்பு இல்லையென்க. மனந் தீர்மானஞ் செய்யும் இயல்பின்றி ஒருதொழிலை நடாத்தும் அம்மட்டே வல்லது; எண்ணமோ தீர்மானஞ்செய்யும் இயல்பிற்றாயிருத்தலின் தான் உந்தும் ஒருதொழிலைக் கடைப்பிடியாகவே செய்யும் ஆற்றல் மிக்கது. மேலும், மனம் நுண்ணிய பருப்பொருட்கருவிகளில் ஒன்று; எண்ணமோ பருப்பொருட்கருவிகளிற் சேர்ந்ததன்று, உயிரின் இயல்பாய் அறிவுப்பொருளாய் வயங்குவது. ஆகவே, உயிரின் தீர்மானமான முயற்சியை எண்ணமானது ஏவி முடித்தல்போல், மனமானது செய்து முடிக்கமாட்டாது. உயிர் உடம்பைவிட்டுப் பிரிந்து போனால் எண்ணமும் அதனொடு கூடவேபோம். உயிர் பிரிந்து சென்றால் மனமோ அதனொடுசெல்லாது சிறிது காலம் வரையில் மூளையிலேயே அமைந்துகிடக்கும். உயிர் போனபின்னும் மனம் மூளையில் உண்டென்பதனை எதனால் அறிந்தோமெனின்; பிணமாய்க்கிடக்கும் ஓர் உடம்பின் மூளையிற் பலவிடங்களிலும் மின்னற்கம்பி முனையைவைத்து மின்னை ஏற்றினால், உடனே அவ்வுடம்பிலுள்ள பலஉறுப்புகளும் இயங்குகின்றன. அம்மூளையின் ஓரிடத்தை அதனாற் றொட்டாற் கண் விழிக்கின்றது, வேறோரிடத்தைத் தொட்டால் வாய் திறக்கின்றது, பின்னும் ஓரிடத்தில் அது பட்டால் கை அசைகின்றது, மற்றோரிடத்திற் பொருத்தினாற் கால் அசைகின்றது; இங்ஙனமே அம்மூளையின் ஒவ்வோரிடமும் மின் ஊட்டப்பட்டபோதெல்லாம் உடம்பின்கண் அவ்வவ்விடங்களொடு தொடர்புபட்டுள்ள உறுப்புகள் இயங்குகின்றன. இம்முறையால், உயிர் நீங்கியபின்னும் மூளையின்கண் மனத்தின் சேர்க்கை உண்டென்பதும், அதனால் மனம் நுண்ணியபருப்பொருட் கருவியேயாகுமென்பதும், மின்னலால் உந்தப்பட்டு மூளையின்வழியே எல்லா உறுப்புகளையும் மனம் இயக்குமிடத்துஞ் செத்தபிணத்தின்கண் எண்ணம் என்னும் பண்பு ஒருசிறிதுங் காணப்படாமையான், அது மனம்போற் பருப்பொருளாகாமல் அறிவுப்பொருளான உயிரிற் கூடிய அறிவுப் பொருளேயாமென்பதும் நன்கு பெறப்படும். எனவே, தீர்மானிக்கும் ஆற்றல் வாய்ந்த எண்ணத்தின் வழிவைத்துச் செய்யுஞ் செயல்களை மிக்க வலியினவாதல் தெளியப்படும். ஆக

லாற், காண்டல் கேட்டல் மோத்தல் சுவைத்தல் செய்தல் எழுதல் நடத்தல் ஓடல்முதலான எத்தொழிலைச் செய்தாலும் எண்ணத்தைச் சேர்த்தி அவற்றைச் செய்தல்வேண்டும். பிறர்க்குத் தீங்குதருஞ் செயலும் முழுஎண்ணத்தொடு செய்யக்கூடியதேயாயினும், அது செய்தவனுக்கு முடிவிற் பெருந்துன்பத்தையே தருவதாய் இருத்தலால் அது சிறிதும் ஆகாது; பிறர்க்கு நன்மை ஆவனவற்றை முழு எண்ணத்தோடுஞ் செய்துவரல் வேண்டும்.

வறுமையால் வருந்துமவர்க்கு உண்டியும் உடையும் பொருளும் இயன்ற வரையில் உதவுவதொடு, பிறருதவியை நாடாமல் அவர் தாமாகவே பொருள் தேடிப் பிழைத்தற்கேற்ற வழிவகைகளையும் அவர்க்குக் காட்டல்வேண்டும். இவ்வாறு வறியவர்க்கும் ஏழை எளியவர்க்குந் தள்ளாதவர்க்கும் நொண்டி கூன் குருடு முதலான உறுப்பறைகட்கும் அருள்சுரந்த எண்ணத்தோடும் உதவிபுரிந்து வரின், அருட்செய்கைவழிப்பட்ட அவரது எண்ணம் மிகவும் வலிவேறி அவர்க்கு வசிய ஆற்றலினை அளவின்றி வளரச்செய்யும். அவரைக்கண்டு வணங்காதவரும் வாழ்த்தாதவரும் எங்கும் இரார். அவர்தம் அருள்உதவியானது அவரால் உதவிசெய்யப்பட்டார் எல்லார் உள்ளத்திலும் அன்பையும் அருளையும் எழுப்பும்; பலர் அங்ஙனம் அன்போடும் அருளோடும் நினைக்கும் எண்ணங்கள் அவ்வுதவி செய்தாரைச் சூழ்ந்துகொண்டு மேன்மேலும் அவர்க்குப் பெருங்கிளர்ச்சியினையும் இன்பத்தினையும் விளைவிக்கும்; அவரெடுத்த முயற்சிகள் எல்லாந் தவறாமற் கைகூடும். ஒருவருள்ளத்திற் றோன்றும் அருள் எண்ணத்தின் வலிமையையே அளவிடுதல் அரிது; அங்ஙனமாயிற், பலர் உள்ளத்திற் கிளைத்து ஒன்றாய்த்திரளும் அருளெண்ணத்தின் வலிவை அளவிட்டுரைத்தல் எவராலும் இயலுமோ? எண்ணமானது எவற்றினும் வலிது. உலகத்தில் நடைபெறும் அரும்பெருஞ் செயல்களெல்லாம் எண்ணத்தின் கடைப்பிடியால் வந்தனவேயாம். பல்லாயிரம் மக்களையும் பல்லாயிரஞ் சரக்கு மூடைகளையும் ஏற்றிக்கொண்டு நெடுவழி மிகுவிரைவாய்ச் செல்லும் நீராவி வண்டிகளும் நீராவிக் கப்பல்களும் எங்ஙனந் தோன்றின? நீராவியின் ஆற்றலைக் கடைப்பிடியாய் நின்று கண்டறிந்த

மேலோனது அரியபெரிய எண்ணத்தின் வலியினாலன்றோ? எத்தனையோ ஆயிரம் மைல் தொலைவில் அகன்றிருக்கும் மக்கள் தம் வீட்டுக்குள் இருந்து பேசுவதுபோற் காற்றினுங் கடுகிச் சென்று செய்தி அறிவிக்குங் கம்பிச்செய்தியைக் கண்டுபிடித்த அறிஞனது எண்ணத்தின் ஆற்றலை என்னென்று எடுத்துரைப்பேம்! இன்னும் மாந்தர்கள் செய்யும் பலவேறு கைத்தொழில்களையுஞ் சுருங்கின காலத்தில் அருந்திறமையொடு செய்து முடிக்கும் பலதிறப் பொறிகளையும் பொறுமையோடு அமைத்துக் கொடுத்த நுண்ணறிவினரின் எண்ணத்தின் வலியை எவ்வாறு வியந்துரைப்பேம்! சோறும் நீரும் வேண்டாமல் தம் அறிவைப் பலநாளும் ஒருமுகப்படுத்தியிருந்து அரியபெரிய உண்மை நூல்கள் எழுதிய புலவரது எண்ணத்தின் கட்டுப்பாட்டை எவர்தாம் எடுத்துச் சொல்ல வல்லார்? இங்ஙனமே எண்ணத்தின் வலிவால் இம் மண்ணுலகில் நடைபெறும் அருஞ்செயல்களை விரித்துச் சொல்லப்புகுந்தால் இவ்வேடு இடங்கொள்ளாது. இந்நிலத்தின்கண் உள்ள மக்களின் முன்னேற்றமெல்லாம் எண்ணவலியினாலேயே நடைபெற்று வருகின்றன; எத்தொழிலைப் பார்த்தாலும் அத்தொழிலினுள்ளே எண்ணவலி யிருக்கக் காண்பீர்கள். எண்ணவலியில்லாதார் செய்யும் எதுவுஞ் சிறப்புடையதாகாது. இருளையும் ஒளியையும் ஒப்பிட்டுப்பாருங்கள்! இருள் வந்து மூடுங்கால் எல்லாந் தோற்றம் அற்றுப் போகின்றன; எல்லாவுயிர்களும் முயற்சி குன்றி உறங்கப்போகின்றன. மற்றுக், கதிரவன் ஒளி கீழ்ப்பாற் றோன்றுங்கால் அஃது எவ்வளவு கிளர்ச்சியொடு மினுமினுவென்று மிளிர்கின்றது! அப்போது எல்லாப்பொருள்களும் எவ்வளவு தோற்றப் பொலிவு வாய்ந்து துலங்குகின்றன! அந்நேரத்தில் எல்லாவுயிர்களும் எவ்வளவு மனக்கிளர்ச்சியோடுங் களிப்போடுந் தத்தம் முயற்சிகளைச் செய்யப்புகுகின்றன! புறத்தே காணப்படும் இவ்விருவகைத் தோற்றங்களைப்போலவே, சோம்பலும் எண்ணவலியும் உணரற்பாலனவாம். சோம்பலுள்ளவர்க்கு அறிவுமழுக்கம் அடைந்து போக அவரது அறிவை அறியாமைஇருள் வந்து முற்றுங் கவிந்துகொள்கின்றது; எண்ணவலியுடையவர்க்கோ அறிவொளியானது கிளர்ந்து விளங்கி எல்லாப் பொருள்களின் உண்மையையும் அவர்க்குப் பிழைபடாமல்

அறிவிக்கின்றது. அதனோடு அருள்வழிப்பட்ட எண்ணம் உடையார்க்கு உடம்பின் உள்ளமைந்த கருவிகளெல்லாந் தூயவாய் வலிவேறித் திகழ்தலின், அவ்வகப்பொருள் அமைதிக்கு இசைய அவருடம்பின் முகம் முதலான புறத்துறுப்புகளும் அழகும் அமைதியுங் கவர்ச்சியும் உடையனவாய்க் கிளர்கின்றன. அது மட்டுமோ, அவருடம்பெங்கும் அருளொளி நிறைந்திருத்தலால், அவர் தம் கைகளால் எவரைத் தொட்டாலும் அவர் உடம்பும் உள்ளமுந் தூயவாகப்பெறுவர். அருள் எண்ணத்தால் அருளொளிவண்ணமாய் விளங்கின துறவிகளும் புலவரும் அரசரும் பிறருந் தம்மை அணுகின நோயாளிகள் பற்பலரைத் தம் கைகளாற் றொட்டு, அவர்க்கிருந்த நோயைப் போக்கிய நிகழ்ச்சிகள் வரலாற்று நூல்களிற் கற்றுணர்தலல்லாமலும், இஞ்ஞான்றும் அவர் தம் கைகளாற் றொட்டுப் பலர்க்கு நோய்தீர்த்தலை ஆங்காங்கு நேரிற் கண்டும் உணரலாம். இது மட்டுமன்று; அவர் தம் கைகளிற் றொடாமல் நினைவுமட்டாலும் பலபெரு நன்மைகளையெல்லாம் பலர்க்குஞ் செய்துவருவர்; தமக்கிசைந்தவர் உள்ளங்களிற் றாம் நினைக்கும் நினைவுகளைத் தோன்றப்பண்ணுவர். இப்போது இந்நிலவுலகத்துள்ள மக்களெல்லாரும் பொதுவாக நல்லறிவும் நன்னாகரிகமும் அடைந்துவருதல், மேற்கூறிய மேலோர்கள் இடைவிடாது நினைந்துவரும் நல்லெண்ணத்தின் பயனேயாம். இத்தகைய நல்லெண்ணங்கொண்டு மனத்தாலுஞ் சொல்லாலும் உடம்பாலும் பிறர்க்கு ஆற்றும் உதவிகள், இயல்பாகவே அவற்றைச்செய்வார்க்கும் மேன் மேல் எண்ணவலியினைத் தரும். எண்ணத்தை வலிவேற்றுதற்கு இது மிக எளிதானவழியாம் என்க.

இனித், தமது எண்ணத்தை வலிவேற்றப் பெரிதும் விழைந்திருப்பவர் இன்னும் ஒருமுதன்மையான முறையைப் பின்பற்றி ஒழுகுதல் இன்றியமையாத கடமையாய் இருக்கின்றது. பிறர்க்குதவிசெய்யும் முயற்சியில் நல்லெண்ணத்தொடு முனைந்து நிற்பவர்கள், அம்முயற்சியிலிருக்குங் காலத்தேமட்டும் எல்லாமாந்தரோடுங் கலந்து உறவாடலாம். அம்முயற்சி தீர்ந்து ஓய்ந்திருக்கும் பொழுது எல்லாருடனுங் கலந்திருத்தல் ஆகாது. ஏனென்றால், ஒருவர் ஒருமுயற்சியில் முனைந்திருக்கும் போது அவரது

அறிவாற்றல் மிக நுண்ணியவடிவிற் பரந்துசென்று மற்றவர் எண்ணங்களைத் தன்வழியில் அடக்கி ஆள்கின்றது. அம்முயற்சியை விட்டுத் தாம் ஓய்ந்திருக்கையில் மற்றவருடைய எண்ணங்கள் அவருள்ளத்தை வந்து தாக்குகின்றன. தம்மொடு கூடியிருப்பவர் உயர்ந்தோராயும் அறிவில் மேம்பட்டவராயும் இருந்தால், அவருடைய தூய நல்லெண்ணங்கள் ஓய்ந்திருக்குந் தமதுள்ளத்தில் வந்து பதிந்து தமக்கு மிக்க ஆறுதலையும் இன்பத்தையும் வலிவையும் அறிவுவிளக்கத்தையுந் தரும். அவ்வாறன்றிச், கீழ்ப்படியான நிலையிலுள்ளவர்கள் தம்மைச் சூழ்ந்திருக்க அவரிடையே ஓய்ந்திருப்பவர்கள், அக்கீழோர் நினைக்குந் தீய இழிந்த பயனற்ற எண்ணங்களால் தாக்கப்பட்டு நோயுங் கவலையுந் துன்பமுங் கொண்டு வருந்துவர். நமது கட்புலனுக்குத் தென்படாமல் நுண்ணிய நிலையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிகளை எவரேனுங் கண்ணெதிரே காணக் கூடுமாயின், கீழோர் நடுவில் இருத்தல் எவ்வளவு பொல்லாங்காகும் என்பதனை நன்குணர்ந்து திடுக்கிடுவர்! நமதுடம்பிற் பன்னூறாயிரம் நரம்புகள் அங்கும் இங்குமாய் ஓடி, அகத்தும் புறத்தும் உள்ள எல்லா உறுப்புகளையும் இணைத்து ஒன்றுகூடி நிற்றல்போல, நமதுடம்புக்கு வெளியிலுங் கட்புலனாகா நரம்புபோன்ற நினைவின் ஓட்டங்கள் அங்கும் இங்குமாய் ஓடி நம் எல்லார் மனங்களையும் ஒருங்குபிணைத்து நிற்கின்றன. ஒருவர் நினைக்கும் நினைவுகள் வெளியே நான்முகமாய்ப்பரவி மற்றவர் உள்ளங்களிற் சென்றுபடிய, அங்ஙனமே மற்றவர் நினைக்கும் நினைவுகளும் நாற்புறமும் பரவி ஓடி அவருள்ளத்தில் வந்து பதிகின்றன. வெறுவெளியென்று நாம் பிழைபட நினைக்கும் இடைவெளியின்கட் பலருடைய நினைவுகளுஞ் சன்னல்பின்னலாய்ப் பிணைந்தோடுதலைத் தெளிவுக்காட்சி யுடையார்* எந்நேரமும் நன்றாய்க் கண்டு சொல்லக்கூடும். ஒவ்வொரு நொடியும் நமது கட்புலனுக்குத் தெரியாமல் மிகுந்த வலிவோடும் விரைவோடும் ஓடிக்கொண்டிருக்கும் இந்நினைவோட்டங்களில் நலமுடையன நம்மைவந்தணுகுதற்கு இடந்தருதல் வேண்டுமேயல்லாமல் நலமல்லாதனவுந் தீயனவும் வந்துநெருங்க வழிவிடுதல் ஆகாது. ஆகையால்,

* Clairvoyants.

மேலான பொருள்களை நினைக்க மாட்டாமையொடு, தாழ்ந்தவற்றையுந் தீங்கு பயப்பனவற்றையுமே எந்நேரமும் நினைத்துக்கொண் டிருக்குங் கீழ்மக்கள் பக்கத்தே உயர்ந்தோர் ஓய்ந்திருத்தல் சிறிதும் ஆகாதென்பது இதுகொண்டு இனிது பெறப்படுகின்றதன்றோ?

அங்ஙனமாயின், அவரைவிட்டுப் பிரிந்திருக்கும் வகைதான் யாங்ஙனமெனிற் காட்டுதும். மாந்தர்களைத் திருத்தும் பொருட்டும், அவர்க்கு அறிவு விளக்கும்பொருட்டுந் தாம் முயன்று முனைந்துநிற்றலை விடுத்து, ஓய்ந்திருக்க வேண்டியபோது அவர்கள் தம்மைப் பின்பற்றிவாரமற் சென்று தனிமையான ஓரிடத்திற் றனித்திருத்தல் வேண்டும். தனித்திருத்தற்குச் சிறந்த தனிமையான இடங்கள் யாவையோவெனின், ஊர்க்குப்புறம்பே தொலைவிலுள்ள யாற்றங்கரையில் அடர்ந்த மாந்தோப்பு கமுகந்தோப்புகளும், மலைமேலுள்ள மண்டபங்களும், மலைக்குகைகளும், ஏரிக்கரையில் அமைத்த குடில்களும், மாளிகைகளில் உள்ள தனியறைகளுந் தனிமேயிருந்து அமைதிபெறுதற்கு ஏற்றனவாம். ஏனென்றால், இறைவனால் அமைக்கப்பட்ட உலக இயற்கையின் அழகிய தோற்றங்களையும் அமைதிகளையும் இவ்விடங்கள் நம் கண்ணெதிரே காட்டி, ஓய்ந்திருக்கும் நம்மை நிரம்பவும் ஆறுதல் பெறச்செய்து இன்பத்தைத் தருதலாலும், தாழ்ந்த படியில் உள்ள மக்கள் பெரும்பாலும் இவ்விடங்களை நாடிச்செல்லாமையால் இவை என்றுந் தனிமையாகவே யிருத்தலாலுமேயாமென்க. இவ்விடங்களில் ஒன்றைத் தெரிந்து சென்றவர்கள், அவ்விடத்தின் அழகையும் அமைதியையும் ஆறுதலொடு கண்டு மகிழ்ந்திருந்து, அவ்விடத்தை அமைத்த எல்லாம் வல்ல இறைவனது அருட்டிறத்தை வியந்தபடியே இளைப்பாறுக; உறக்கம் வரினும் அந்நினைவோடு உறங்குக. அங்ஙனம் அவ்விடத்தில் இளைப்புத் தீரும்போது, அல்லது இளைப்புத்தீர உறங்கும்போது, அவரிடத்தில் எல்லாம்வல்ல அருளொளியும் அருள்வலியும் அருளறிவும் வந்துநிரம்பும்; அவரது உயிர் அதனால் அறியாமைக்கறை கழுவப்பெற்றுத் தூய்தாய்ப் பேரின்பத்திற் படிந்திருக்கும்; அவரதுடம்பும், அவ்வுடம்பிலமைந்த அகக்கருவி புறக்கருவிகளுந் தூய்நெருப்பிற் பட்டு மாற்றிய பொன்போற்

2|0493

சுடர்மிகுந்து தூய்தாம். அவ்வாறு அருளிற்றூங்கி எழுந்தபின், வலதுகாலை இடது தொடைமேல் மடித்து ஏற்றி முதுகுந் தலையும் நிமிர இருந்து, உள்ளும் வெளியும் நோக்காது கண்களை அரைப் பார்வையில் நிறுத்திப் பிற்கூறுமாறு மூச்சுவிடப் பழகுதல்வேண்டும்.

வலதுகைப் பெருவிரலால் வலது மூக்கை அடைத்து உள்ளுள்ள நச்சுக் காற்றை இடதுமூக்கால் மெல்லென வெளிவிட்டுக் கழித்துவிடுக. பிறகு வலது மூக்கை அடைத்தபடியே இடது மூக்கால் வெளியேயுள்ள தூயகாற்றை மெல்லென உள்ளிழுக்க. அதன்பின் இடது மூக்கை வலதுகைக் கடையாழிவிரலால் அடைத்துக்கொண்டு உள்ளிழுத்தகாற்றை ஐந்து நொடிப்பொழுது உள்ளடக்கிப், பின்னர் வலது மூக்கைச் சிறுகத்திறந்து அடக்கிய காற்றை வெளியே மெல்லெனக் கழித்துவிடுக. திரும்பவும் அவ் வலதுமூக்கினாலேயே மெல்லென வெளிக்காற்றை இழுத்து முன்போலவே சிறிது உள்ளடக்கியபின்னர் இடது மூக்கைச் சிறுகத்திறந்து அதனை மெல்ல வெளிவிடுக. இங்ஙனம் இடதுபுறத்திருந்து வலதுபுறஞ் சென்று பின்னர் வலதுபுறத்திருந்து இடதுபுறந் திரும்புவது ஒரு மூச்சுப்பழக்கம் ஆகும். இவ்வாறு முதலிற் சிலகாலங் காலை மாலை ஏழுமுறைசெய்க. பின் நாளேற நாளேறப் பத்துமுறை பதினைந்துமுறையாகப் பெருக்கிப் பழகுக. இங்ஙனம் மூச்சுவிடும் பழக்கத்தின் மேன்மையையும் விரிவையும் நூறு ஆண்டு உயிர்வாழ்க்கை என்னும் எமது நூலிற் கண்டுகொள்க. இன்னும் இதன் நுணுக்கங்களை ஒரு மெய்க்குருவின்வழியே தெரிந்து பழகுதலே நலம் உடைத்தாம்.

இவ்வாறு மூச்சுவிடும் முறையை ஓர் ஒழுங்குபடுத்திக் கொண்டால், உடம்பினுள்ளியங்கும் மின்னல் ஓட்டம் ஓர் ஒழுங்குபட்டு நடக்கும்; அதனால், இரத்தமும் மற்றைக் கருவிகளுந் தூயவாகி, நோய் அணுகாமல் நுணுக்கமாய் வலிவேறி வயங்கும்; அதனால், நினைவுக்கருவியான மனம் தூயதாம்; அதனால், உயிரும் உயிரின் எண்ணங்களுந் தூயவாய் ஆற்றல் நிரம்பி விளங்கும். இங்ஙனம் விளங்குங்காலத்து எண்ணியது எண்ணியபடியே கைகூடும். இந்நிலையில் எண்ணத்தைச் செலுத்துமாறு யாங்ஙனமெனின்; மூச்சுப்பழக்கஞ் செய்தபின்னர், அப் பழக்

மேலும் அவள்கூறவேண்டுவதைக் கூறும்படி கட்டளையிட்டார். அங்ஙனமே, கானத்தோகை தன்னுள்ளத்துள்ள செய்திகள் அவ்வளவுங் கண்ணீர் ஒழுகியபடியே திறந்து சொல்லினள். அம்முனிவர் அவைகளைக் கேட்டதும் வாய்திறந்து அழாமல் இருக்கமுடியாதவரானார்; அவர் அழுதலவகையில் அவர் இருந்த இருக்கையும் அசைந்துவிட்டது. அவரது துயரத்தைக் கண்ட கானத்தோகை, நற்குணத்திற் சிறந்த அம்முனிவர் தன்பாலெழுந்த இரக்கமிகுதியாலுந், தன் குற்றத்தின் கொடுமையை நினைந்ததாலுமே அங்ஙனம் பெருந்துயர் கூரலானார் எனக் கருதித், தான்செய்த தீவினைகளுக்குக் கழுவாயாக இனித் தான் கன்னிப்பெண்ணாக இருந்துவிட உறுதி செய்திருப்பதே தான் தேவமணியை நினைந்து நோற்கும் நோன்பாகுமென அவர்க்கு எடுத்து மொழிந்தாள்.

இதற்குள், தமது மனத்துயரை ஒருவாறு அடக்கி அமைதிப் படுத்திக்கொண்ட அம்முனிவர், தாம் வழங்காதுவிட்ட தமதுபெயரை இப்போது அம்மங்கை கூறக் கேட்டதிலிருந்தும், பிறனொருவனுக்கு உரியவள் ஆனாள் என்றே தாங் கருதிவிட்ட அவ்விளம்பெண் அங்ஙனம் ஆதற்கு ஒருசிறிதும் உள்ளம் இசையாளாய்த் தான் காதலித்த காதலனிடத்திலேயே கட்டுப்பட்ட மனவுறுதி வாய்ந்தவளாயிருத்தலை அறிந்ததிலிருந்தும் நெஞ்சம் நெக்குருகி மீண்டுங் கண்ணீர் வடிப்பாரானார். இங்ஙனம் அம்முனிவர் தாம் துயர்கூர்ந்து கண்ணீர்சிந்திக் கலுழ்சற்கிடையே, அம்மாது ஆற்றொணாத் துயர்மிக்கு அழுதலைக்கண்டு, அதனைத் தடுக்குமளவுக்குத் தம்மை அவர் தேற்றிக்கொண்டு, அம்மங்கை தானுந் தன்னைத் தேற்றிக்கொள்ளுதல் வேண்டுமென்றும், அவள் செய்த பாவம் மன்னிக்கப்பட்டதென்றும், அவள் அஞ்சிக்கலங்கியவாறு அவள் செய்த குற்றம் அத்துணைப்

பெரிபதன்றென்றும், அளவுக்கு மிஞ்சி அவள் உளம் வெந்து துன்பறுதற்கு இடந்தரல் ஆகாதென்றும் அடுத்தடுத்து ஆறுதல் பகர்ந்தார். அதன்பிறகு அவர் முழுதும் ஆறுதல் எய்தினவராய், அம்மாதுக்குப் பாவவிடுவிப்பு மொழிந்து, மறுநாள் அவள் தம்மிடம் வந்தால், அவள் அப்போது மேற்கொண்ட கடவுள் வழிபத்தில் நிலைப்பதற்கு வேண்டுவன கூறி அவளைத் தாம் அதில் வைத்து, அதில் அவள் ஒழுகவேண்டு முறைகளைக் கற்பிப்பதாகவுஞ் சொல்லிவிடுத்தார்.

அங்ஙனமே கானத்தோகை மறுநாட் காலையிலும் அம்முனிவர்பாற் போந்து தான் துறவுநிலையை மேற்கொள்ள விரும்புவது தெரிவித்தாள். அம்முனிவர் தமதுள்ளத்தைச் சிறந்த எண்ணங்களாலும் நினைவுகளாலும் அரண் செய்துகொண்டு, அம்மங்கை தான் மேற்கொள்ள விழைந்த துறவொழுக்கத்தில் அவளை நிலைப்பித்தற்குத் தம்மால் எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவுஞ் சொல்லி, அவளதுள்ளத்திற் காரண மின்றியே உண்டான அச்சங்களையுங் கலக்கத்தையும் ஒழித்திட்டார். அவள் துறவுநிலையை மேற்கொண்டபின் அவட்குத் தாங் கூறவேண்டும் அறிவுரைகளை அவ்வப்போது கூறி வருவதாகவும் உறுதிமொழிபுகன்றார். கடைப்படியாக அவர் அவளைநோக்கிக் கூறியதாவது: ‘‘நங்காய் நாம் கைக்கொண்ட இத்துறவு நடையின் முறைப்படி, யான் நின்னை அடிக்கடி பார்த்துப்பேசுதல் ஆகாது. ஆனாலும், யான் இறைவனை வழுத்தும் நேரங்களில் நினக்கும் அவன் தனதருளை வழங்குமாறு வேண்டுவேனென்றும், நீ நடந்துகொள்ளவேண்டு முறைகளை அடுத்தடுத்துக் கடிதவாயிலாக உனக்கு அறிவித்து வருவேனென்றும் நீ திண்ணமாய் நம்பியிரு. நீ மேற்கொள்ளத் தீர்மானித்த விழுத்தகுநிலையைக் களிப்புடன் கடைப்பிடித்திரு; நீ உலகத்தில் வேறெந்தவகையிலும் அடையமுடியாத ஒரு

மனவமைதியையும் மனநிறைவையும் நீ அதனால் விரைவில் அடைவாய்!’’

அங்ஙனம் அப்பன் பிராஞ்சு எடுத்துரைத்த அருண்மொழிகள், கானத்தோகையின் உள்ளத்தைக் கிளர்ச்சி பெறச்செய்தன; ஆகவே, அவள் மற்றைநாட் காலையிலேயே துறவுநிலையை மேற்கொண்டாள். அவள் அந்நிலையை அடைதற்குச் செய்த தவவினைகள் நடந்தேறிய பின், அவள் அக் கன்னிமாடத்தில் தனக்கென வகுக்கப்பட்ட ஒரு தனியறையுட்சென்று தனியிருந்து நோற்கலானாள்.

புதிது துறவுபுகுந்த இம்மாதர்க்கும் அப்பன் பிராஞ்சுக்கும் இடையே நிகழ்ந்த செய்தி முற்றும் அக் கன்னிமாடத்தின் தலைவியாரான துறவம்மையார்க்கு அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளில் அத்தலைவியார் அப்பன் பிராஞ்சு எழுதிய கடிதம் ஒன்றைக் கானத்தோகையின் கையிற்கொடுத்தனர். அதை அவள் பிரித்துப்பார்க்க, அதிற் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:

‘‘நங்காய், நீ இப்போது புகுந்திருக்குந் துறவுநிலையில் நீ அடைய இருக்கும் மகிழ்ச்சிக்கும் ஆறுதலுக்கும் முதற்படியாகை யான் உனக்கு அறிவித்துக்கொள்வது யாதென்றால், இறந்துபோனானென்று நீ நினைந்து மிகவுந் துயர்கூருந் தேவமணி யென்பான் அங்ஙனம் இறந்துபோகாமல் இன்னும் உயிரோடிருக்கின்றான் என்பதேயாம். நீ நின்மனத்திலுள்ளதை எந்த முனிவர்க்குத் திறந்துசொல்லினையோ, அவரே நீ நினைந்தழும் அந்தத் தேவமணியாக முன்னொருகால் இருந்தனர். நாம் ஒருவரையொருவர் காதலித்த காதலானது, காதற்கூட்டங் கைகூடியிருந்தாற் பயக்கும் மகிழ்ச்சியைவிட, அது கைகூடாமற் போனதனாற் சாலச்சிறந்த மகிழ்ச்சியைப் பயவாநிற்கின்றது. நாம் விழைந்தவாறே நிகழாதொழியினும், இறைவன் திருவருளானது நமது நன்மைக்காகவே நம்மை இந்நிலையில் நிறுப்பித்தது. நின்காதலன் தேவ

மணி இறந்துபோனதாகவே நீ இப்போதும் எண்ணிக் கொள். ஆயினும், நின்பொருட்டு இறைவனை வேண்டுதலில் வழுவாத அப்பன் பிராஞ்சு என்பான் ஒருவன் உளன் என்பதில் உறுதியாய் இரு. பிராஞ்சு"

இக்கடிதத்தின் கையெழுத்தும் அதில் அடங்கிய செய்தியும் ஒத்திருத்தலைக் கானத்தோதை கண்டுகொண்டாள். தான் தன்னுள்ளத் துள்ளதைத் திறந்துசொல்லியக்கால், அம்முனிவர் ஆறுதலுரை பகர்ந்த குரலொலியும், அவர் அப்போதடைந்த பெருந்துயரும், அவருடைய மற்றை நடைகளும் அவர்தாம் தான் காதலித்த தேவமணியென்பதனை அவட்கு நன்கறிவித்தன. அதனால், அவள் இன்பக்கண்ணீர் வடித்தழுதபின், "என் தேவமணி இன்னும் உயிரோடிருக்கிறார் என்பதே எனக்குப்போதும். இனி, நான் மனவமைதியுடனும் உவகையுடனும் என் காலத்தைக் கழிப்பேன்" எனத்தனக்குள் தீர்மானஞ் செய்துகொண்டாள்.

தென்னமரம்

தென்னமரமானது நீர்வளம் நிலவளங் கெழுமிய மருதநிலத்தின்கண்ணேதான் மிகுதியாய் வளர்ந்து பல பயன்களை அளிக்கின்றது. சிறுபான்மை கடலோரமாக மணல்அடர்ந்த நெய்தல் நிலத்திலும் இதனைவைத்துப் பயிராக்குகின்றார்கள். இனி, மலையடுத்த நிலங்களிலும் இப்போதிது பயிர்செய்யப்படுகின்றது. என்றாலும், இது மருதநிலத்தின்கட் கொழுமையாகவளர்ந்து நீண்டநாள் உயிரோடிருந்து பெரும்பயன் றருவதுபோல் மற்றை நிலங்களில் இஃது அத்துணைக் கொழுமையாக வளர்ந்து நீண்டகாலமிருந்து பயன்றருவதில்லை. இன்னுஞ், சூடுங் குளிர்ச்சியும் ஒத்த நிலைமையிலுள்ள இத்தென்னிந்திய

நாட்டில் இஃதோங்கிவளர்ந்து பெரிதும் பயன்றருமாறு போற், பனிமிகுந்த இமயமலைமேலும், இமயமலைச்சாரலிலுள்ள வடநாடுகளிலும், நம் ஆங்கில அரசினர் வாழும் பிரித்தானியதேயத்திலும், அதனையடுத்துள்ள ஐரோப்பிய நிலப்பகுதிகளிலும் இது பயிராவதேயில்லை. ஆனாலும், ஆங்கிலமக்கள் தம்மூர்க்குப் புதுமையான இத் தென்னமரத்தைத் தம்மவர்க்குக் காட்டல்வேண்டிக், கண்ணாடிவீடுகள் அமைத்து அவற்றினுள்ளே இதனை வளர்த்துக் கண்காட்சிக்காக வைத்திருக்கின்றார்கள். அவ்வாறவர்கள் பேருழைப்பெடுத்துப் பெருஞ்செலவு செய்து இதனைப்பயிராக்கியும், இஃது அக்கண்ணாடி வீட்டுட் குறுகிவளர்ந்து, வெறுங்காட்சிக்குப் புதுமையாய்க்காணப்படும் அவ்வளவேயல்லாமற், பூத்துக்காய்த்துப் பயன் அளிப்பதேயில்லை.

இனி, இத்தென்னாட்டிற் பயிர்செய்யப்படும் இடங்களிலும், இஃது ஆங்காங்குள்ள நிலத்தின்றன்மை நீரின்றன்மைகளுக் கேற்பச் சுவை வேறுபட்ட காய்களையுடையதாயிருக்கின்றது. மருதநிலத்தென்னைகள் தருந் தேங்காய்களின் நீரும் பருப்பும் நடுத்தரமான இன்சுவையும் மணமும் வாய்ந்திருக்கின்றன; நீர்வள நிலவளங்களிற்சிறந்த சோழநாட்டுத் தேங்காய்கள் இத்தன்மைகள் உடையனவே யாகும். மலையாளநாட்டுத் தேங்காய்கள் இனிப்புடையனவாய்க் காணப்படினும், அவற்றினின்றெடுக்கப்படும் பால் மொச்சைநாற்றம் வீசி வயிற்றைக் குமட்டுகின்றது. நெய்தல்நில மணல்வெளிகளிற் பயிராகுந் தென்னைகளின் தேங்காய் நீரும் பருப்பும் உப்புக் கரிக்குந் தன்மையவாய் இருக்கின்றன. யாம் இருக்கும் இப் பல்லவபுரம் மலைசூழ்ந்துள்ளதோர் இடமாகலின், இதன்கண் அமைத்துள்ள எமது தோட்டத்திற் பயிராகியிருக்குந் தென்னைகளின் காய்கள் தித்திப்புச்சுவை மிகுந்தனவாயிருக்கின்றன; மணமும் இசை

வானதாகவே யிருக்கின்றது; ஆயினும், இவை மிகுதியாய்க் காய்ப்பதில்லை; எருப்பெய்து பலகாலும் நீர்பாய்ச்சிச் சிரைகழித்துச் செய்யுஞ் செய்நேர்த்தியினளவுக்குத் தக்கபடிதானும் இவை பெரும்பயன் அளிப்பதில்லை, சிறுபயனையே தருகின்றன. மணற்பாங்கான இடங்களிற் பயிராகுந்தென்னைகளோ குலை குலையாய்க் காய்க்கின்றன; ஆனால், அவற்றின் இளநீரும் அதன்கண் வழுக்கையும் முற்றின நெற்றின்பருப்பும் அத்துணை இன்சுவை வாய்ந்தனவாய் இல்லை. அது நிற்க.

இனி, இத்தென்னாட்டின் தெற்கே உலவும் இந்திய மாகடலின் கண்ணவான இலங்கை, நக்கவாரம், சுமத்திரா, சாவகம் முதலான தீவுகளில் தென்னமரங்கள் பெரும்பெருந் தோப்புகளாக வைத்துப் பயிராக்கப்படுகின்றன.

தென்னைகள் ௬௦ அடிமுதல் 100 அடியுயரம் வரையில் வளரும். இவற்றின் அடிமரத்திற் கிளைகளேனுங் கொப்புகளேனும் உண்டாவதில்லை, இஃது ஒரே நீளமாகவே வளர்ந்தோங்குகின்றது. இதன் உச்சியிற் பன்னிரண்டுமுதற் பதினைந்துவரையிற் பச்சோலை மட்டைகள் கிளைத்து நாற்புறமுங் கவிந்து விளங்குங் காட்சி, அது தன்றலைமேலுள்ள பசிய நெடுங்கூந்தலை அவிழ்த்து விட்டு மெல்லிளந் தென்றலில் அதனை ஈரம் புலர்த்துவது போற் றோன்றுகின்றது. இதன்கண் ஒட்டியிருக்கும் பச்சைமட்டைகள் ஒவ்வொன்றும் பசுமைமாறிப் பழுத்துப் பற்றுவிட்டுக் கீழ்விழுதற்கு ஆறு திங்கள் செல்கின்றனவென்று பயிர்நூல்வல்லார் கணக்கெடுத்திருக்கின்றார்கள். அதன்படி ஒரு கணுச்சுற்றில் ஒட்டியிருக்கும் இவ்விரண்டுமட்டைகள் ஆறுதிங்களிற் கீழ்விழப், பிறகு வெறுமையாய்க் காணப்படுங் கணுச்சுற்றுகளை எண்ணிக் கணக்கெடுத்து, ஒவ்வொரு தென்னமரத்தின் வாழ்நாளையும் உறுதிப்படுத்தல் கூடுமென்று சொல்லுகிறார்

கள். இக்கணுச்சுற்றுகளின் உதவிகொண்டுதான் கள்ளிறக்குஞ் சான்றாருந், தேங்காய் பறிக்குங் குடியானவர்களுந் தென்னமரங்களின்மேல் ஏறுகிறார்கள். இவையில்லையேல், நீளமான ஏணிகளின் உதவிகொண்டன்றி வழுவழுப்பான இம்மரத்தின்மேல் ஏறுதல் இயலாது

இனித், தென்னைகள் பூக்குங்காலம் வருங்கால் மற்றை மரங்களைப்போற் பூவெடுப்பதில்லை. முதலிற், பச்சைப்பசேல் என்ற நிறத்துடன் திரண்டு நீண்ட பாளைகளை மேல்உள்ள மட்டைகளின் அடியிலிருந்து கிளைத்தெழுகின்றன. தாமரைக் குளங்களின் கரைமேல் நிற்குந் தென்னைகளின் நிழல் அக்குளநீரிற் றோன்றுங்கால், அவற்றின் உச்சியில்உள்ள முழுப்பாளைகளின் நிழல் அந்நீரின்கண் உலவும் பெரிய வரால்மீன்களையே ஒத்திருக்கின்றனவென்று தமிழ்ப்பாவலர் ஒருவர் பாடியிருக்கின்றார். பிறகு, சிலநாட் சென்றபின் இப்பாளைகள் வெடிக்க, இவற்றின் உள்உள்ள பூக்கள் தூவெண்ணிறத்தினவாய் வெள்ளிய கவரிபோல் அலர்ந்து விளங்குகின்றன; பூநரம்புகளின் நெடுக வெள்ளிய முத்துப்போன்ற இளம் பிஞ்சுகள் தோன்றிச் சிலநாட் சென்றபின் பச்சிளங் குரும்பைகளாக மாறுகின்றன; மரத்தின் ஊட்டத்திற்கும் வலிவுக்குந் தக்கபடி குரும்பைகள் உதிராமற்பெருக்கின்றன; மரம் அவையிரண்டிலுங் குறைவுபடுமாயிற் குரும்பைகள் பெரும்பாலும் உதிர்ந்துபோக, எஞ்சிய மிகச்சில குரும்பைகளே பெருத்து இளநீராகவும், பின்னுஞ் சில திங்கள் கழித்துத் தேங்காய்களாகவும், மற்றுஞ் சில திங்கள்கழித்து மட்டைகள் காய்ந்துபோன நெற்றுகளாகவும் முடிவுபெறுகின்றன. தேங்காய்களாகவும் நெற்றுகளாகவும் முதிர்ந்தவைகள் தாமே கீழ்விழுகின்றன. ஆதலாற், பழுத்த மட்டைகளும் முற்றினநெற்றுகளும் உடைய தென்னமரங்களின்கீழ் ஆடவரும் பெண்டிருஞ் சிறாரும் அமர்தலும் இயங்குதலும் ஆகா.

தென்னந்தோப்புகளின் பக்கத்தே கமுகஞ்சோலைகளும் வாழைத்தோட்டங்களும் அவற்றையடுத்து வயல்நிலங்களும் அமைந்திருத்தல் செழுமை மிக்க சோழநாட்டிலே இன்றுங் காணலாம். இந்நிலையில் தென்னைகளில் முற்றிப்போன தேங்காய்களும் நெற்றுகளுங் கீழ் உதிர்தலால், அவை அடுத்துள்ள பாக்குமரங்களிற் றாக்கி அவற்றின் பாளைகளை முறித்துவிடுதலும், வாழைமரங்களில் மோதி அவற்றின் தாறுகளைக் கிழித்துவிடுதலுமாகிய நிகழ்ச்சிகள் அங்குப் பலகாலுங் காணப்படுகின்றன. இற்றைக்கு ஆயிரத்தெழுநூறாண்டுகட்கு முன்னிருந்த மாணிக்கவாசகப் பெருமான் தாம் அருளிச்செய்த திருச்சிற்றம்பலக் கோவையாரிற் போந்த,

“தெங்கம்பழங் கமுகின் குலைசாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத்தொளிர் குளிர்நாட்டினை நீ உமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச்சிறுமினந் தேமொழியே”

என்னுந் திருப்பாட்டில் இத்தகைய இயற்கை நிகழ்ச்சி சோழநாட்டிற் பலகாலும் நிகழ்தலைத் தாங் கண்டு கூறுதல்கொண்டு, இரண்டாயிர ஆண்டுகட்கு முன்னமே சோழமாநாடானது தென்னந்தோப்புகளுங் கமுகஞ்சோலைகளும் வாழைத்தோட்டங்களும் இடையிடையே குழுமிய வயல்நிலங்கள் வாய்ந்திருந்தமை தெற்றெனப் புலனாகின்றது.

இனி, நிலவளம் நீர்வளம் இன்மையினாலும் வேண்டுமளவு எருமுதலான ஊட்டந் தரப்படாமையினாலுஞ் சில பல தென்னைகள் அருமையாய்க் காய்க்குங் காய்களுஞ் சூம்பிப்போதலுடன் உள்ளீடில்லாச் சொத்தைகளாகவும் பயன்படாதொழிகின்றன. இங்ஙனஞ் சொத்தையாய்ப்போகுந் தேங்காய்களைத் தேரைமோந்தவையென்று குடியானவர்கள் கூறுகின்றார்கள். தேரையென்பது தேங்காய்க்குவருஞ் சொத்தைநோய் என்பது தெரி

தன் பயனைத் தராமற் போகாதென்று இப்போது நம்பத் தலைப்படுகின்றேன். மேலுலகத்துள்ள ஒருதெய்வத்தின் வேண்டுகோள் மொழியை இந்நிலவுலகத்தில் வெளியிட்டுச் சொல்லும் ஒருயிரின் குரலொலி ஒன்று உண்டாயின் அஃது உங்களுடையதேயாகும்!” என்று மெல்லச் சொன்னாள்.

இவ்வாறு சொல்லிக் கொண்டே நிகழ்கலை குமுதவல்லியின் கையைப்பிடித்து அவளை அப்பாற் கொண்டுபோகலானாள். அந்நேரத்தில் நீலலோசனன் முன்னேறி வந்து நாகநாட்டரசியை நோக்கிப் பேசுங் குறிப்புடையனாதலைக் கண்டு நிகழ்கலை துடுக்காகக் கைக்குறிசெய்து அவன் இருந்த இடத்திலேயே வாய்பேசா திருக்கும்படி குறிப்பித்தாள். அவன் அவள் சொல்லுக்குக் கீழ்ப்படியாதிருக்கத் துணியவில்லை: ஏனென்றால், அத்துணை வணக்க வொடுக்கத்தையும் அச்சத்தையும் விளைவிக்கும் இயல்பு வாய்ந்த அந்நிகழ்ச்சியின் இடையே, அதனையெல்லாம் நடத்தும் உரிமை யுடையவளாய்க் காணப்பட்ட முன் அறிமுகம் இல்லாத அப்பெண் காரணமில்லாமலே அச்சமூட்டும் ஒருதலைமையினைச் செலுத்தலானாள்.

கொள்ளைக்கார நல்லானென்றே தான் கருதிவிட்ட நீலலோசனன் மேற் குமுதவல்லி ஒரு முறையேனும் தன் பார்வையைச் செலுத்தவேயில்லை. அப்பெருமாட்டி இங்ஙனந் தன்னிடத்து முற்றுங் கணிசக் குறைச்சலாய் நடந்ததைப் பற்றி நீலலோசனன் மிகுந்த வருத்தமும் அதைப்போலவே மிகுந்த வியப்புங் கொள்ளப் பெற்றான். இத்தகைய நடக்கையின் காரணம் இன்னதென்று புலப்படாமையொடு, மலைநாட்டு வணிகரின் வீட்டின்கண் தோழமை கொண்டிருந்த தன்னை அவள் சடுதியிற் பிரிந்து போன மருமத்தையும் இது மிகுதிப்படுத்தியது. குமுதவல்லியையுஞ் சுந்தராம்பாளையும் நிகழ்கலை அவ்வறைக் கதவண்டை அழைத்துப்போனாள்; அவர்கள் ஒருமுறையேனும் பின்னே திரும்பிப் பார்க்கவில்லை: மென்பட்டுத் திரை அப்பால் இழுத்துவிடப் பட்டது. கதவு திறக்கப்பட்டது, அவர்கள் தளத்தின்மேல் வந்து நின்றார்கள்.

“இப்போது பெருமாட்டி, நீங்கள் தங்கியிருக்கும் விடுதியின் தோட்டவாயிலுக்கு மறுபடியும் உங்களை அழைத்துச் செல்வேன். அவ்விடத்திற்கு நீங்கள் சென்றபின் அல்லாமல், சிறிதுநேரமேனும் நிகழ்கலையின்மேல் நீங்கள் நம்பிக்கையற்றதைப் பற்றி நுங்களுக்கு உண்டான வருத்தத்தை நீங்கள் அவளுக்குத் தெரிவிக்கவேண்டாம்.” என்று நிகழ்கலை மொழிந்தனள்.

என்றாலுங் குமுதவல்லி தனது வருத்தத்தை உடனே அவளுக்கு எடுத்துரைத்திருப்பாள்; ஆனால், அவ்வறிவினளோ அந்தக் காப்பிரிப் பெண் தளத்தின்மேல் வைத்துவிட்டுப்போன விளக்கைக் கையிலெடுத்

துக்கொண்டு, அவளை மெத்தைப்படியின்கீழ் மிகவுஞ் சுருக்கென வழி நடத்திக்கொண்டு சென்றாள். திகழ்கலை, குமுதவல்லி, சுந்தராம்பாள் என்னும் மூவர் முகங்களின்மேலுந் திரும்பவும் முக்காடு இழுத்துவிடப்பட்டன. தலைவாயிலின் உட்புறத்தே விளக்கு வைத்துவிடப்பட்டது; பின்னுஞ் சிறிதுநேரத்தில் அவர்கள் தெருவிற் சென்றபோது அவர்களுக்குப்பிறகே வாயிற்கதவு மூடிக்கொண்டது. வாய்பேசாமலும் பாதுகாப்போடும் அவர்கள் வழி தொடர்ந்து சென்றார்கள். மனோகரது விடுதியின் தோட்டவாயிலண்டை வந்ததுங் குமுதவல்லி திகழ்கலையை நோக்கி, “யான் சிறிதுநேரம் வரையில் உன்னைப்பற்றி நினைக்க வேண்டியதாயிருந்த தீய ஐயுறவின்பொருட்டு என் அகத்துண்டான மிக்க துயரத்தைத் தெரிவிப்பதற்கு இதுதான் இயைந்த நேரமாயிற்று. உனது குத்துவாளைத் திரும்பவும் நீயே எடுத்துக்கொள்.” என்று புகன்றாள்.

திகழ்கலை தனது குத்துவாளைக் குமுதவல்லியின் கையிலிருந்து வாங்குகையிற், “பெருமாட்டி, இனியொருகால் திரும்பவும் நாம் எதிர்ப்படுகுவமாயின், இவ்வறிவோளிடத்துத் தாங்கள் நம்பிக்கை உடையவர்களாயிருப்பீர்கள். இப்போது விடை கொடுங்கள்!” என்று கூறினாள்.

“ஒருமொழி, திகழ்கலை—ஒருமொழி!” என்று குமுதவல்லி விரைந்துகூவிப் பின்னும், “சில செய்திகளைப்பற்றி நீ நிரம்பவுந் தெரிந்தவளாகக் காணப்படுகின்றாய்: உனக்கு அவற்றை நன்றாய் அறிவிக்கக் கூடியவர்களுடன் நீ இருக்கின்றனை. எனக்குச்சொல், நான் உன்னைக் கெஞ்சுகின்றேன்—இறந்துபோன மீனம்பாள் முன்னொருகால் எனக்குச்செய்ய நினைத்த தீது யாது?” என்று வினவினாள்.

“பெருமாட்டி, எனக்குத் தெரியாது,” என்று திகழ்கலை விரைந்து விடை கூறிக், கடிதிற் றிரும்பிச் சென்று ஒரு நொடியிற் கட்புலனுக்கு எட்டாமற், சூழ்ந்திருந்த இருளில் மறைந்து போனாள்.

“அன்பிற்கினிய பெருமாட்டி, நாம் செவ்வனே வந்து சேர்ந்ததற்காக நம்பெருமானை வழுத்துவாமாக!” என்று சுந்தராம்பாள் களிப்புமிக்க குரலிற் கூறினாள்.

“ஆம்—நம் இறைவனை வாழ்த்துவாமாக!” என்று நாகநாட்டரசி இசைந்து கூறினாள்.

பின்னர் அவர்கள் மறைவுவாயிலின் வழியே உள்நுழைந்து, தோட்டத்தைக் கடந்து, தத்தம் அறைகட்குச் சென்றார்கள். அங்கே ஞானம்பாள் அவர்களை வரவேற்கும்பொருட்டு மிகுந்த களிப்பாற் குதித்தோடி வந்தாள்; ஏனெனில், அவர்களது வருகையானது, நம்பிக்கையுள்ள அப்பெண் கொண்டிருந்த அளவற்ற கவலையையுந் திகிலையும் ஐயுறவையுந் தீர்த்தது.

மறுநாட்காலையில் உணவருந்தியவுடனே குமுதவல்லி தோட்டத்திலே உலவுவதற்காகக் கீழ் இறங்கினாள்—இந்த வேளையில் அவள் பாங்கிமார் அவள் பின்னே வரவில்லை; ஏனென்றாற் சிறிதுநேரம் அவர்கள் தம் இருக்கையிற் செய்யவேண்டிய அலுவல்மேல் நின்றார்கள். ஆகவே, தனியிருந்த குமுதவல்லியின் உள்ளத்திற் பின்வருமாறு எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்தன. இன்றைக்குத்தான் மனோகரர் திரும்பி வரவேண்டியநாள். நாகநாட்டின்கணுள்ள தனது மாளிகையினின்றுந் தான் வரவழைக்கப்பட்ட முதன்மையான காரணம் இன்னதென்று தனக்குத் தெரிவிக்கப்படுதற்கு அவள் எதிர்பார்த்திருந்த நாள் இன்றுதான். இன்னும், முன்னாள் மாலையில் நேர்ந்த நிகழ்ச்சிகளையும் அவள் நினைந்தாள். அத்தனை இனிமையோடும் உருக்கத்தோடுந் தான் எவனுடைய உயிரின்பொருட்டுக் கடவுளைத் தொழுதனளோ அவனை நினைந்து ஒரு பெருமூச் செறிந்தாள்.

இரண்டரை நாழிகை நேரத்திற்குமேற் குமுதவல்லி அத்தோட்டத்திலே உலவிக்கொண்டிருந்தாள்; அப்போது தற்செயலாய் அவள் இதற்குமுன் தான் புகுந்திராத ஓர் ஒடுங்கிய வழியினூடே செல்வாளானாள். அதன் இருமருங்கும் பழந்தருமரங்கள் அடர்ந்து, அம்மரங்கள்மேற் படர்கொடிகள் சன்னல் பின்னலாய் வளர்ந்துகிடந்தமையாற், குமுதவல்லி இப்போது இறங்கியிருக்குங்கட்டிடத்திற்கு எதிர் வரிசையாய் அமைந்த கட்டிடத்தைநோக்கிச்செல்லுங்கொடிப்பந்தர்ப்பாதையாய் அஃது அமைந்திருந்தது. குமுதவல்லி இவ்வெண்ணங்களின் வயப்பட்டவளாய்க் கீழ் நோக்கிய கட்பார்வையுடன் இவ்வழியே சென்றாள். சடுதியிலே ஒரு சாளரத் தட்டிக்கதவு திறக்கப்பட்ட ஓசையும், அதே நேரத்தில் மகிழ்ச்சியும் வியப்புங் கலந்த ஒரு குரலொலியும் அவள் செவிக்கு எட்டின. உடனே அவள் மேல்நிமிர்ந்து நோக்கினாள்; அங்கே முதலடுக்கிலுள்ள ஒரு பலகணியண்டையில் இளைய நீலலோசனன் நின்றனன்.

கொள்ளைக்கார நல்லானென்றே தான் பிழைபடக்கருதிய அவ்வாடவனை மனோகரது மாளிகையின் கண்ணே—தனக்கும் புகலிடமாய் அமைந்த அவ்வீட்டின்கண்ணே, அங்ஙனம் பார்த்தலுங் குமுதவல்லி தன்னகத்தே நடுக்கத்தால் எழுந்த கூக்குரலொலியை வருத்தத்தொடுதான் அடக்கக்கூடியதாயிருந்தது. பெருந்திகிலும் வியப்புமே அவள் வாயைத் திறவாதபடி திடீரெனப் பூட்டிவிட்டின! உடனே விரைந்து முக்காட்டை இழுத்திட்டுக்கொண்டு திரும்பி அவ்விடத்தைவிட்டுக் கடுகிச் சென்றாள். தன் காதிற்குச் சில சொற்கள் வந்துகிட்டின—அவளது பேரச்சத்திற்குக் காரணமாயிருந்த ஆடவரின் வாயிலிருந்து மு[illegible]முரமாய்க் கத்திச் சொல்லப்பட்ட சொற்களே அவையாம். ஆயினும், அச்சொற்களின் பொருள் அல்லது கருத்து அவளுக்குப் பிடிபடவில்லை; அவளது மூளை

அத்துணை குழம்பிப்போயிற்று, அவளுணர்வுகள் அத்துணை கலங்கிப்போயின. அவ்வீட்டுக்கார முதியோளை அழைத்துத் தன்னைத்தவிர அதே வீட்டின்கண் இன்னும் வேறு எவர் தங்கியிருக்கின்றாரென்பதனைக் கேட்டறியும் மனவுறுதியோடு அவள் விரைந்து தன் அறைக்குத் திரும்பினாள்; ஆனால், தன் உணர்வு தன் நிலைக்கு வந்தவுடனே குமுதவல்லி தான் மீனாம்பாளுக்குச் சொல்லிய உறுதிமொழியைப் பாதுகாக்கவும், விலக்க முடியா நிகழ்ச்சிகளால் வெளிவிட நேர்ந்தாலல்லாமல் தான் கொள்ளைக்கார நல்லானென்றே பிழைபட எண்ணிய அவ்வாண்மகனைக் காட்டிக்கொடாதிருக்கவுந் தீர்மானித்தாள்.

அவள் மெத்தைப் படிக்கட்டின்மேல் ஏறிச் சென்ற அளவிலே குளியலறை வாயிலிற் சுந்தராம்பாளை எதிர்ப்பட, சுந்தராம்பாள் சொல்லுவாள்: "பெருமாட்டி, தங்களைக் காணும்பொருட்டு இவ்வீட்டுக்கார முதியோள் காத்துக்கொண்டிருக்கின்றாள்; அவள் தலைவரும் பெரிய வணிகருமான மனோகரர் இப்போதுதான் திரும்பிவந்திருக்கின்றார்—"

"ஆ, அவர் திரும்பிவந்துவிட்டனரா?" என்று கூறுகையிற் குமுதவல்லி சொல்லுதற்கரிய ஆறுதல் எய்தப் பெற்றவளாய்த் தான்கொண்ட களிப்புத் தன் கண்களில் ஒளிரச் "சிவனேபோற்றி!" என்று தன்னுள் மெல்லெனச் சொல்லிக்கொண்டாள்; ஏனெனில், தனக்குமிகத்தெரிந்தவரும் மாட்சிமை நிறைந்தவருமான மனோகரர் தனக்கு நண்பருந் தன்னைப்பாதுகாப்பவருமாய் இருப்பரென அவள் இப்போது உறுதியாய் நம்பினாள்.

தனக்கு அச்சத்தையுங் கலக்கத்தையும் விளைவித்த அக்கடைசியான நிகழ்ச்சியைப்பற்றி அவள் தன் பாங்கிமார்க்கு ஓர் எழுத்துக்கூடச் சொல்லவில்லை; ஏனென்றால், அவள் இயற்கையிலே பெருந்தன்மையான உள்ளமுடையவளாயிருத்தலின், தன்னிடத்தே நிறைந்த பற்றுதலும் நன்றியும் வைத்திருக்கும் அவ் விளம்பெண்கள் அஞ்சுதற்குரிய செய்திகளைத் தன்னால் இயன்ற மட்டும் அவள் எப்போதும் விலக்கிவிடவே நினைந்தாள். செல்வத்திற் சிறந்த அவ்வணிகர் முன்னிலையில் தகுந்தபடி செல்லல் வேண்டி விரைவில் அவளுடைகள் சிறிது மாற்றி உடுக்கப்பட்டன. அவள் மந்திரமோதிரத்தை விரலில் அணிந்துகொண்டவளாய்த், தன்னை அவ்வணிகரின் முன்னிலையில் அழைத்துக்கொண்டு போதற்கென்று அவ்வீட்டுக்கார முதியோள் வந்து காத்துக்கொண்டிருக்கும் இருக்கையறைக்குச் சென்றாள்.

இடம்அகன்ற அக்கட்டிடத்தின் நடுவில் அல்லது முதன்மையான இடத்தில் அமைந்த அறைக்குச் செல்லாநின்ற பாதையினூடே குமுதவல்லி அம்முதியோளைப் பின்றொடர்ந்தேகினாள்: அவ்வறைக்கதவை அம்முதியோள் பாக்கத் திறந்துவிட்டாள்; குமுதவல்லியும் உள்நுழைந்

தாள். அழகிய பொருள்களால் ஒப்பனை செய்யப்பட்டிருந்த அவ்வறையின் கடைக்கோடியிற் சார்மனைக்கட்டிலின்மேல் அமர்ந்திருந்த மாட்சிமிக்க முதியோன் ஒருவனை முதன் முதற் கண்டாள்; கொள்ளைக்கார நல்லானென்றே தான் பிழைபடக் கருதிய அவ்வாடவன் முன்னிலையிலும் அங்ஙனமே தான் வந்திருப்பதைக் குமுதவல்லி அதன்பின் அடுத்துக்கண்டாள்.

பதினான்காம் அதிகாரம்

மனோகரர்

மலையநாட்டிற் பெரிய வணிகரான மனோகரர் முன்னிலையிலே தம்முளிங்ஙனம் ஒருவரை யொருவர் எதிர்ப்பட்டபோது, நீலலோசனனுக்குங் குமுதவல்லிக்கும் உண்டான உள்ள நிகழ்ச்சிகள் வேறு வேறியல்பினவாய் இருந்தன. தான் முதன் முதற் கண்ட நேரந்தொட்டுத் தன் நெஞ்சைவிட்டுத் தவறாமல் அமர்ந்த அவ்வழகிய இளமங்கையின் வடிவைக்காண்டலும் அப்பௌத்த இளைஞன் மிகவுங் கிளர்ச்சியான களிப்புக் கொள்ளப் பெற்றான். தன்னிடத்து அவள் மிகவும் புதுமையாக நடந்துகொண்டதனைப்பற்றி இவன் அடைந்த வியப்புங் கலக்கமும், ஒருகொடிப்பொழுது இவன் இப்போதடைந்த பெருமகிழ்ச்சியினால் விழுங்கப்பட்டிருந்தன. இனி, மற்றவகையிற் குமுதவல்லியோ தனக்கெதிரே கொள்ளைக்கார நல்லானையே தான் பார்ப்பதாகக் கொண்ட மனத்துணிவின் வயப்பட்டவளாய் இருந்தனள். அவன் பெயரை வெளிவிட்டுச் சொல்லாமலிருந்ததும், அல்லது தன் உள்ளத்திற் பட்டதை வெளியே திறப்பாக விடாமல் இயன்றமட்டும் விலக்க முயன்றதும் அவள் மீனாம்பாளுக்குக் கொடுத்த உறுதிமொழியின்பால் வைத்த நன்குமதிப்பினாலேயாம். இங்ஙனமாக நீலலோசனன் ஒரு பக்கத்தில் அவளை வியப்புங் களிப்புங் காதலுங் கலந்த பார்வையொடு நோக்கிக்கொண்டிருக்க, அவளோ மற்றைப் பக்கத்திற் கீழ் நோக்கிய பார்வையினளாயும், நாணமுடையளாயினும் விழுமிய ஒழுக்கம் பொருந்தினவளாயும் மனோகரர் தனக்குச் சொல்வதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

நாம் முன் சொல்லியபடியே இம்மலையநாட்டு வணிகரானவர் பெரிதும் நன்குமதிக்கப்படுந் தோற்றமுடையராயிருந்தனர். அவரது அகவை அறுபத்தெட்டு அல்லது எழுபதுக்குக் குறையாததாய் இருந்தது; தன்னுடைய மார்பின்மேற் றொங்கும் நீண்ட வெள்ளிய தாடிமயிர் உடையவராய் இருந்தார். வட்டவடிவான கண்ணாடியினால் மாட்டுக்கொம்புச் சட்

டத்திற் சேர்த்துச் செய்யப்பட்ட மூக்குக்கண்ணாடியானது அவரது வளைந்த மூக்கின் நடுவே தொங்கிற்று; வெண்மையான மெல்லிய துணியைப் பாகையாகத் தலையிற் கட்டியிருந்தார்; முழங்கால் அளவுந் தொங்கும் நீண்ட சட்டையும் பூண்டிருந்தார். உறுப்புகளின் உதவிகொண்டு மக்களின் மனப்பாங்கை மிகவும் மேற்பார்வையாய்ப் பார்த்துணர்வார்க்கும், இவரது முகத்தின்கண் அமைந்த ஏதோ ஒரு குறிப்பானது அறிவிற்பழகிய நுண்ணறிவோடு இவரது ஈரநெஞ்சத்தின் இயல்பையும் புலப்படக்காட்டியது: முதலிற் சொன்ன இவரது குணத்திற் குரியதான தன்னயவிருப்பமானது, பிறர் நலங் கருதும் இவரது பெருந்தன்மைக்குமுன் எந்த நேரத்திலுங் கீழ் அடங்கிப் போவதேயாதலை இவர்தம் பார்வைகளிலிருந்து தெரிந்துகொள்வது எளிதாயிருந்தது.

அந்த அறையிற் றளவாடங்கள் நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. தட்டிக்கதவுகளுள்ள அதன் சாளரங்களில் துணிமறைப்புகள் தொங்கவிட்டு ஒப்பனை செய்திருந்தது; வண்ணம் பூசிய அதன் மச்சுகளைச் சலவைக்கல்லாற் செய்த தூண்கள் தாங்கிநின்றன; சுவர்களிலே ஓவியங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன; சார்மணைக்கட்டில்கள் ஒளிமென் பட்டினால் தைத்து ஓரங்களிற் பொற்சரிகையினாலும் இடையிற் பொன்னுருக்களாலும் புனையப்பட்டிருந்தன. சிறிய மேசையின் மேலும், நிலத்தின்மேலும், பலதிறப்பட்ட உணப்பொருள்கள் நிறைத்த பளுவான வெள்ளிக்கலங்கள் இருந்தன. பெரும்பனிக்கட்டிகள் இட்டுக் குளிரச் செய்த இனிப்பான பழங்களை ஒருவகைச் சாந்தினால் வனையப்பட்ட ஒரு பெருங்கலத்திலே நிரப்பி அதனை ஒரு தவிசின்மேல் வைத்திருந்தார்கள்; அம்மாளிகையைச் சூழ இருந்த வெளியிடம், நறுமணங்கமழ்ந்ததொடு, செயற்கைக் குழாய்ஊற்றுகளிலிருந்து குமிழிக்கும் பளிங்கொத்த தண்ணீரினாற் சூடுங் குளிர்ச்சியும் ஓர் அளவான இனியநிலை யுடையதாகவுஞ் செய்யப்பட்டிருந்தது.

நீலலோசனன் நாம் முதன் முதற்காட்டியபடியே உடையணிந்திருந்தனன்: ஆனாற், குமுதவல்லியோ தான் குதிரைமேல் இவர்ந்து வந்தக்கால் அணிந்திருந்த செழுமையான ஆடையைவிட இன்னும் மிகுதியான அழகுவாய்ந்ததை உடுத்திருந்தனள். நேர்த்தியான பொற்பூ மிடைந்த கச்சினை அவள் முழங்கை வரையில் அணிந்திருந்தமையாற், பால்போலும் வெண்மைநிறமுடையதாய் அழகாக அமைந்த அவளது முன்கையானது முழங்கைவரையிலும் அல்லது அதற்குச் சிறிது மேலும் நன்கு கட்புலனாயிற்று. அவளது ஆடையின் ஓரமெல்லாம் பட்டுப்பின்னல் உடையதாய்ப் பலதிறப்பட்ட நிறங்கள் வாய்ந்ததாய்க் கச்சொடுகூட முழுதும் பூத்தொழில் உள்ளதாய் வயங்கிற்று. பொற்பட்டுக் கொட்டையுடைய கொய்ய ஆடை அவளது தலைக்கணியாய் விளங்கிற்று. அவள் சொல்லுதற்கரிய

அழகுடன் தோன்றினாள்; அவள் அங்கே எதிர்ப்பட்ட இளைய நீலலோசனனும் ஆண்டன்மைக்கேற்றபடி அங்ஙனமே வனப்புடன் திகழ்ந்தனன்.

நீலலோசனன் முதலில் அவ்வறைக்குட் புகுந்தமையால், மாட்சிமை வாய்ந்த அவ்வணிகர் அவ்விளம் பௌத்தனுடைய விழைவு தரும் முகத்தையும் அழகிய வடிவத்தையும் போதுமான அளவு ஏற்கெனவே பார்த்துக்கொண்டார். ஆதலால், அம்முதியோனது பார்வைமுழுதும் இப்போது குமுதவல்லிமேற் பதிந்திருந்தன; ஒருவகை அன்பான உன்னிப்போடும் வியப்போடும் இறும்பூதோடும் அவர் அவளை முற்றும் நோக்கினார். இவ்வாறாக அவரது பார்வை அவள்மேல் நின்றமையால், நீலலோசனன் அவ்வழகிய பெண்மணியை முன் அறிந்த அறிமுகத்தோடுங், களிப்பும் மகிழ்ச்சியுங் கலந்த தோற்றத்தோடும் அங்ஙனமே அவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்ததனை அவர் காணாராயினர்.

அவள் முதலில் அவ்வறைக்குள் வந்தபோது அவளை வரவேற்றற் பொருட்டுச் சுருக்கமாகச் சொல்லிய சில சொற்களுக்குப்பின் சிறிது நேரம்வரையில் மனோகரர் ஏதொரு சொல்லுங் குமுதவல்லியை நோக்கிக் கூறாமல் இருந்தார். அவர் அவளது முகத்தை நோக்கிக்கொண்டிருந்தது, அவளுடைய அழகு அத்தனை கவர்ச்சிமிக்கதாய் இருந்ததனால் மட்டுமன்று; அஃது அவளது இயல்பினைத் தெரிந்துகொள்ளுதற் பொருட்டுமேயாம். ஏனென்றால், தன் மேற்பரப்பின்மேல் மிளிரும் எதனையுங் கண்டுணரவல்லார்க்கு உள்ளத்தின் கண்ணாடிபோன்று என்றும் விளங்குவதாகிய முகத்தினையே ஒரு கருவியாக்கொண்டு உயிரின் ஆழத்தையும் உள்ளத்தின் ஆழத்தையுந் துருவிக் காண்பதில் தம்மை மிகவுந் திறமையுடையராகச் செய்தற்கேற்ற அளவில் அம்மலைபவணிகர் நீண்டகாலம் உயிர் வாழ்ந்து வந்தனர், உலகினியற்கையை வேண்டியவளவுக்குக் கண்டுகொண்டவராயிருந்தனர்.

குமுதவல்லி முதலிற் புகுந்தபோது, மனோகரர் எதிரே நீலலோசனன் வணக்கமான நிலையில் நின்றுகொண்டிருக்கக் கண்டாள்: அவர் தம் முதுமைக்கும் அவர்தந் தோற்றத்திற்கும் அம்மாளிகையில் விருந்து புறந்தருந் தலைவராயிருக்கும் அவர்தம் நிலைமைக்குந் தக அதே வணக்கமான நிலையுடன் அவளும் அங்ஙனமே இப்போது நின்றுகொண்டிருந்தாள். இவ்விருவரது நடக்கையும் அவருக்கு உவப்பினைத் தந்தது: கடைசியாக அவர் வாயைத் திறந்து, "என் இளைய நேசர்களே—நாம் இப்போதுதான் முதன்முறையாக ஒன்றுகூடினோமாயினும் யான் உங்களிருவரையும் அங்ஙனமே கருதுகின்றேன்—நரை முதியோர்க்குரிய மதிப்பினை நீங்கள் அறியாமலிருக்கவில்லை. என் முன்னிலையில் நீங்கள் நின்றுகொண்டிருக்கின்றீர்களே; மக்களுக்குரிய நிலைமைகளின்படி நம்முடைய நிலைமை

களைப்பார்த்தால் அம்முறையில் யான் உங்களிருவரையும்விட மிகத்தாழ்ந்த நிலையில் உள்ளேன். மாட்சிமை வாய்ந்த அரசி தங்களிருக்கையில் அருள் கூர்ந்து அமருங்கள்." என்று குமுதவல்லிக் குரைத்துப், பின்னும் நீலலோசனன் பக்கமாய்த்திரும்பி "அரச, தாங்களும் இருக்கையில் அமரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." என்று அவர் கூறினார்.

ஓர் அரசிக்குக் கீழ்ப்படாத நிலையினைக் குறிக்கும் மொழிகளாற் குமுதவல்லி முன்னிலைப்படுத்துக் கூறப்படுதலைக் கேட்டதும் அவ்விளம் பௌத்தன் இறும்பூதுற்றுத் திடுக்கிட்டான்; இனி, மற்றவகையிற் குமுதவல்லியோ தானும் அங்ஙனமே திடுக்கிடாமல் இருக்கக்கூடவில்லை—ஏனென்றால், அரசியன்முறையில் எத்தகையோர்க்குரிய கோலத்தில் அக்கள்வர் தலைவன் தன்னை மறைத்து அம்மலைய வணிகரின் முன்னே வந்துசேர்ந்தானென்று அவள் வியப்புற்றாள்.

"என் இளைய நண்பர்காள்," என்று மனோகரர் கூறுகையில், நீலலோசனன் தமது இடதுகைப்புறத்துங், குமுதவல்லி தமது வலதுகைப் புறத்தும் உள்ள இருக்கைகளில் அமர்தலைக்கண்டு அன்போடும் முறுவலித்து, "உங்கள் ஒவ்வொருவர்க்கும் ஏற்ற நிலைமைக்குத்தக யான் உங்களை முன்னிலைப்படுத்திப் பேசியபோது உங்கள் முகங்களின்மேல் வியப்புக்குறி தோன்றியதை யான் கண்டு கொண்டேன். ஆனாலும், இதற்குமுன் என்றும் நீங்கள் ஒருவரையொருவர் கண்டு பழகியதில்லாமையால், இப்போது உங்களை ஒருவரோடு ஒருவரைப் பழக்கப் படுத்தி வைக்கின்றேன். அதனோடுகூடக், கட்டாயமாய் இல்லாவிட்டாலுங் காரியமுறைக்காகவாவது ஒரு வினையைச் செய்துமுடிக்கக்கடவேன். எனக்கு நம்பகமுள்ள ஏவலாளான சந்திரன் வாயிலாக யான் விடுத்த திருமுகமும் இலச்சினையும் பெற்றுக்கொண்ட நாகநாட்டரசி குமுதவல்லி உண்மையிற்றாங்களேயன்றி வேறு பிறர் அல்லர் என்பதனை யான் உறுதிப்படுத்திக்கொள்ளும்பொருட்டு அவ்வடையாளத்தை எனக்குக்காட்டும்படி, பெருமாட்டி, முதலிற் றங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்." என்றார்.

முன்னே பலகாலும் நம்மாற் குறிப்பிடப்பட்ட அம் மந்திர மோதிரத்தைக் குமுதவல்லி தன் விரலினின்றுங் கழற்றி யெடுத்து, அதனை மாட்சிமிக்க மனோகரரிடங்கொடுத்தாள்.

"இதோ என்னுடையது!" என்று நீலலோசனன் கூறிக்கொண்டே கத்தி மாட்டும் தனது அரைப்பட்டிகையை அவிழ்த்தான்; தன்னை மெய்ப்பிக்குந் தனது அடையாளத்தை எடுத்துக்காட்டும் பரபரப்பில் மணிகள் அழுத்தின தனது கத்தியையுங் கீழே மெதுவான கம்பளிமேல் விழும்படி விட்டுவிட்டான்; பிறகு தனதுகுப்பாயத்தின் மார்பண்டையுள்ள ஒரு பையிலிருந்து அதனை யெடுத்தான்; பாட்டையிலே தான் வந்தபோது

தனது பணப்பையிலுள்ளவை தற்செயலாய்க் கீழ்விழுந்ததிலிருந்து, அவன் அதனிடத்துப் பெரிதுங் கருத்துள்ளவனாயிருந்தான்.

இவ்வாறு அவன் மனோகரரிடங் கொடுத்ததும் ஒருமோதிரமே தான்—குமுதவல்லி இப்போது கொடுத்ததனையே முழுதும் ஒத்திருந்தது இம்மோதிரம்—ஒரு சுன்னஞ் செதுக்கப்பட்ட ஒரேயொரு செம்மணி குயிற்றிப் புதுமையான வேலைப்பாடு வாய்ந்ததாயிருந்தது இம்மோதிரம். இதனையும் மனோகரர் எடுத்துத் தொழிலாளிக்குரிய உன்னிப்போடும் அதனைச் சிறிதுநேரம் ஆராய்ந்து பார்த்தார். தனது மோதிரத்திற்கு முற்றும் இணையான அக்கணையாழியைக் காண்டலுங் குமுதவல்லிக் குண்டான குழப்பத்தையும் வியப்பையும் இதனைப்பயில்பவரே எண்ணிப்பார்த்துக்கொள்ளலாம்! இதன் கருத்து யாதாய் இருக்கக் கூடும்? அவ் விளம் பௌத்தனைப்பற்றித் தான் ஏதோ முழுதும் பிழைபாடான எண்ணங்கொண்டு வருந்துகின்றனளா? தான் கொண்ட ஐயங்களால் அவனுக்குப் பிழை செய்தனளா? சூழ நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சான்றாய் நின்று புதுமையாய்க்கூடி அவ்விளை வினைத் தோற்றுவித்தனவா? எது நினைப்பதென்று அவளுக்குப் புலனாகவில்லை.—உண்மையிலே அவள் நினைவுகளெல்லாங் கடிதிற் கலக்கமடைவனவாயின.

"நல்லது, உங்களிருவரையும் இங்கே வருவித்தற் பொருட்டுத் தனித்தனியே விடுத்த முடங்கலுடன் விடுத்த மோதிரங்களே இவை; இந்தப்பெருமாட்டி" என்று மனோகரர் குமுதவல்லியைச் சுட்டினவராய் அவ் விளம் பௌத்தனை நோக்கி, "நாகநாட்டரசியாவர்" என்று கூறிப், பின்னர் அவ்விளைஞனைச் சுட்டினவராய்க் குமுதவல்லியை நோக்கி, "இந்தப்பெருமான் மேற்கரைநாட்டு மன்னற்கு எடுப்புப் புதல்வனான நீலலோசனன் ஆவர்." என மொழிந்தார்.

"அன்பும் ஈரமும் வாய்ந்த மனோகரரே, யான் அரசனான நீலலோசனனை இதுதான் முதன்முறையாக எதிர்ப்பட்டேன் அல்லேன்; யான் அவருக்குச் செய்த சில பிழைகளுக்காக என் நெஞ்சார்ந்த மன்னிப்பு மொழிகளை, என் மிகவும் உண்மையான பிழைபொறுக்கு முறைகளைக் கூறுதற்கு ஒரு நொடிப்பொழுதுந் தாழேன்." என்று உருக்கத்தால் நடுங்கிய குரலோடுங் குமுதவல்லி கூறினாள்.

மனோகரர் அவ்விளைஞர் இருவரையும் வியப்புடன் நோக்கி, "நீங்கள் இருவீரும் இதற்குமுன் எதிர்ப்பட்டீர்களா? இவ்வறையில் ஒருவரையொருவர் நீங்கள் காணும்நேரம் வரையிற், பெயரளவாய்க்கூட நீங்கள் ஒருவரையொருவர் தெரிந்திருக்கமாட்டீர்கள் என்று எண்ணினேன்." என்று கூவிச்சொன்னார்.

"என்றாலும், நாங்கள் முன்னமே எதிர்ப்பட்டிருக்கின்றோம்." என்று கூறுகையில் நாகநாட்டரசி நாணத்தால் தன்முகஞ் சிவப்பேறப்

பெற்றவளாய், "ஆம், மாட்சிமைதங்கிய நீலலோசன மன்னற்கு யான் தீது செய்தவளானேன்; அதுவும் மிகப்பொல்லாத ஐயறவினாலேதான். என்னுடைய கதையை விரைவிற் சொல்லிவிடுகின்றேன். அருமையிற் சிறந்த மனோகரரே, யான் இடையிற் றங்கிய சாவடியின்கண் என்னுடைய மோதிரத்தை—இப்போது தங்களிடம் யான்கொடுத்த இவ்விலை உயர்ந்த மந்திரமோதிரத்தைக் களவுகொடுத்துவிட்டேன்: அடுத்தநாளில் இவ் விளம்பெருமானைத் தலைப்பட்டு இவரொடு தோழமை கொண்டேன். வழிக்கரையிலுள்ள ஐயக்காரர் சிலர்க்குக் காசு ஈந்து உதவுகையில், இவர் தற்செயலாய்த் தமது பணப்பையிலிருந்தவற்றைக் கீழே வீழ்த்திவிட்டார்; வீழ்ந்தவற்றில் ஒரு மோதிரம் இருந்தது; அஃது என்னுடையதுதான் என்று நம்பிவிட்டேன். ஆனால், அந்த மறைபொருளின் வரலாறு இப்போது வேறுவகையாய்ப் புலப்படலாயிற்று: அந்த நேரத்திலோ யான் ஒரே எண்ணந்தான் கொள்ளக்கூடியதாய் இருந்தது—ஆகவே, கூடியமட்டுங் காலந் தாழாமல் மாட்சிமை தங்கிய இவ் வரசிளைஞரை யான் பிரிந்து செல்லவேண்டுவது இயல்பாயிற்று. பிறகு ஒருவர்க்கு நேர்ந்த கழிவிரக்கத்தால் என்னுடைய மோதிரத்தைத் திரும்பப் பெறலானேன்—என்றாலும், அந்நிகழ்ச்சியிலுங்கூட யான் மாட்சிமை தங்கிய நீலலோசன மன்னரைப்பற்றிப் பொல்லாங்காகவே பின்னும் நினைக்கலானேன்." என்று தொடர்ந்துரைத்தாள்.

"ஓ! புத்தன் வாழ்க!" என்று அவ் விளம்பெளத்தன் ஓலமிட்டவனாய், "என் அறிவைக் கலக்கி என்னை மிகத் துன்புறுத்தி வந்த அந்த மறைபொருளானது கடைசியில் நன்கு புலனாயிற்று! இனி மன்னிப்புக் கேட்டலைப் பற்றியோவென்றால், அழகிய அரசீ, தங்கள் ஆம்பற் செவ்வாயினின்று பிறக்கும் ஒரு சொல்லே, மாட்சிமை மிக்க தாங்கள் என்னைப் பிழைபட நினைந்ததனால் உண்டான எனது மனத்துயரத்தை எனதுளத்திலிருந்து சுவடறத் துடைத்தற்குப் போதுமானதாகும்!" என்று கூறினான்.

குமுதவல்லி தனது முகத்தை அழகாகச் சாய்த்து இச்சொற்களை ஏற்றுக்கொண்டாள்; அப்போது நாணத்தால் உண்டான சிவப்பு அவள் கன்னங்களில் மறுபடியும் பரவிற்று; இவ் விளம்பெளத்தனுங் கொள்ளைக்கார கல்லானும் ஒருவரே என்று இவள் பிறகு ஒரு சிறிதும் நினையாவிட்டாலும், நீலலோசனனைப் பற்றிய மற்றொருசெய்தி இவளைத் திகைப்பித்தது; அஃது, அவன் முன்னாள் மாலைக்காலத்திற், குமுதவல்லி தனது மன்னிப்பை மீனாம்பாளுக்கு உறுதிப்படுத்திக் கூறின கட்டிலண்டையிற் காணப்பட்டதேயாம். அவ்விடத்தில் தாம் எதிர்ப்பட்டதைச் சுட்டி இப்போது அவன் சிறிது ஏதுங் குறிப்பிடாதது பற்றியும் அவள் திகைப்புற்றாள்: ஏதோ ஒரு காரணம் பற்றி அதனை மனோகரர்

முன்னிலையில் அவன் தெரிவியாமல் மறைத்துவைக்கும்படி கற்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று நினைந்தவளாய் அவள் அதனைத் தனக்குள் இணக்கிக்கொண்டாள்.

"அங்ஙனம் நீங்கள் எதிர்ப்பட்டீர்களா?" என்று அம்முதியோன் அவ்விருவர் இடையிலும் இருந்தபடியே, அவ்வழகிய இளைஞனையும் எழில் மிக்க அந்நங்கையையும் இடைவிடாத ஆவலுடன் நோக்கிப் பின்னும் 'நீங்கள் அவ்வாறு எதிர்ப்பட்டதைப்பற்றி யான் வருத்தப்படவில்லை. அரசீ தாங்கள் கூறிய அப்பொருந்தா நிகழ்ச்சி நேராவிடின், இவ் விளம்பெருமானைப்பற்றித் தவறாமல் தாங்கள் நல்லெண்ணங் கொள்ளுதலைத் தடைசெய்யத்தக்கது எதுவும் நேர்ந்திராது: நீலலோசன, தாங்களும், அரசி குமுதவல்லியொடு கொண்ட வழிநடை நட்புச் சடுதியிற் குலைந்துபோனபோது மிரம்பவும் வருத்தப்பட்டீர்களென்பதனைத் தங்கள் பார்வையினாலேயே நன்கு தெளியப்பெற்றேன்.' என்று உரைத்தார்.

நீலலோசனனது முகம் வெட்கத்தால் அனன்றது; என்றாலும் அதில் மகிழ்ச்சியுங் கலந்து தோன்றியது: ஆனாற், குமுதவல்லியினிடத்துத்தோன்றிய நாணமோ இன்னும் பெரிதாயிற்று—அங்ஙனமே அவள் முகத்திற் கனன்ற நாணச்சிவப்பினிடையே அருவருப்பிற்கு அடையாளமான ஒரு பார்வையுங் கலந்துதோன்றியது. அவள் நினைப்பாளானாள்—அங்ஙனம் நினைப்பது இயல்புதான்—அம்முதியோன் பேசியதில், கொச்சைத்தனம் என்று கொள்ளத்தக்க, ஒரு பொருந்தாச் சிறு தன்மை இருந்தது. பெருந்தன்மை மிக்க பார்வையும் அத்தனை முதுமையும் உடைய அவர், தனது கன்னிமை நாணத்திற்கு மதிப்புக் குறைச்சலான சொற்களை எண்ணாமற் சொல்லிய குற்றத்திற்கு ஆளானதைக் குறித்து அவள் வியப்பும் வருத்தமுங் கொள்ளலானாள்.

ஆனால், அப்பெரியார் புன்சிரிப்புற்றுப் பிழைபடாத அன்போடு, அவள் கொண்ட அருவருப்பைத் தடையின்றி நீக்கத்தக்க வகையாய்க் கூறுவார்: 'அரசீ, தங்கள் கன்னிமை நாணத்திற்கு நான் பிழை செய்யமாட்டுவேன் என்று ஒருபோதும் நினையாதீர்கள். நாகநாட்டரசி தமது பேரழகிற்குப் பெற்ற புகழினுந் தமது நல்லொழுக்கத்திற்குப் பெற்ற புகழிற் சிறிதுங் குறைந்தவர் அல்லரென்பதும்—ஓர் அரசிக்குரிய மேன்மையால் தாங்கப்படுதலினுங் கன்னிமைப் பெருமையால் தாங்கப்படுதலிற் சிறிதுங் குறைந்தவர் அல்லரென்பதும் நான் அறிவேன். சுருங்கியபொழுதில் வழி நடந்து செல்லுதற்குத் தோழமையாய்க்கொண்ட அயலவனான ஓர் இளைஞனிடத்தில் தாங்கள் மையல் கொள்ளத்தக்கவர்களென்று, இனிய அரசீ, அத்தனை பரும்படியான ஒரு நினைவை யான் கொள்ளத் துணிவேனென நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை: என் சொற்களுக்கு வேறுபொருளுண்டு. இப்போது உண்மையைச் சொல்லிவிடுகின்

றேன்—உங்களிருவர் கைகளும் நேசவுரிமையிற் பிணைக்கப்படுவனவாக! ஏனெனில், உங்கள் நரம்புக் குழாய்களில் ஒரே குடும்பத்திற்குரிய செந்நீர் புரண்டோடுகின்றது—நீங்கள் இருவீரும் மைத்துனக்கிழமை உடையீர்கள்!''

நீலலோசனன் குமுதவல்லி என்னும் அவ்விருவர் வாய்களினின்றும் உடனே வியப்பொலிகள் தொன்றின; சிறிது நேரம் மிகப்பெரிய திகைப்பின் வயப்பட்டவர்களாய் இருந்தமையால், அவர்கள் தமது இருக்கையினின்றும் எழுந்து நின்றனராயினுந், தாம் கைதழுவ வேண்டுமென்று கற்பிக்கப்பட்டபடி செய்ய நினைவற்றவராய் இருந்தனர்.

''என் இளையநேசர்களே, நீங்கள் இருவீரும் நாகநாட்டை ஒருகால் அரசாண்ட கோச்செங்கண்மன்னரது பேரப்பிள்ளைகள் ஆவீர்கள் என்பது உண்மையேயாம்.'' என்று மனோகரர் வணக்க வொடுக்கத்தோடுங்கூறினார்.

பௌத்தசமயத்தவனான தான், நாகநாட்டில் அரசுபுரிந்த சைவசமய அரசன் கால்வழியில் வந்தவனாதல் எவ்வாறு கூடுமென்றெண்ணி நீலலோசனன் பெரிதுந் திகைப்புற்றனனாயினும், வியப்புங் களிப்பும் ஒருங்கே கிளரப்பெற்றவனாய், ''மைத்துனி, என் கையை ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும்!'' என்று உரத்துச்சொன்னான்.

குமுதவல்லியுந் தான் கேட்டவைகளைப்பற்றித் திகைப்புற்றனளாயினும், போற்றத்தக்க தம் நண்பனான அம்முதியோன் வாயினின்று பிறக்கும் ஒவ்வொன்றும் உண்மையாகத்தான் இருக்கவேண்டுமென்று உணர்ந்தவளாய்த் தனது வெண்மையான அழகிய கையை நீலலோசனன் கையில் வைத்தாள்.

உடனே, மனோகரர் தமது இருக்கையினின்றும் எழுந்து, அவ்விளைஞர் இருவரின் சென்னிமேற் றம் கைகளை நீட்டிக், ''கடவுள் உங்களிருவர்க்கும் அருள் வழங்குவாராக! மற்றொருவர் பொருட்டாக யான் உங்களுக்கு விரைவிற் கொடுப்பதாய் இருக்கும் புதுமையான பொருட்டிரளுக்கு, நீங்கள் தகுதியுடையவர்களாம்படி நாம் வழிபடும் முதற்பெருங் கடவுள் அருள்புரிவாராக! ஒ, நீலலோசன, சைவ சமயத்தின் அருளொளியானது நமதுள்ளத்தில் ஊடுருவிச் சென்று விளங்குவதாக!'' என்று வாழ்த்துரை கூறினார்.

இச்சொற்களைச் சொல்லிய வகையிலும் ஓசையிலும் வெளித்தோற்றமும் வணக்கவொடுக்கமும் வாய்ந்தது ஏதோ இருந்தமையால், அப்பௌத்த இளைஞனும் அச்சைவநங்கையும் அவர் காலடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள்; அவருடைய கைகளை எடுத்து முத்தம் வைத்தார்கள். ஆனால், அவ்விருவரும் ஒன்றுமேபேசவில்லை: அவர்கள் தம்மிடத்துண்டான மிகுந்த மனவுருக்கத்தாற் பேசக்கூடாதவராய் இருந்தனர். ஆகவே

சமயம் மாறுதலைப்பற்றி அம்முதியோன் சொல்லிய சொற்கள் எவ்வகையான எண்ணத்தை நீலலோசனனிடத்தில் எழுப்பினவென்பதை அங்ஙனங் கோரிய அம்முதியோனே அஃது எங்ஙனமிருக்கலாமென்று திட்டமாய்த் துணிந்தறியக் கூடவில்லை.

''என் அன்பிற்கினிய இளைய நேசர்களே, எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! உங்கள் இருக்கைகளில் இருங்கள்—யான் சொல்லப்போகிற விளக்கங்களை உற்றுக்கேளுங்கள்.'' என்று மனோகரர் கூறினார்.

அங்ஙனமே குமுதவல்லியும் நீலலோசனனும் எழுந்து, வணங்கத்தக்க அவ்வணிகரின் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் முறையே உட்கார்ந்தனர், இவ்விருவரும் அவர்முகத்தை மிகுந்த ஐயுறவோடும் உற்றுப்பார்த்தனர்; ஏனென்றால், முதன்மையான செய்திகளைத் தாம் இப்போது அறியப்போகுந் தறுவாயில் இருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

மனோகரர் அவ்வரசி பக்கமாய்த் திரும்பி, ''மாட்சிமை நிறைந்த தங்களை நோக்கி மட்டும் யான் கூறுவதாயிருந்தால், தங்கள் பாட்டனாரான கோச்செங்கண் மன்னரைப் பற்றித் தாங்கள் முன்னமே அறிந்து வைத்திருக்கும் பலசிறுவரலாறுகளை யான் கூறாது விட்டுச்செல்லலாம். ஆனாற், பெருமான் நீலலோசன, தாங்கள் அவ்வரலாறுகளைச் சிறிதும் உணர்தற்கு இடமில்லாதிருத்தலினால், யான் அவற்றின் நுணுக்கங்களை எடுத்துச் சொல்லவேண்டுவது அகத்தியமாய் இருக்கின்றது. கோச்செங்கண் மன்னர் நாகநாட்டைத் தனியரசு புரிந்தவரென்று தாங்கள் அறிதல் வேண்டும்; அவர் தமது நுண்ணறிவு முறைமையாலுந், தாம் பிறழாது நடாத்திய செங்கோன்மையாலுந், தாமாகவே ஆங்காங்கு நாட்டிய அறச்சாலைகளாலுந், தன் குடிமக்களாற் பெரிதும் அன்பு பாராட்டிப் போற்றப்பட்டு வந்தார். நாகப்பூரிலுள்ள தமது அரண்மனையில் அவர் வழக்கமாய்த் தங்கியிருந்தனர்—அழகிற்சிறந்த குமுதவல்லி, தாங்கள் அவ்வரண்மனையிலிருந்துதான் சிறிது காலத்திற்குமுன் பயணம் புறப்பட்டு நீலகிரி நகரத்திற்கு வந்து சேர்ந்தீர்கள். நீங்கள் இருவீரும் பிறப்பதற்குமுன்—அதாவது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இருக்கலாம்—வணங்கத்தக்க முனிவர் ஒருவர் ஒருநாள் அவ்வரண்மனைவாயிலில் வந்து நின்று, தாம் கோச்செங்கண் மன்னனொடு பேச விரும்புவதாகத் தெரிவித்தனர். தன்னைக் காண வருபவர்களெல்லார்க்கும் எப்போதும் எளியராயிருக்கும் அம்மன்னர் தூயரான அத்துறவியை எவ்வளவு விருப்பத்தொடு வரவேற்பாரென்பதை நாம் சொல்லல்வேண்டா; மேலும், உங்கள் பாட்டனார் சைவசமய உண்மையில் மிகவும் மனம் அழுந்தினார்; தமது ஆணை பரவிய இடங்களிலெல்லாம் அவர் அதனைத் தம்மாற் கூடிய மட்டும் வளர்த்து வந்தார். அம்முனிவர் அவர் முன்னிலையிற் சென்று, தாமிருவருந் தனித்திருக்கும்படி கேட்டுக்கொண்டார். அம்மன்னரும் அதற்கிசைந்து தம்

பரிவாரங்களை அப்புறப்படுத்திவிட்டார்; அதன் பின் அத்தூயமுனிவர் அவ்வரசர்செவியிற் படும்படி மிகவும் புதுமையான செய்திகளைக் கூறத் துவங்கினார். பின்வருகிறபடி அவ்வரசனை நோக்கிச் சில பல கூறுவாரானார்: 'என் அரசே, புதுமை மிக்க ஒரு மறைவான செய்திக்கு வைப்பிடமாய் உள்ளவர் இந்நேரத்தில் இவ்வுலகில் இரண்டு பெயரே இருக்கின்றனர். சில கிழமைகளுக்கு முன் அதனை யறிந்தவர் மூன்று பெயர் இருந்தனர்; ஆனால், ஒருவர் இறந்துபோயினர்—இப்போது இம்மறைவினைத் தம் நெஞ்சத்தே பூட்டிவைத்திருப்பவர் இருவரே யிருக்கின்றனர். தொன்றுதொட்டு வரும் ஒரு வழக்கத்தின் தூய கட்டுப்பாட்டின்படி, இப்போது அம்மறைபொருள் மூன்றும் ஒருவர்க்கு அறிவிக்கப்படவேண்டுவதாய் இருக்கின்றது; ஏனெனில், அம்மறைபொருள் முற்றுமே தெரியாமல் அழிந்துபோதற்கு இடம் இல்லாதபடி இயன்றமட்டும் அதனைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டாகவே அதனைத் தெரிந்தவர்கள் எப்போதுமே மூன்றுபெயர் இருக்க வேண்டுமென்பது அகத்தியமாகக் கருதப்பட்டது. யான் இப்போது குறிப்பிட்டுச்சொன்ன தொன்றுதொட்டவழக்கும், அம்மறைபொருளின் இயற்கையும், போற்றத்தக்க அம்மறைவினைப் புதிய ஒருவர்க்கு அறிவிக்கவேண்டுவது அகத்தியமாம் பொழுது அதற்கு மிகவுந் தக்கவர் ஒருவரையே தெரிந்தெடுத்தல் வேண்டுமெனக் கற்பிக்கின்றன. அங்ஙனந் தக்கவராயுள்ளவர் இவ்வளவு அகவை யுடையவராயிருக்க வேண்டுமென்னும் வரையறை யில்லை: ஆனாற், சமயக் கொள்கையைப் பற்றியோவென்றால் அப்படியில்லை—ஏனென்றாற், சைவ சமயத்தைத் தழுவினோரல்லாமற் பிறர் இப்பெரிய புதைபொருளை அறியும் மகிழ்ச்சி பெறலாகாது. மாட்சிமை தங்கிய தங்கட்கு இப்போதுதான் யான் தெரிவித்தவண்ணம், இம்மறைவினை அறிந்தவரில் ஒருவர் இதனினுஞ் சிறந்த மறுமை யுலகத்திற்குச் சில நாளுக்கு முன் ஏகிவிட்டமையால், அவரிருந்த இடத்திற்கு நிரம்பவுந்தகுதியான மற்றொருவரைத் தெரிந்தெடுக்குங் கடமை என்னைப்பொறுப்பதாயிற்று. அறிவாலும் அரசுமுறையாலும் மன்னர் எல்லாரினுஞ் சிறந்தவரும், அன்பொழுக்கத்தாற் சைவ சமயத்தார் எல்லாரினும் மேம்பட்டவருமான கோச்செங்கட் சோழனைத் தவிர வேறு சிறந்தவரை யான் எங்ஙனந் தெரிந்தெடுக்கவல்லேன்?' என்று இவ்வாறு மேற்கணவாய் மலைநடுவிலிருந்து வந்த அத்தூய முனிவர் உங்கள் பாட்டனார்க்குச் சொல்லினார்." எனப்புகன்றனர்.

போற்றத்தக்க மனோகரர் துவங்கிய கதையை மிகவும் மனங்கவிந்து கேட்டுக்கொண்டுவந்த அரசி குமுதவல்லியும் அரசிளைஞன் நீலலோசனனும் பின்னும் அதன் றொடர்ச்சியாய் அவர் சொல்லப் போவதனைக் கேட்க எவ்வளவு ஆவல் கொண்டார் என்பதை அவர்களின் பார்வைகளே புலப்படுத்தின.

வணங்கத் தக்க அவ்வணிகர் பின்னும் அதனைத் தொடர்ந்துரைப்பாரானார்: "மிகவும் போற்றத்தக்கதென்றுஞ் சிறந்ததென்றுஞ் சொல்லப்பட்ட மறைபொருளை வைத்திருப்பவர்களில் ஒருவராகத் தம்மைத் தெரிந்தெடுத்ததனால் தமக்கு நயம்புரிந்த அத்தூய முனிவருக்கு நுங்கள் பாட்டனாரான அக்கோச்செங்கண் மன்னர் தமது நன்றியறிதலைத் தெரிவித்தார்; பின்வருமாறு அம்முனிவர் அம்மாட்சிமை நிறைந்த மன்னர்க்கு உரைப்பாரானார்: 'எம்பெருமானே, இது காலகாலமாக உண்மையோடுங் கொடுக்கப்பட்டு வருகிற ஒரு புதைபொருளாகும்; மிகவுந் தாழ்ந்த நிலைமையி லுள்ள துறவிகளினிடத்தும், மிகவும் உயர்ந்த நிலைமையிலுள்ள அரசர்களிடத்தும் இம்மறைபொருள் வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இதனைத் தெரிந்துகொள்வதானது, உலகத்தில் நிரம்பவும் வியக்கப்படுகின்ற பயன்களைத் தாம் நுகரத்தக்கவர்கள் என்று எண்ணுவோர்க்கு ஒரு திறவுகோலாயிருக்கும். தனதறிவுக்குள் அகப்படும்படி இங்ஙனங்கொண்டு வரப்பட்ட வியப்பான பொருள்களை மிகுகளிப்போடும் பேரின்ப வியப்போடும் உற்றுக் கேட்டுக்கொண்டு வந்த கோச்செங்கண் மன்னர்க்கு அம்முனிவர் அம்மறைபொருளை அதன்பின் விளக்கி வெளியிட்டார். அந்த மறைபொருள் யாதாயிருந்தது—அல்லது யாதாயிருக்கின்றது—என்பதை, என் அன்புள்ள இளைய நண்பர்களே, இப்போது யான் சொல்லுங்காரணங்களால், உங்களுக்கு இவ்வமயத்திற் சொல்லக்கூடாதவனா யிருக்கின்றேன். ஆனாலும், அழகிற்சிறந்த குமுதவல்லி தங்களுக்கு மட்டும் அது சுருக்கில் தெரிவிக்கப்படலாம்; நீலலோசனரே, தங்களுக்கு யான் அதே வகையான நம்பிக்கையை எப்போது காட்டப்பெறுவேனோவென்றால் அது தங்களைத்தான் பொறுத்திருக்கின்றது."

மறுபடியும் மனோகரர் சிறிதுநேரம் பேசாதிருந்தார்; அப்பெரிய மறைபொருளைத் தானும் அங்ஙனமே தெரிந்துகொள்ளத் தகுதியுடையவனாய்க் கருதப்படுவதெல்லாந், தான் பௌத்தசமயக் கொள்கையை அறவே விட்டொழிப்பதனையே பொறுத்திருக்கவேண்டுமென்பது, தான் இது வரையிற் கேட்டுவந்தவற்றால் இனிது விளங்குகின்றதென நீலலோசனன் தனக்குள் நினைப்பானானான். இதைப்பற்றி அவன் மனநிலை எவ்வாறிருந்ததென்பது பின்வருவனவற்றாற் புலனாகும்.

மனோகரர் பின்னுந்தொடர்ந்துரைப்பாரானார்: "யான் இப்போது குறிப்பிட்ட மறைபொருளைச் சிறிதும் வழுவாமல் முற்றுந் தெரிந்துகொள்ளும் பொருட்டுக் கோச்செங்கண் மன்னர் அத்துறவியோடுங் கூடப் பயணம்புறப்படவேண்டுவது இன்றியமையாததாயிற்று. அப்பயணஞ் சென்று திரும்புதற்குச் சிலநாட்கள்மேற் செல்லாது; ஆகவே, தாம் நாகநாட்டின் தலைநகரை விட்டு வெளியேசென்றிருப்பது தம்மைச் சூழ்ந்திருக்கும் நன்றியறிவுள்ள ஏவற்காரர் சிலர்க்கன்றிப் பிறர்க்குத்

தெரியாதிருக்கும் வண்ணம் அவ்வரசர் பெருந்தகை அதனை மறைவா கவே முடிக்கக்கூடியவரானார். என்றாலும், அவர் அத்தூயதுறவியைத் தவிரப் பிறரெவரையும் உடன்கூட்டிச் செல்லவில்லை; அம்முனிவர் எடுத்துச்சொன்ன உறுதிமொழியின் திறத்தில் அவர் ஏமாற்றம் அடைய வில்லை. அவ் வியத்தகு மறைபொருட்களஞ்சியமாயும், அதனையறிந்த அறிவால் தாம் அடையக் கிடந்த நிலையான பயன்களிற் சிலவற்றைப் பெற்றவராயும் அவர் நாகப்பூருக்குத் திரும்பிவந்தார். இரண்டு ஆண்டுகள் கழிந்தபிறகு அப்புனிதமுனிவர் நம்பிக்கை வாய்ந்த ஒரு தூதுவனைக் கோச்செங்கண் மன்னர்பால் விடுத்துத் தாம் இறக்குந்தறுவாயில் இருப் பதனைத் தெரிவித்தார். அவ்வரசர் பெருந்தகையும் அங்கல்லோர் தமது யிரை இறைவன்றிருவடிக்குச் செலுத்துந்தறுவாயில் இருந்த இடத் திற்கு ஒரு நொடிப்பொழுதுந் தாழாமற் சென்றார்; அவ்வரசரும் பிரிந்து போகும் அம்முனிவரின் வாழ்த்துரைகளைப் பெற்றுக்கொண்டு பின்னர் அவரை அடக்கஞ்செய்யவேண்டுஞ் சடங்குகளை முடித்தார். அதன் பிறகு, அம்மறைபொருளை வைத்திருக்கத்தக்க மற்றொருவரைத் தேடிப்பிடிக்க வேண்டுவது அம்மன்னர் பெருந்தகையின் மேலதாயிற்று; தாம் செவ் வையாய் அறிந்த சைவசமய அன்பர்களை யெல்லாந் தமதுள்ளத்தில் அள விட்டுப்பார்த்தபின்னர், அவர் முடிவாக என்னையே தெரிந்தெடுக்கலானார். ஆம், என்னிளைய நேசர்களே, தங்கள் சிறந்த பாட்டனாரின் நெருங்கிய நட்பைப்பெற்று இன்புறுஞ் செல்வத்தினையும் பெருமையினையும் எய்தி னேன். எனதுண்மைச் சிவநேயத்திற்கு அடையாளமாக யான் அப்போது காட்டிய ஒப்பனைகளை இப்போ தெடுத்துச்சொல்வது எனக்குத் தகாது; ஆகையால், இறந்துபோன அம்முனிவருடைய நிலைமையை யான் அடை யலானேன் என்று சொல்வது போதும். இங்ஙனமாக அவ்வுயர்ந்த மறை பொருளைத் தெரிதற்கு அருள்பெற்ற மூவரில் யானும் ஒருவனானேன்.''

பின்னுஞ் சிறிது நேரம் பேசாமலிருந்த பிறகு மனோகரர் மறுபடி யும் பின்வருமாறு பேசப்புகுந்தார்:

''கோச்செங்கண் மன்னர்க்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள்; அவர்களிருவரும் மணஞ்செய்யப்பட்டவர்களே. அவர்க்கு விருப்பமிருந் தால் தம்புதல்வர்களில் ஒருவர்க்காயினுந் தம்மருமக்களில் ஒருவர்க்காயி னும் அம்மறைபொருளை அவர் தெரிவித்திருக்கலாம்; ஏனெனில், யான் முன்னமே தெரிவித்தபடி ஆண்டைப்பற்றிய வரையறையில்லை—ஆண் பெண் என்னும் பால் வரையறையும் இல்லையென்பதனை நீங்கள் முன் னமே தெரிந்திருக்கின்றீர்கள். அவர்தம் புதல்வர்கள் கடமையில் வழுவாமற் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருந்தாலும், அப்புதல்வர்களின் இளைய மனைவிமார் நற்குணமுடையாராயும் மனத்துக்கினியாராயும் இருந்தாலும் அவர்களெல்லாரும் உலகப்பற்று மிக்கவராயும், தமது உயர்ந்த நிலையின்

ஆரவாரத்திலும் வெளிப்பகட்டிலும் அரசியலிலும் நினைவு அழுந்தினவ ராயும் இருந்தமையால், அவர் தமது மனமார அவர்களுள் எவரையுந் தெரிந்தெடுத்து அப்பேரின்பநுகர்ச்சிக்கு உரியராம்படி செய்ய இயலா தவரானார். அதுவல்லாமலும், அத்தகையதொரு மறைபொருளைத் தன் மனையாளுக்குத் தெரியாமற் கணவன் தானே வைத்திருப்பது ஒவ்வாத தொன்றாம்; இனிக், கணவனை விலக்கி அவன் மனைவிக்கு ஒரு மறை பொருளைப் புலப்படுத்துவதும் நன்முறைக்கும் நல்லறிவுக்கும் பின்னும் இசையாததொன்றாம். ஆகவே, எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்கை யிற் கோச்செங்கண் மன்னர் என்னையே தெரிந்தெடுக்கலானார். ஆனால், இப்போது யான் இக்கதையின் மற்றொருபகுதியைப்பற்றிப் பேசப்போ கின்றேன். கோச்செங்கண் மன்னர்க்கு மணஞ்செய்யப்பட்ட மனைவி யின் புதல்வர் இருவர் இருந்தனரென்று யான் முன்னமே சொல்லி யிருக்கின்றேன். நீலலோசன, அம்மன்னரின் இளையபுதல்வர்க்கும் அவர்தம் அழகிய மனைவியார்க்குந் தாங்கள் இருபத்தோராண்டுகளுக்கு. முன் பிள்ளையாய்ப்பிறந்தீர்கள்!''

''என் பெற்றோர்கள்?'' என்று நீலலோசனன் வியந்து வினவித், திரும்பவும் வருத்தம் மிக்க ஐயுறவினால் மனங்கலங்கி, நடுங்கிய மெல் லியகுரலோடு ''அவர்கள் இன்னும் உயிரோடிருக்கின்றார்களா? ஓ! இல்லை! இல்லை! இந்த நம்பிக்கை வைக்க யான் துணியலாகாது—அப்படியிருந் தால் இத்தனைகாலம் யான் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமற் கை விடப்பட்டிருந்திரேன்!'' என்று சொல்லினான்.

''என் அரிய இளைய நேசரே, தாங்கள் மிகவுந் திறமாய்க் கருது கிறபடியே தான்.'' என்று மனோகரர் உருக்கத்தோடு கூறினர்; குமுத வல்லியின் இரக்கமான பார்வையுந் தன் மைத்துனனின் பெற்றோர்கள் உயிரோடில்லை யென்று அவளும் அவனுக்குத் தெரிவிப்பனபோற் குறி காட்டின.

'' அச்சோ, என் அரிய தாய்தந்தையரே!'' என்று நீலலோசனன் முணுமுணுத்துரைக்கையிற், கண்ணீர் அவன்கன்னங்களில் வடிந்தது. ''வணங்கத்தக்க மனோகரரே, அவர்கள் எங்ஙனம் இறந்தார்களென்பதை எனக்குச்சொல்லுங்கள், சொல்லுங்கள்.''

''தங்கள் இரக்கத்தக்க அன்னையார் தாங்கள் பிறந்த சிறிதுநேரத் திற்கெல்லாம் ஒருகாய்ச்சலாற் கொண்டுபோகப்பட்டார்.'' என்று அம் மலையவணிகர் மறுமொழிதந்தார். ''தங்கள் தந்தையாரின் முடிவைப்பற்றி யான் இப்போது பேசப்போகின்றேன். என் இளையநண்பரே, உங்கள் ஆற்றாமையை அடக்கிக்கொண்டு, இத்தமுடிவு துயரமான தொன்றென் பதைக்கேட்க முன்னதாய் இருங்கள். மன்னரின் மூத்த மகளுக்குத் திருமணமாகிச் சில ஆண்டுகள்வரையிற் பிள்ளை பிறந்திலது.''

"இரங்கத்தக்க என் தந்தையார்!" என்று குமுதவல்லி முணுமுணுத்தாள்.

"இப்போது எனது கதையில் துயரமான பகுதியை எடுத்துச்சொல்லப் போகின்றேன்," என்றுரைத்து மனோகரர் பின்னுங் கூறுவார்: "நீலலோசனரே, நீங்கள் முற்றுந் தெரிந்துகொள்ளும்பொருட்டு, முதலில் யான் சொல்லியபடி, இக்குடும்ப நிகழ்ச்சிகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் நெடுகச் சொல்லவேண்டுவது எனக்கு அகத்தியமாய் இருக்கின்றது. நீங்கள் பிறந்து சில திங்கள்தாம் சென்றன—உங்களைச் சூழநடந்தவற்றை உணராத சிறுமகவாய் இருந்தீர்கள்—அப்போது அரிடமன்னன் நாகநாட்டின்மேற்படையெடுத்துவந்தான். ஆண்டில் முதிர்ந்த கோச்செங்கண் மன்னருந் தம்முடைய படைகளையெல்லாம் ஒருங்கு திரட்டினார்; அவரே தம் படைகளுக்குத் தலைவராய்நின்று, தம்மருமகனும் இளைய புதல்வருந் தம்மொடுகூடவரப் பகையரசனுடன் போர்புரியச்சென்றார். ஐயோ! அஞ்சாத பேராண்மையிருந்தாலும், அது பெருந் தொகையான படைமறவர்க்குமுன் யாது செய்யும்! கோச்செங்கண்ணர் படையானது தோல்வியடைந்து நாகநாட்டின் தலைநகரான நாகப்பூரினுள் அலங்கோலமாய்ப் பின்னிடைந்து ஓடிற்று. அந்நகரத்திலிருந்த குடிமக்களோ தம்மரசனிடத்தில் மிகுந்த அன்புடையராய் இருந்தமையால், முற்றுகை செய்யும் பகைவரை எதிர்த்து நிற்றற்கு வேண்டும் ஏற்பாடுகளை மிக்க ஊக்கத்தோடுஞ் செய்தார்கள். அரிடமன்னன் படைத்தலைவனோ கோட்டைமதிற்புறத்தே வந்துசேர்ந்து அந்நகரத்தாரை அழைத்துக் கோட்டையைத் தமக்கு ஒப்படைத்து விடும்படி சொன்னான். நகரத்தாரோ அதனைக் கடுமையாக மறுத்துக்கூறினார்கள். முற்றுகை செய்தவர்களை மூன்று திங்கள்வரையில் அந்நகரத்தார் எதிர்த்து நின்றார்கள்; ஆனால், அது முற்றிலுஞ் சூழப்பட்டுச், சுற்றியுள்ள நாடுகளுடன் போக்கு வரவுக்கு இடமில்லாதபடி வழியடைக்கப் பட்டமையால், அது பஞ்சத்தின் கொடுமைகளாற் பற்றப்படுமென்னும் அச்சம் உண்டாயிற்று. பகைவர்படையின் தலைவன் ஓர் அறிவிப்பு விட்டு, அவ்வறிவிப்பிற்கண்ட மூன்றுநாட்களுள் நாகப்பூர்க்கோட்டையை ஒப்படையாவிட்டால், இங்ஙனம் பிடிவாதமாய் எதிர்த்து நின்றதற்குக் காரணம் அரசனும் அவன்புதல்வர் இருவருமே என்று கருதப்படுவார்களெனவும், அதனால் அதனைப் பிடித்தபிறகு அம்மூவரையுங் கோட்டைக் கொத்தளங்களின்மேல் இரக்கமின்றிக் கழுவேற்றுவேன் என்வுந் தெரிவித்தான். சண்டையைப்பற்றிப் பேசித் தெளியும்பொருட்டு ஓர் அவை கூட்டப்பட்டது; தமது தலைநகர் எதிரியின் கைப்படுவது திண்ணமென்றுணர்ந்த அம்முதிய அரசர் தாம் கோட்டையைப் பகையரசனுக்கு ஒப்படைத்துவிடுங் கருத்துடையாரல்ல அவ்வவையில் தெரிவித்தார். ஆனால், அவர் மருமகனும் புதல்வரும் அரசியற்றலைவர்களும் எதிர்த்தே

நிற்கும்படி அவரைவேண்டிக் கொண்டார்கள்; ஏனென்றால், சாளுவமன்னன்படை நாகநாட்டரசர்க்கு உதவியாய் வருவதாக ஓர் உறுதிமொழி இருந்தது. குடிமக்களோ அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு, தங்கள் முதியஅரசர்க்கு அங்ஙனஞ் சொல்லப்பட்ட கருத்துரையைக் கிளர்ச்சிமிக்க சொற்களால் தாங்கிப் பேசினார்கள். அவருங் குடிமக்கள் கருத்துக்கு இணங்கவேண்டுவதாயிற்று; ஏனென்றால், பகைப்படைத்தலைவன் மிரட்டுதலுக்குத் தான் உடன்பட்டால் தன்னுயிர்க்குந் தன்மக்களுயிர்க்குமே தாம் கவலைப்படுவதாக நினைக்கக்கூடும் என்று அவர் அஞ்சினார். ஆகவே, நாகப்பூர் பின்னும் நீண்ட நாள் பாதுகாக்கப்படுவதாயிற்று; கோட்டைக்குள்ளிருந்தபடை சடுதியிற்பாய்ந்து தாக்கினமையால், அரிடமன்னன் படையில் ஒருபகுதி முற்றிலும் முறியடிக்கப்பட்டது; அப்படைத்தலைவனோ அதனாற் பெருஞ் சீற்றம் அடைந்தான்; ஆதலாற், பீரங்கிவெடி வைத்து அடித்துக்கொண்டே போய்த் தன்படைஞரெல்லாருந் தாக்கல் வேண்டுமென்று கட்டளையிட்டான். கோட்டையைக்காத்த படைமக்கள் உயிருக்குத்துணிந்து சண்டை செய்தார்கள்; என்றாலும், அளவுக்கு மிஞ்சின தொகையாயுள்ள பகைவர்படைகளின் முன்னே எத்தகைய ஆண்மையும் போதுமானது அன்று. சுருங்கச்சொல்லுங்கால், நாகப்பூர் பிடிபட்டு விட்டது; அரசகுடும்பத்தாரைச் சிறைப்படுத்தும்பொருட்டுப் பகைவர் அரண்மனையிற் சென்று மொய்த்துக்கொண்டார்கள். அரசகுடும்பத்தார் தப்பிப்போதற்கான திட்டங்கள் சூழ்ந்து செய்யப்பட்டன! ஆயினும், உங்கள் தந்தையாரும், நீலலோசனரே, நீங்களுமே—அப்போது அவர்கையில் நீங்கள் ஒருசிறுமகவாய் இருந்தீர்கள்—நாகப்பூர்க் கோட்டையைத் தாண்டித் தப்பிப்போகலானீர்கள். முதிய அரசரும், அவர்தம் மூத்தமகளும், அம்மகளின் கணவரும் பலமுகமாய்த்தப்பியோடுகையிற் கண்டு பிடிக்கப்பட்டுச் சிறை செய்யப்பட்டார்கள். நல்வினையற்ற குடிமக்களோ தெருக்கள் நெடுக நின்று கொண்டு, வெற்றிச் செருக்கோடுங் குதிரைமேற் சென்ற பகைவர் படைத்தலைவனைத் தாழ்மையோடும் வணங்கி, அவ்வரசகுடும்பத்தாரை விட்டுவிடும்படி இரந்து கேட்டார்கள். முதலில் அப்படைத்தலைவன் மனம் இரங்கவில்லை: ஆனாற், கடைசியாகச் சிறிதளவு மனம் இரங்கினான். கோச்செங்கண்மன்னர் உடனே நாகப்பூரைவிட்டுப் போய்விடுதல் வேண்டுமென்றும், அவர் இந்த உலகவாழ்வை முற்றுந்துறந்து செல்வதாகப் புனிதமும் வணக்கவொடுக்கமும் மிகுந்த சூள் உரைக்கவேண்டுமென்றும், மறுபடியும் அவர் நாகநாட்டுமக்களிடை வருதலும், நாகநாட்டு அலுவல்களில் தலையிடுதலும் ஆகாவென்றும்,—சுருங்கச்சொல்லுமிடத்து, இனி அவர் உயிர்துறந்தவர்போலாகவேண்டுமே யல்லாமல், நேராகவேனும் பிறர்வாயிலாகவேனும் வேறெவ்வழியாலும் எப்போதும் அவர் தம் குடும்பத்தவரோடு மறுபடியுஞ் சிறிதுந் தொடர்புவைத்தல்

கூடாதென்றுங்கூறி, அப்பொருத்தனைக்கு இசைவதாயிருந்தால் அவரை உயிரொடு விட்டுவிடுவதாகப் புகன்றான். ஆண்மைமிக்க அம்முதிய அரசர் மானக்கேடான அப்பொருத்தனைகளை எரிச்சலுடன் இகழ்ந்து, அதனால் தாம் கழுவேறவுந் துணிந்திருப்பார்; ஆனால், தம் மூத்தமகள் மருமகன் உயிருங்கூட அதனால் இடைஞ்சலுக்கு உள்ளாவதை எண்ணினார். ஆகவே, அப்பொருத்தனைக்கு இசைந்து வெளிப் புறப்பட்டார். அந்தப் பகைப்படைத்தலைவன் அவர்தம் இளையமகனை—நீலலோசனரே உங்கள் தந்தையைப், பிடித்துத்தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகத் தெரிவித்தான்; ஆனால், நாட்கழிந்ததேயல்லாமல், உங்கள் தந்தையாரைப்பற்றி எதுஞ் செய்தி வரவில்லை. நாகப்பூரைப் பிடித்துக்கொண்டு நாகநாட்டார்க்குள்ள பற்றுதலைத் தொலைத்துவிடலாமென்று அப்பகைவர் எண்ணினார்கள்; ஆனால், அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. எங்கேபார்த்தாலுங் கலகந் தலைக்காட்டுவதாயிற்று. கடைசியாக அந்த நாட்டிலுள்ளவர்களைத் தணிவு செய்யும் பொருட்டு அப்பகைவர் தம் அரசாட்சியில் ஓர் ஒழுங்கு செய்வாராயினர். நாகநாட்டில் உள்ள மேலோரையெல்லாம் அழைத்து ஓர் அவை கூட்டப்பட்டது; இனிமேல் அந்நாடு தனக்குரிய ஓர் அரசனாலேயே ஆளப்படுதல் வேண்டுமென்றும், முதன்மையான இரண்டு மூன்று நகரங்கள் மட்டும் அவர்கள் உறுதிமொழிப்படி அரிடமன்னற்குரியவர்கள் செய்யும் வாணிகத்தைக் காக்கும்பொருட்டு அம்மன்னவன் படைமறவராற் காவல்செய்யப்படுதல் வேண்டுமென்றும் அதில் தீர்மானஞ்செய்தார்கள். இதற்கேற்ப ஓர் உடம்படிக்கையுஞ் செய்யப்பட்டது; கோச் செங்கண் மன்னரின் மருமகனார்—எழில் மிக்க குமுதவல்லி தங்கள் தந்தையார்—தம்மனைவியாரோடும் இதுவரையில் நாகப்பூரிலேயே ஒருவாறு மேன்மையாகவே சிறைபிடித்து வைக்கப்பட்டிருந்தவர் அரசாட்சிக்கு உரியவராக்கப்பட்டார். அந்நிகழ்ச்சிக்கு இரண்டாண்டுகள் பிற்பட்டு—அதாவது பதினேழு ஆண்டுகளுக்குமுன்னே, குமுதவல்லி, நீங்கள் பிறந்தீர்கள்; இன்னும், நீலலோசனர் தெரிந்துகொள்ளும் பொருட்டுத், தங்கள் பெற்றோர் இருவரும் ஏறக்குறைய ஒரேவகையான நோயால் இரண்டு ஆண்டுகளின்முன் இறந்துபோயினரென்றும், அப்போது நாகநாட்டுக்குடிமக்களும் அரிடமன்னன் அரசியற்றலைவருந் தங்களையே அந்நாகநாட்டுக்குத் தனிஅரசியாக ஏற்று அமைக்கலானார்களென்றுங் கூட்டிச்சொல்லுகின்றேன்.

“இனி,என் தந்தையாரின் முடிவு எப்படியாயிற்று?” என்று நீலலோசனன் தன்னைத் தோற்றுவித்த தந்தையின் முடிவை யறிய, நிறைந்த பிள்ளைமைப் பரபரப்புடன் வினாயினான்.

“அவர் நாகப்பூரினின்றும் மறைந்து சென்ற நீண்டகாலத்திற்குப் பின், அவரும் அவர்தம் மகவும் மேற்கணவாய் மலைகளினிடையே செத்

துக்கிடக்கக் காணப்பட்டார்களென்று எப்படியோ ஒருபேச்சு ஊரெங்கும் பரவலாயிற்று; ஆகவே, அவர்கள் அப்படித்தான் அழிந்துபோனார்களென்ற நம்பிக்கை எங்கும் உண்டாயிற்று. ஆனால், உண்மை அங்ஙனமன்று என்பதை, இப்போது நீங்கள் விரைவிற் றெரிந்துகொள்வீர்கள். ஆயினும், முதன்முதல் யான் முதியோரான கோச்செங்கண் மன்னரைப் பற்றிப் பேசல்வேண்டும். அப் பகைப்படைத் தலைவனிடந் தாம் செய்துகொண்ட பொருத்தனையின் முறைப்படி அவர் நாகபூரைவிட்டுப் புறப்பட்டதும், மேற்கணவாய்மலைத்தொடரின்கண் உள்ள காடுகளில் உள்ளுருவிச்சென்றார்; அப் புனித மாதவன் தமக்குத் தெரிவித்திருந்த அம்மறைபொருளை இப்போதவர் தமக்குப் பயன்படுத்திக்கொள்வாரானார்; அம்மறைபொருளைத் தாம் தெரியலானது பற்றி அவர் திருவருளுக்கு வாழ்த்துரைமொழிந்தார். ஏனென்றால், இப்பெரிய மண்ணுலகின் குழப்பங்கள் சேராததும், போரிடும் இரைச்சல் நுழையாததும், சூறாவளியானது வானுலகத்தில் தோன்றாததுபோலத் தன்னய விருப்பங்கள் முட்டாததும் ஆன ஓர் இடத்திற் பாதுகாப்புடன் இனிதாக ஒதுங்கியிருத்தற்கு ஏற்ற வழியை அவருக்கு அது தந்தது.” என்று மனோகரர் மறுமொழிபுகன்றார்

இங்கே மனோகரர் சிறிதுநேரம் சும்மா இருந்தார்: குமுதவல்லி தன் உள்ளத்திற் பலவேறுவகைப்பட்டுத் தோன்றிய புதுமையான உணர்வுகளோடு எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்: நீலலோசனனது முகமோ தன் தந்தையின் முடிவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பதைத்து ஆவலுற்ற குறிப்பைப் புலப்படக்காட்டியது.

பதினைந்தாம் அதிகாரம்

செய்திவிளக்கத்தின்முடிவு

ஆம், நாகநாட்டரசியின் எண்ணங்களும் உணர்வுகளும் புதுமையாகவே இருந்தன: ஏனெனில், மனோகரர் கடைசியாகச் சொல்லிய சொற்களானவை, தான் முன்னே கேள்வியுற்ற சிலவற்றொடு சேர்க்கையுடையவாதலை அவளது உள்ளத்தில் தடுக்கக் கூடாதபடி எழுப்பிவிட்டன. தம் சொற்களைச் செவிமடுப்பவர்களுக்குப் பொழுதுபோக்காக இருத்தற்பொருட்டும், அவர்களுள்ளத்தைக் கவருதற் பொருட்டுங் கதைசொல்லுவார் வழக்கமாய்ப் பிணைத்துச் சொல்லுங் கதைகளைப்போல், நுணுக்கமாய்ச் சூழ்ச்சிசெய்த புதியகட்டுக்கதைகளைப்போல் அல்லாமல், இக்கலை தனக்கும் மீனாம்பாளுக்கும் எடுத்துரைத்த கதை திட்டமாய் நடந்ததனை அடிப்படையாக்கொண்டு உண்மையாய் இருக்கலாமோ?

என்று எண்ணினன். திரும்பவும் மனோகரர் பேசப்புகுந்தமையாற், குமுதவல்லி இங்ஙனம் நெடுநேரம் எண்ணமிட்டுக்கொண்டிருக்கக் கூடவில்லை.

"ஆம், அம்மாமறைப்பொருளை அவர் தெரியப்பெற்றதற்காகத் திருவருளை வாழ்த்துதல்வேண்டும்; அம்மாட்சிமை மிக்க முதிய அரசர் மேற்கணவாய்மலைகளின் இடையே அமைதியுங் காவலும் வாய்ந்த ஒருபுகலிடம் அடையப்பெற்றார். அங்கே அவரை நான் அவ்வப்போது போய்ப் பார்த்து வந்தேன். இரண்டுமூன்று ஆண்டுகள் கழித்து அவர் தமது நாகநாட்டரசாட்சி தம்மவர்க்கே திருப்பிக் கொடுக்கப்பட்ட தென்பதனைத் தெரிந்தபின், மனம்ஆறுதல் எய்தித், தாம் உலகைத் துறந்துவந்ததில் முற்றுங் கருத்தொருப்பட்டு, நாகநாட்டலுவல்களில் இனித் தாம் தலையிடுவதில்லை யென்று அப்பகைப்படைத் தலைவனுக்குத் தாங்கூறிய உறுதிமொழியை முன்னினும் மிகுதியாக மதிப்பதற்குத் தீர்மானித்தார். என்னைப்போல் நம்பிக்கையுள்ள ஒருநண்பன் வழியாகச் செய்திவிடுத்தாலுங் கூட ஒருகால் அரிடமன்னன் ஆட்களுக்கு அயிர்ப்பு உண்டாகுமானால் அரசுரிமை திரும்பப்பெற்ற தம்மவர்க்கு இடைஞ்சல் விளையுமாதலால், தம்மருமகன்—குமுதவல்லி தங்கள் தந்தையார்—தமது முடிவைப்பற்றி முழுதுந் தெரியாதிருக்கவேண்டு மென்று அவர் விரும்பினார். தம்மருமகன் நாகநாட்டரசுக்கு உயர்த்தப்பட்டதுபற்றி அம்முதியமன்னன் மகிழ்ச்சி அடைந்தனராயினுந், தம் ஒரே மகளையும் அவர் கையேந்திச் சென்ற சிறுமகவையும் பற்றி அளவிறந்த கவலை யடையலானார். யான் அம்மேற்கணவாய் மலைநாடுகள் எங்கணும் இயன்றமட்டும் உசாவிப்பார்த்தேன், சிறிதும் பயன் படவில்லை. பின்னர்ச் சிறிதுகாலங்கழித்துக், காணாமற்போன இளவரசரும் அவர்தம் மகவும் மலைகளினிடையே மாண்டு போனார்களென்னுஞ் செய்தி வந்து எட்டுவதாயிற்று; அப்போது அதனை நம்பிப், போற்றத்தக்க என் நண்பரான அம்முதிய கோச்செங்கண்மன்னர்க்கு அதனை அறிவித்தேன். ஆண்டுகள் பல சென்றன—அம்முதிய அரசர் தாம் கண்டறிந்த அமைதியான அம்மறைவிடத்தை விட்டுவரச் சிறிதும் விருப்பம் இன்மையினால் அதன்கண்ணே தாம் இருந்துவரலானார். இற்றைக்குப் பதினெண் டிங்களுக்குமுன் கோச்செங்கண் மன்னர் கடுமையான ஒரு நோயாற் பற்றப்பட்டார்; அதனால் அவருக்கு மருந்து கொடுத்து உதவவேண்டுவது அகத்தியமென்று கண்டேன். அப்பொழுது நீலகிரிநகரத்திற் பலவியப்பான மருந்துகள் கொடுத்துவந்த ஒருதுருக்கப் பெண்பிள்ளை இருந்தனள்: அவளை அம்முதியமன்னர் இருக்குந் தனியிடத்திற்கு என்னோடு அழைத்துச்செல்லத் தீர்மானித்தேன். ஆண்பாலாருள் ஒருவரைவிடப் பெண்பாலார் ஒருவரை இவ்வுதவிக்கு அமர்த்திக் கொள்வது எளிதெனக் கண்டேன்; ஏனென்றால், யான் கட்டாயமாகப் பின்பற்றவேண்டிய சில முன்னறிக்கைகளுக்கு இணங்கும்படி ஒருபெண்

பாலைத் தூண்டுவது மிக எளிது. யான்சொல்லுகிற இந்தப்பெண்பாலோடு யான் வழிகடந்துசென்றபோது, தான் திரிந்து கண்ட பலநகரங்களைக் குறித்தும் அவள் அடுத்தடுத்துப் பேசிக்கொண்டுவந்தாள்; அவ்விடங்களைப் பற்றிப் பலவேறு சிறு கதைகளுஞ் சொல்லிக்கொண்டுவந்தாள். இங்ஙனம் பேசிக்கொண்டுவருகையில் அப்போது மேற்கரையை ஆண்ட சாக்கியதர்மன் என்னும் அரசனைக் குறிப்பிட்டுப் பேசலானாள்; அவ்வரசரின் அன்பும் உருக்கமும் மிக்க தகைமைக்கு ஓர் ஒப்பனையாக, அவர் தமது பாதுகாப்பிற் குழவிப்பருவத்தே விடப்பட்ட ஓரிளைஞனைத் தமக்கு மகனாக உரிமைப் படுத்திக்கொண்டதனை எடுத்து மொழிந்தாள். அவ்வறிவோள் மேலுஞ் சொல்லிய சில செய்திகளால் யான் ஓர் ஐயுறவு கொள்ளுதற்கு இடம் பெற்றேன்; ஆனாலும், அதனைக் கோச்செங்கண் மன்னர்க்குக் கூறிற்றிலேன்; ஏனெனில், ஒருகால் அதனை நம்பி அவர் பின்னை ஏமாற்றம் அடைந்தால் என்செய்வதென்று அஞ்சினேன். அப்பெண்மகள் நோய்தீர்த்துச் செய்த உதவிக்கு நன்றி செலுத்தல் வேண்டும். அரசர் நோயினின்றுந் தேறி எழுந்தார். அதன்பின் எனக்குச் சிறிது ஓழிவுநேரங் கிடைத்தவுடன், அம்மேற்கரைமன்னர்க்கு ஒருதிருமுகம் எழுதி அதனை ஒருவேவுகாரன் கையிற் கொடுத்துப் போக்கித் தாம் உரிமைப்படுத்திக்கொண்ட மகனைப்பற்றி அவர் அறிந்தவையெல்லாம் எனக்குத்தெரிவிக்கும்படி மன்றாடிக் கேட்டேன்—அதனோடு, எம்மிருவர்க்குள்ளும் நடக்கும் இச்செய்தி பிறர் அறியாவாறு தம்முள்ளே மறைத்து வைக்கவேண்டுமென்றுங் கெஞ்சிக்கேட்டுக்கொண்டேன். யான் வேண்டிக்கேட்ட அவ்வரலாறுகளை எனக்குத் தெரியப்படுத்துவதில் அவ்வரசர் சிறிதுங்காலந் தாழ்க்கவில்லை; யான் முன்னமே கொண்டிருந்த ஐயுறவை அவை முற்றும் உறுதிப்படுத்தின. ஒருநாள் சாக்கியதர்மர் வேட்டம் ஆடவெளிச்சென்றார்—இது நாகப்பூர்க்கோட்டை பிடிபட்ட சில கிழமைகளுக்குப் பின் நிகழ்ந்தது—அப்போது அவர், வறுமையால் வாடிப்போனாலும் அழகிய தோற்றம் வாய்ந்த ஓர் இளைஞன் தன்கையில் ஓர் இளங்குழவியை வைத்துக்கொண்டு ஓர் யாற்றங்கரையில் அமர்ந்திருக்கக் கண்டார். நீங்கள்தாம் அக்குழந்தை, நீலலோசனரே! அவ்வறிய ஆடவனே உங்கள் தந்தை!" என்று மனோகரர் தொடர்பாகச் சொல்லிவந்தார்.

"இவையெல்லாம் எனக்குப் புதியனவேயாகும்!" என்று நீலலோசனன் வியந்துரைக்கையில், அவன் கன்னங்களிற் கண்ணீர் பெருகிவழிந்தது. "ஐயோ! என் எளியதந்தையே!"

மிகுந்த மனவருக்கத்தோடும் இரக்கத்தோடுங் கூடிய குரலுடனும் பார்வையுடனும் மனோகரர் பின்னுந் தொடர்ந்துரைப்பாரானார். "அந்த மேற்கரைமன்னர் தங்கள் தந்தையாரின் துன்பமுடிவைத் தங்கட்கு இதுகாறுந் தெரியாமல் மறைத்துவைத்தது நிரம்பவும் அன்பான எண்ணத்

திறமேலதான். ஆயினும், இப்போது நீங்கள் ஒவ்வொன்றுந் தெரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாயிற்று. நீங்கள் நீலகிரி நகருக்கு வந்ததும், இவ்வரலாறுகளை யெல்லாம் என்வாயினின்றுந் தெரியப்பெறவேண்டுமென்பது சாக்கியதர்மருக்குத் தெரியும். ஆகவே, அக்கதையை முற்றுஞ் சொல்லிவிடுகின்றேன். யான் கூறியபடியே, சாக்கியதருமர் அந்த அழகிய தோற்றம்வாய்ந்த இளைஞன் தன் இளங்குழவியின் முகத்தைத் துயரத்தோடும் பார்த்துக்கொண்டு ஓர்யாற்றங்கரைமேல் அமர்ந்திருக்கக்கண்டார்: நிறைந்த இரக்கத்தோடும் வினவினர். அப்போது, ஐயோ!—நீலலோசனரே, ஒரு துயரமான அறிக்கையைக் கேட்டற்கு முனைப்பாய் இருங்கள்—அவ்விரக்கத்தக்க உயிர் அறிவிழந்திருத்தலை அவ்வரசர் கண்டுகொண்டார்."

இப்போது நீலலோசனன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியோடிற்று; குமுதவல்லியும் அங்ஙனமே அழுதாள். வணக்கத்தக்க மனோகரரும் பெரிதும் மனம் உருகினர். திரும்பவும் அவர் கதையைத் துவங்குதற்கு முன் சிலநேரஞ் சென்றன.

முடிவாக அவர் தொடர்ந்துரைப்பார், "இரக்கத்தக்க அவ்விளைஞனையுங் குழந்தையையும் மேற்கரையிலுள்ள தமது அரண்மனைக்குக் கொண்டுபோகும்படி அவ்வரசர் கட்டளையிட்டார்; புதியராய்வந்த அவ்விருவரையும் அங்கே எல்லா அன்போடும் நடத்தினர்கள். என்றாலும், நீலலோசனரே, தங்கள் தந்தையின் வாயிலிருந்து அவர் ஏதும் வெளிப்படுத்தக்கூடவில்லை: அவ்விளைஞர் தமதறிவை இழந்து வரவர உயிர் துறக்கும் நிலையை அடையலானார். பின்னுஞ் சிலநாட்கழித்துத் தாங்கள் பெற்றோர் அற்ற பிள்ளையாயினீர்கள்! உங்களிருவரையும் இன்னாரென்று அறிவிக்கத்தக்க அடையாளம் ஏதும் உங்கள் தந்தையின் உடுப்புகளிற் காணப்படவில்லை; நாகப்பூரில் நடந்தவை எல்லாம் நிலவாமின்றிச் சிறுபேச்சாய் மேற்கரைநகரில் தெரிந்தமையாற் சாக்கியதர்மரது அரண்மனையில் இறந்தவர் நாகநாட்டின் இளவரசர்தாமோ என்னும் ஐயுறவுக்கும் இடம் உண்டாகாதிருந்தது. அங்ஙனமிருந்தாலும், அப்போது நீங்களும் உங்கள் தந்தையும் அணிந்திருந்த ஆடைகளை அவர் காப்பாற்றி வைத்திருந்தார்; அவ்வாடைகளோ இறந்துபோனவர் தாழ்ந்தநிலையில் உள்ளவரோ என்று குறிப்பிட்டன. அவ்வரசர் தங்களை வளர்த்துவந்தார்—எவ்வளவு நன்றாகவும் எவ்வளவு மென்மையாகவும் என்பதனைத் தாங்களே மிகவும் நன்றாய் அறிவீர்கள்!"

"அவர் எனக்கு ஒருதந்தைபோ லிருந்துவருகிறார்!" என்று நீலலோசனன் நன்றியறிவோடும் வியந்துரைத்தான்; "என்பெற்றோர்கள் எனது குழவிப்பருவத்திலேயே இறந்துபோயினார்களென்று அவர் எப்போதும் யானறியச் சொல்லிவந்தார்; அதைப்பற்றி நான் கேட்டபோ

தெல்லாம் அவர் என் அதனை நழுவவிட்டு வந்தார் என்பதை இப்போது நான் மிகவுஞ் செவ்வையாக அறியப்பெறுகின்றேன். ஆம் மிக்க அன்பினாலும் ஆழ்ந்து ஆராய்ந்த எண்ணங்களாலுமே அவர் அங்ஙனஞ் செய்யலானார்!"

"அவ்வரலாறுகளை யெல்லாம், பொதிந்துவைத்த அவ்வாடைகளோடும் அம்மேற்கரையரசர் எனக்கு விடுத்துவைத்தார்: இவைகளெல்லாவற்றையும் யான் கோச்செங்கண்மன்னர்க்குத் தெரியப்படுத்தினேன். போற்றத்தக்க என் முதியநண்பர் அவ்வாடைகளைப்பார்த்ததும் உடனே அவற்றைத்தெரிந்துகொண்டார்: பல ஆண்டுகளுக்கு முன்னே அரிடமன்னன் படைமறவர் எதிர்த்துச் சண்டைசெய்தபோது நாகப்பூரிலிருந்து அவ்விளவரசன் தங்களைக் கையிலெடுத்துக்கொண்டு தப்பியோடுங்காற் பூண்டிருந்த இழிந்த ஆடைகளே அவை. இங்ஙனமாக, நீலலோசனரே தங்கள் பிறப்பைப்பற்றி இனி ஏதும் ஐயம் இல்லையாய் ஒழிந்தது; நீங்கள் பௌத்தராகவும் பௌத்தசமயத்திற்கு உரியராகவும் வளர்க்கப்பட்டுவந்தீர்கள். என்றாலும், உண்மையில் தாங்கள் நாகநாட்டின் இளவரசரேதாம்; தாங்கள் பிறந்த காலத்தில் தங்கள் நெற்றியின்மேல் திருநீறு அணியப்பட்டிருந்ததும் உண்மையேதான். போற்றத்தக்க உங்கள் பாட்டனார் தங்களைத் தம் கைகளாற் றழுவிக்கொள்ள ஆவலித்தார்; ஆனாலுந், தாம் உயிரோடிருக்கும்போது தங்கள் பிறப்பைப்பற்றிய மறைபொருள் தங்களுக்கு வெளிப்படுத்தப்படுமாயின், நேராமல் தடுப்பதற்குத் தாம் எண்ணிய நிகழ்ச்சிகள் விளையவுங் கூடுமென அவர் அஞ்சினார். அரிடமன்னனைச்சேர்ந்தவர்களோ நீண்டநாட்கு முன்னே அவர் இறந்துபோனாரென்றே நம்பினார்கள்; அவர் உயிரோடிருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரிந்தால், அவருடையசெல்வாக்கு நாகப்பூர் அரண்மனையில் இன்னும் ஏதேனுந் தொல்லையை உண்டுபண்ணக் கூடுமென்று அவர்கள் எண்ணலாம்; அதனால், தன்பேர்த்தியின்—அழகிய குமுதவல்லி தங்களின்—ஆளுகைக்கு இடைஞ்சல் உண்டாகலாம். அதுவல்லாமலும், நாகநாட்டிற்குரிய இளவரசர் ஒருவர் இளைஞராய் உயிரோடிருக்கிறார் என்பது வெளிப்படுமாயின், கோச்செங்கண்மன்னர் அந்நாட்டின் அலுவல்களில் தலையிடுவதாக அரிடமன்னனைச் சேர்ந்தவராற் கருதப்படும்; கோச்செங்கண் அரசரோ தாம் உலகத்தை முற்றுந்துறந்துவிடுவதாகவும், நாகநாட்டின் அலுவல்களைப்பற்றித் தாம் இனிமேல் நினைப்பதில்லையெனவும், தம் குடும்பத்தவர் எவர்க்கும் எதுவும் அறிவிப்பதில்லையெனவும் உண்மையாகச் சொல்லுறுதி கொடுத்திருக்கிறார். இவ்வாறு எல்லாவற்றையுஞ் சூழ்ந்து பார்க்குங்கால், ஒவ்வொருகாரணத்தையுஞ் செவ்வையாய் அளந்துகாணுங்காற், கோச்செங்கண் மன்னர் இறந்தபிறகுதான், நீலலோசனரே தங்கள் பிறப்பைப்பற்றிய மறைபொருளைத் தங்கட்கு

வெளிப்படுத்தல்வேண்டுமென்பது தீர்மானிக்கப்பட்டது. அரசர்பெருந்தகை எனக்குச் சில கட்டளைதந்தார்; அவர்கள் சொற்படியே அவற்றை வழுவாமல் நடத்துவதாக யான் சொல்லுறுதி தந்தேன். ஒருதிங்களுக்கு முன், போற்றத்தக்க என நண்பர் விளிந்துபோனார். இத்தனை ஆண்டுகளாக அவர் உறைந்துவந்த அந்த அமைதியான தச்சிலிலேயே யான் என்கைகளால் அவரை அடக்கஞ் செய்தேன். இக்கதையைச் சொல்லி வரும்போது பலகாலும் யான் குறிப்பிட்ட அம் மாமறைபொருளுக்கு யான் ஒருவனுமே இந்நேரத்தில் உயிரோடிருக்கும் வைப்பிடமாய் இருக்கின்றேன்: ஏனென்றாற் கோச்செங்கண்மன்னர் நடுநோயாற் பற்றப்பட்டிருந்தபோது அவர்க்கு நோய் தீர்த்தற்பொருட்டுத் திறமைமிக்க அவ்வறிவோனை அவ் இன்பவுறையுளுக்கு யான் அழைத்துச் செல்லவேண்டுவது கட்டாயமாயிருந்தும், அந்த இடம் உள்ள நிலப்பகுதியை அவன் முற்றும் அறியாதவனாயிருக்கின்றான்; அவ்விடத்திற்குச் செல்லும் வழியும் அவன் அறியான்; அதனால் அம்மறைபொருளை அறியாதவனாகவே அவனைக் கருதலாம். சிலதிங்களுக்கு முன்னே இம்மறைபொருள் மூவர்க்கு உரிமையாய் இருந்தது. இந் நீலகிரிநகரத்திருந்த ஒரு தூய குரு, அதனைத்தெரிந்தவர், காலம்வந்து இறந்துபோனார்; அவரையடுத்து இறந்துபோனவர் தங்கள்பாட்டனார் கோச்செங்கண் மன்னரேதாம்; இங்ஙனமாக அம்மறைபொருள் இப்போது என் ஒருவனிடத்தேதான் இருக்கின்றது. இம்மறைபொருளை வைத்திருந்தவரான அம்மூவரில் இருவர் இறந்துபட்டபின்னும் அவரிடத்திற்கு வேறிருவர் இன்னுந் தெரிந்தெடுக்கப்படாமை என்னென்று, என் அன்புள்ள இளையசேரனே, நீங்கள் எண்ணிப்பார்க்கக் கூடுமே? குமுதவல்லி, இம்மறைபொருளைத் தெரிவிக்கப்பட வேண்டியவர்களில் தாங்கள் ஒருவராய் இருக்கவேண்டுமென்பது தங்கள்பாட்டனாரின் விருப்பம். ஏனென்றால், இவ்வுலகத்திற்றோன்றும் மாறுதல்களினிடையே தங்களுக்கு ஏதேனும் ஒரு பொல்லாங்கு நேருமாயின், வணங்கத்தக்க உங்கள்பாட்டனார் அத்தனை நீண்டகாலமாய்த் தங்கிவந்த அதே இன்பவுறையுளில் தாங்கள் போய் ஒதுங்கியிருக்கலாமன்றோ? நீலலோசன, தங்களைப்பற்றியோவென்றாற், சைவசமயத்தைத் தழுவுதலாகிய அவ்வழி ஒன்றுமே தாங்கள் அப்பெரும்பேற்றைப் பெறுதற்குத் தக்கவராகச் செய்யுமாதலால், தாங்கள் அம்மறைபொருளைத் தெரியும் பொருட்டு அதற்கு ஏற்றபடியாக நடந்து கொள்வீர்களென்று அவர் நம்பிக்கை வைத்திருந்தார். தங்களுக்கு அணுக்கமாயும் நலந் தருவனவாயுமுள்ள செய்திகளாயிருப்பதோடு, எழுத்தில் எழுதித் தெரிவிக்கக்கூடா அத்துணைச் சிறந்த மறைபொருளாயும் இருந்தமைற்றான், இவைகளையெல்லாந் தாங்கள் என்வாயினின்றே கேட்டுத்தெரியும்படி தாங்கள் இருவருமே இந்நீலகிரிநகருக்கு வருகவென வேண்டி என்

னுடைய ஆள் சந்திரனிடத்தில் திருமுகங்கள் கொடுத்தனுப்பினேன்.'' என்று மனோகரர் தொடர்ந்துரைத்தார்.

''மாட்சிமை மிக்க மனோகரரே, அம்மோதிரங்களையுங் கூட அனுப்பியதேன்?'' என்று குமுதவல்லி வினவினாள்.

''ஒன்றையொன்றொத்த மோதிரங்களைத் தங்களிருவர்க்குந் தனித்தனியே யான் அனுப்பியதன்நோக்கம் இரண்டுண்டு. முதலாவது, என் ஏவலாள் சந்திரன் இவ்வழிப்பயணத்தினின்று திரும்பி வீட்டுக்குவரும்போது, தற்செயலாய் அவனுக்கு ஏதேனும் இடர்நேர்ந்தால் இம்மோதிரங்களைக் கொண்டுவந்து காண்பிப்பவர்களே என்னுடையகடிதங்களைப் பெற்றவர்களாயிருக்கவேண்டுமென்னும் உண்மை எனதுள்ளத்திற்கு இசைவாகக்காணப்படும்; அதனாற், காவடமான மக்கள் செய்யுஞ் சூழ்ச்சிகளில் அகப்பட்டு ஏமாறுதற்கும் இடம் உண்டாகாது. அம்மோதிரங்களை உங்களுக்கு யான் அனுப்பியதற்குள்ள எனது இரண்டாவது காரணத்தை யான் சிறிது விரித்துச்சொல்ல வேண்டுவதாயிருக்கின்றது. யான் முன்னமே கூறியபடி, கோச்செங்கண் மன்னர் இறந்தபின், அவ்வுயர்ந்த மறைபொருளை வைத்திருப்பவன் யான் ஒருவனே யாயினேன்: ஆனாலும், அதனை முழுதும் நான் ஒருவனே வைத்திருப்பது எனக்குப்பொருத்தமாகத்தோன்றவில்லை; ஏனெனில், எனக்கோ வாழ்நாள் முதிர்ந்துவிட்டது; என்னையும் எந்தநேரத்திலேனுங் காலன் வந்து கைப்பற்றிக்கொண்டு போகக்கூடும். ஆனதனாற்றான், சிறிதுங் காலந்தாழாமல், அம்மறைபொருளைப்பற்றிய எல்லாக்குறிப்புகளையும் முற்றும் விரித்து ஏட்டில் வரைந்து வைத்தேன். மற்றொரு முறியில், யான் உயிரோடிருந்து என்வாயாற் சொல்லவேண்டுமென்று என் ஐயன் கொண்ட திருவுளப்பாங்கின்படியே அதனைப்பற்றிய நீண்டவரலாற்றினைப் பொறித்துவைத்தேன். இம்முறிகளைச் செவ்வையாய் உறையிலிட்டு முத்திரைவைத்து, யான் இறந்தபிறகு என் குறிப்புகளைக் கொண்டுடத்துவோரிடத்து, ஒரு குறிப்பான தன்மைவாய்ந்த ஒன்றையொன்றொத்த இரண்டுமோதிரங்களைக் கொண்டுவந்துகாட்டும் இருவர்மட்டுமே இக்கட்டைத் திறந்து பார்க்கவேண்டுமென்று அதன்மேற் கற்பித்தெழுதித் தனியேயுள்ள என் ஏடுகளினிடையே அதனை வைத்துவிட்டேன். நீங்கள் வருவதற்குமுன்னமே என்னை இங்கிருந்தும் அழைத்துக்கொள்வது இறைவனுக்குத் திருவுளமானால், நான் சொல்லிக்கொண்டு வந்த உண்மைகளையேயன்றிச் சாலப்பெரிய அம்மறைபொருளையும் உங்களுக்குத் தெரியவைக்கும்படி செய்யவேண்டிய ஒவ்வோர் ஏற்பாட்டினையும் அங்ஙனம் முன்னதாகவே மிகவுங்கருத்தாய்ச் செய்துவைத்தேன். என்றாலும், நீலலோசனரே, அப்போதும் அம்மறைபொருள் உங்களுக்குத் தெரிவிக்கப்படமாட்டாது; நான் முன்னமே குறிப்பித்திருக்கிறவகைப்படி நீங்கள் அத்தூயமறை

பொருளைப் பெறுதற்கேற்ற தகுதியைத் தங்களிடம் வருவித்துக்கொண் டாலன்றி, அத் தனித்த முறிச்சீட்டுக் குமுதவல்லி கண்களுக்கு மட்டுந் தெரியும்படி வரைசெய்துவைக்கப்பட்டது." என்று மனோகரர் விடை பகர்ந்தார்.

பின்னர்ச் சிறிதுநேரம் மனோகரர் பேசாதிருந்தார். நீலலோசனனோ சிலநேரம் ஆழ நினைந்துபார்த்துப் பணிவான நாவிற் பேசுவானானான். "போற்றத்தக்க என்நண்பரே, தமது குழவிப்பருவந்தொட்டுப் பயிற்றப் பட்டுவந்தமையால் தமக்கு நன்றாய்த்தெரிந்ததான ஒருசமயத்தைக் கை விட்டுத் தெரியாத மற்றொன்றைக் கைப்பற்றுவது எவர்க்கும் எளிதான செய்கை அன்று. ஆனதனால், எனக்குத்தெரியாததான இச்சமயக் கொள்கைகளை எனக்கு எடுத்து அறிவுறுத்துக. யான் குழந்தையா யிருந்தபோது எனது நெற்றியின்மேல் இடப்பட்ட அடையாளத்திற்கு உரியதான அக்கொள்கை என் மனச்சான்றுக்குப்பொருத்தமாகக் காணப் படுமானால், என் பாட்டனார் விருப்பப்படியும், தகவு மிக்க மனோகரரே தங்கள் விருப்பப்படியும் அதனைத்தழுவிக்கொள்வேனென்று உறுதியாய் நம்புங்கள்."

"அரசி, நாங்கள் இருவேமுஞ் சிறிதுநேரம் ஒருங்குதனித்திருக்கும் மடி விடைதாருங்கள். தங்கள்மைத்துனர் சொல்வது செவ்விதாய் இருக் கின்றது; அவர் முற்றிலுந் திரும்பிவிடுவாரென்பதில் யான் சிறிதும் ஐயுறவில்லை. மாட்சிமைதங்கிய தாங்கள் இங்கே திரும்பிவரும்படி சிறிதுநேரத்தில் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்." என்று அம்மலைய வணி கர் கூறினார்.

குமுதவல்லி அங்ஙனமே அவ்வறையைவிட்டுச்சென்று, தானிருக் கும் அறைவரிசைக்குள் தனித்திருக்கலானாள். தான் கேட்டவைகளைப் பற்றியெல்லாம் ஏதுந்தடையின்றித் தனியேயிருந்து நினைத்துப்பார்ப் பதற்கு அவள் விரும்பினாள்; ஆகவே, கீழுள்ள தோட்டத்திற்கு இறங் கிப்போய் அங்கே அயர்வு தீர்ந்திருக்கும்படி அவள் தன்தோழிமார்க்குக் கற்பித்தாள். அங்ஙனமே அவர்கள் அவளைவிட்டுப்போனபிறகு அவள் சாய்மணைக்கட்டில் ஒன்றன்மேல் அமர்ந்து எண்ணமிடுவாளானாள். முடி வாகப்பார்க்குங்கால், அவ்வறிவோன் சொல்லிய கதை உண்மைக்குத் தெளிவாய்த் திட்டமாய் ஒத்திருந்தது; ஏனென்றால், இப்போதுதான் மனோகரர்வாயினின்று பிறந்தவரலாற்றின் ஒருபகுதியோடு அது மிகவும் வியக்கத்தக்கவாறாய்ப் பொருந்தியிருந்தது. ஆம், திகழ்கலை என்பவன் கோச்செங்கண்மன்னர்முகத்தைப் பார்த்தவனேயாவன்! நாகநாட்டரசி யலினின்று நீங்கிய அம்மன்னர் அத்தனை ஆண்டுகளாகத் தாம் புகலிட மாய்க்கொண்டிருந்த அவ்வின்பநிலத்திலுள்ளே அவன் சென்றதுண்டு! தான் திகழ்கலையைத் தற்செயலாய் எதிர்ப்பட்டதும், இன்னும் மனோ

கரர்வாயினின்று முழுதுந்தனக்குத் தெரிவிக்கப்படவேண்டுவதாய் உள்ள புதுமையானமறையின் உட்பொருளைத் தான் அங்ஙனமே முன்னறிய லானதும் புதுமையல்லவோவென்று குமுதவல்லி தனக்குள் நினைப்பா ளானாள். பின்பு குமுதவல்லியின் நினைவுகள் வேறொருமுகமாய்த்திரும் பவே, அவ்விளைஞனான நீலலோசனன், கள்வர்தலைவனான நல்லானின் வேறான ஒருவனானவன் என்பதை நினைத்துச் சொல்லுக்கடங்காக் களிப் படைந்தாள்; அவனைப்பற்றி அத்தனை பொல்லாங்கான முடிபுக்குத் தான் சடுதியில் வரலானதை நினைத்து அவள் துயருற்றாள். ஆனாலும், நேற்று மாலையில் மீனும்பாள் படுக்கையின் அண்டையில் அவனைத் தான் காண லானது என்னையென்று அவள்மறுபடியும் வியப்புற்றாள்.

இவ்வாறு குமுதவல்லி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அவ் வறைக்கதவை எவரோ தட்டலானார்: அவ்வரசி அவ்வாளை உள் ளே வரும்படி கட்டளையிட்டாள்; இளையனான சந்திரன் அவளெதிரே சென்று நின்றான்.

பதினொராம் அதிகாரம்

குமுதவல்லியும் நீலலோசனனும்

கதவைத்தட்டி முன்அறிவித்து வந்தமையாற் குமுதவல்லி யிருக் கும் அறைக்குச் சந்திரன் இங்ஙனம் காணவந்ததில் மதிப்புக்குறைச் சலேனுந் தகாததேனும் ஏதும்இல்லை: ஏனெனின், பௌத்தர்கள்பால் உள்ளதுபோற் பெண்மக்கள் தனித்திருக்கவேண்டுமென்னுங் கடுமை யானவழக்கம் மேற்கணவாய் மலைநாடுகளிலுள்ள சைவசமயத்தவர்கள் பால் இல்லை. என்றாலுஞ், சந்திரன் அங்கேவந்தது வழக்கத்திற்கு மாறா னதுபோற் குமுதவல்லியினுள்ளத்திற் படுவதாயிற்று. என்னையெனின், மாட்சிமை தங்கிய மனோகரர் தனக்குச் செய்தி அனுப்பியிருந்தால் அவ்வீட்டுமுதியோன் வாயிலாகவாவது அல்லது வேறோர் ஏவற்காரி வாயிலாகவாவது அனுப்பியிருக்க வேண்டுமென்பது அவளுக்குடனே தோன்றுவதாயிற்று. மனோகரரோடு தாம் பேசிக்கொண்டிருந்தபோது தான் சந்திரனைப்பற்றிக் கொண்ட ஐயுறவை உறுதிப்படுத்தத்தக்கது ஏதும்நோவில்லை; அவனது நம்பிக்கைத்தன்மையைப்பற்றி மனோகரர் அவனைப் புகழ்ந்தேபேசியிருக்கின்றார். வேண்டியழைத்த மனோகரரின் திருமுகங்களையும், மோதிரங்களையும் ஒவ்வொருவரிடமும் அவன் சேர்ப் பித்தகாரணத்தாலே, தன்னைநோக்கியும் பெருமான் நீலலோசனனை நோக்கியும் அவர் அவனிடம் நம்பி ஒப்புவித்தசெய்திகளை அவன் நேர்மை யுடன் கொண்டுவந்து செலுத்தினனென்பதும் நன்குவிளங்கிற்று.

இவ்வெண்ணங்கள் குமுதவல்லியின் உள்ளத்தில் விரைவிற் றோன்றிமறைந்ததும், அரசியாயிருக்குந் தனது உயர்ந்த நிலைமைக்கும், ஏவலனாயிருக்கும் அவனது தாழ்ந்த நிலைமைக்கும் ஏற்றபடியாகச் சந்திரனிடம் இனியநோக்கத்தொடு பேசவேண்டுமென அவள் முன்னையிலும் பார்க்கத் தீர்மானஞ்செய்தாள். ஆனதனால், அந்த ஒழுங்கின் அளவுக்கு, அவள் அவன் மிகவுந்தாழ்மையோடும் பணிவோடுந் தொலைவிலிருந்தே செய்த வழிபாட்டை ஏற்றுக்கொண்டாள்; தான் பேசுதற்கு அவளுடைய கட்டளையை எதிர்பார்த்தவனாய்ப் பணிவோடும் அவன் சிறிது தொலைவில் நிற்கையிற், "சந்திரா, நீ சொல்லவேண்டியதைச்சொல். நீ இங்கேவந்த காரணம் யாது?" என்று அவள் வினவினாள்.

"அருள்நிறைந்த அரசி," என்று அவ்வேவலன் விடைபகர்வானாய் மறுபடியுந்தாழப்பணிந்து, "முதலாவது, பெருமாட்டியாரிடம் அடியேனது வணக்கத்தைத் தெரிவிப்பதற்கு ஏற்ற ஒருநேரத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்; இரண்டாவது, அடியேன் கேட்கவிரும்புஞ் சில கேள்விகளுக்குப் பெருமாட்டியார் அருள்கூர்ந்து விடையளிப்பீர்களாயின் மனமகிழ்ந்தவன் ஆவேன்." என்றான்.

அவன் என்னகேள்வி கேட்கக்கூடுமென்று வியப்புற்றவளாய், "நல்லதுசொல் சந்திரா." என்றுகூறினாள் குமுதவல்லி.

"நாகப்பூரிலிருந்தபோது பெருமாட்டியார் அவர்களிடம் அடியேன் செய்திகொண்டுவந்து சேர்ப்பித்தவகையைப்பற்றி என் உயர்குணத்தலைவரிடத்தில் அரசியார் உயர்த்தி நயப்பாய்ப் பேசியிருப்பீர்களென்று அடியேன் எண்ணிக்கொள்ளலாமா? யான் எடுத்துவந்த திருமுகத்திற் குறித்தநாளையும், யான் நாகப்பூரிலுள்ள தங்கள் அரண்மனையில் வந்து சேர்ந்தநாளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் வழியில் இடையே யான் தங்கியிருக்கக்கூடுமா என்பதைத் தாங்கள் தீர்மானம் பண்ணிக்கொண்டிருக்கலாம். தாங்கள் மலையநாட்டிற்குள்வரும்போது எவர்க்குந்தெரியாதபடி வரும்படிக்கும், எவரும் உறுத்துப்பாராத ஒருபாதையைத் தொடர்ந்து வரும்படிக்கும் யான் தங்களை வேண்டிக்கொண்டதெல்லாம் என் தலைவர் கற்பித்தவண்ணம் யான் செய்தனவேயாகும் என்பதை அரசியார் மாட்சிமைமிக்க என்தலைவரின்வாயினின்றே வேண்டிய அளவுக்குக் கேட்டுத் தெளிந்திருப்பீர்கள்." என்று அவ்வேவற்காரன் கூறினான்.

"உன் தலைவரொடு சிறிதுநேரத்திற்குமுன் யான் பேசிக்கொண்டிருந்தபோது இவைகளைக்குறித்து நாங்கள் உண்மையாகவே ஏதும்பேசவில்லை, சந்திரா; ஆனாலும், மாட்சிமிக்கமனோகரர் எனக்குத் தெரிவித்தவைகளிலிருந்து, யான் நீலகிரி நகரத்திற்கு வரும்பயணம் மிகவும்மறைவாக இருக்கவேண்டுமென்பதே முதலிலிருந்து அவரது விருப்பமாகுமென்பதை யான் ஐயமறத்தெரிந்துகொண்டேன். அதுவேயுமன்றி,

யான் அரசியல்நிலைக்கு உரியவள்என்பது புலப்படாமற் செவ்வையாய் மறைக்கப்பட வேண்டுமென்பதும் அவரெழுதிய திருமுகத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்ததை யான் நினைவுகூர்கின்றேன்." என்று நாகநாட்டரசி மறுமொழி புகன்றாள்.

"அப்படியானால், எல்லாவகையிலும், என்னிடம் நம்பி ஒப்புவிக்கப்பட்ட சிறந்தசெய்தியைத் தங்களிடங்கொண்டுவந்து யான் சேர்ப்பித்த வகையில் அரசியாரவர்கள் மனநிறைவடைந்திருக்கிறீர்கள்?" என்று சந்திரன் மொழிந்தான்.

"உனக்கு இகழ்ச்சி உண்டாகும்படி பேசுதற்கு ஏதொரு காரணமும் இல்லை என்பதைச் சந்திரா, உன்சொற்களிலிருந்தே நீ முன்னமே தெரிந்திருக்கலாமே. எனினும், என்னிடமிருந்து இவ்வுறுதிமொழிகளைக் கேட்கும்பொருட்டு நீ ஏன் இவ்வளவுகவலையுள்ளவனாய்த் தோன்றுகின்றாய்?" என்று அவ்வரசி வினவினாள். ஓர் இமைகொட்டும் நேரம் குமுதவல்லி அவ்வேவலன் முகத்தை ஆராய்ந்துநோக்கினாள்: ஏனென்றால், அவனைப்பற்றி அவள்கொண்ட ஐயம் மறுபடியும் அவளதுள்ளத்தில் வலிவுபெற்றுத் தோன்றியது.

"அதன் விளக்கத்தை உடனே சொல்லிவிடுகின்றேன்." என்று முழுதுங் கரவற்ற வெள்ளையுள்ளம் உடையவன்போல் அவ்விளைஞன் விடைகூறுவானானான்: முதலாவது, ஒவ்வொருவரும் அரசியாரின் நல்லெண்ணத்தைப்பெறுதற்கு விரும்புவர்; இரண்டாவது, யான்பிறந்தது முதல் என்னைவளர்த்து, யான் தாய்தந்தையரை இழந்திருந்த காலத்திலும் என்னைப் பாதுகாத்துவரும் அருள்நிறைந்த என்தலைவர் மனோகரருக்கு என்னாலியன்ற எல்லாவகையிலும் இசைவாக நடந்துகொள்ள வேண்டுமென்பதே எனது பெருநோக்கம்; மூன்றாவது, பெருமாட்டி, தாங்கள் இவ்விடத்தே வந்துசேர்ந்தநேரத்தில் தாங்கள்சொல்லிய சில சொற்களிலிருந்து, வரும் வழியில் தாங்கள் இடர் உற்றீர்களோவென்று அச்சமும் அடைந்தேன்."

"ஆ! இப்போது நினைவு கூர்கின்றேன்! யான் என் குதிரையிலிருந்து கீழ் இறங்குகையிற், சில சிறு நிகழ்ச்சிகளைப்பற்றி யான் தற்செயலாய்ப் பேசினது உண்மைதான்; ஆனால், அவை நடந்துபோய்விட்டமையால், இனி அவற்றைக்குறித்துப் பேசுவதிற் பயன் சிறிதுமில்லை." என்று குமுதவல்லி மொழிந்தாள்.

திரும்பவும் அவ் ஏவற்காரன் சொல்லுவான், "ஆம் பெருமாட்டி, தங்கள் திருவாயினின்று அப்போது தோன்றிய சொற்கள் அதுமுதல் என் நினைவைவிட்டு அகலாதிருந்தன; ஏனென்றால், யான் முன்னமே சொல்லியபடி அவை சில இடர்களைக்குறிப்பிட்டனவென்று அஞ்சினேன்; நாகப்பூரிலுள்ள தங்கள் அரண்மனையில் தங்கள் வரவுபார்த்து

யான் காத்திருக்கப் பெற்றபோது, அரசியார்க்கு யான் தெரிவித்துக் கொண்ட குறிப்புகள் ஒவ்வொன்றிலுங் கருத்தின்மையினாலாவது மறதியினாலாவது எதனையேனுஞ் சொல்லாமல் விட்டிருந்தேனாயின் அஃது என் மனத்தை நிரம்பவும் புண்படுத்துவதாகும்.''

இங்ஙனஞ் சந்திரன் பேசியபோதெல்லாங், குமுதவல்லி சாய்மணைக் கட்டிலில் அழகிதாய் அரைவாசி சாய்ந்திருந்தபடியே கீழ்நோக்கியபார்வையோடு இருப்பதுபோற் காணப்பட்டாள்; ஆனாலுங், குற்றம் ஏதும் அறியாமையால் உண்மையான நெஞ்சத்தோடும் அவன் பேசினானோ, அல்லது குமுதவல்லி வழியில் அடைந்த இடர்களுக்கு இவன் உடந்தையாயிருந்ததைப்பற்றி அவள் ஐயுற்றிருந்தால் அவ் ஐயத்தின் அளவை ஆய்ந்தறியும் பொருட்டுக் கரவாயுஞ் சூதாயும் நடந்துகொண்டானோ என்பதை அவ்விளைய ஏவற்காரன் முகத்தினின்று கூடுமானாற் கண்டறியும் வண்ணம் உண்மையில் அவள் கருத்தாய் நோக்கிக்கொண்டிருந்தாள். என்றாலும், அவனதுபார்வையில் அவள் கொண்ட ஐயத்தை உறுதிப்படுத்தத்தக்கது ஏதுமில்லை—எவரோ ஒருவரைப்பற்றி விழிப்பாயிருக்கும்படி இவளுக்குக் கற்பித்து மீனம்பாள் மிகமெல்லச் சொல்லியபெயர் மெய்யாக இவனுடைய பெயரே யாகுமென்னும் நம்பிக்கையைத் திண்ணமாக்குவதற்கு இவனது முகத்தில் ஏதொன்றுங் காணப்படவில்லை. மற்று, அவனுடைய சொல்லிலுங் குறிப்பிலும் உண்மையை உருக்கத்தொடு பேசுந்தன்மையே காணப்பட்டது. இன்னும், ஏவற்காரனாயிருப்பவன் ஒருவன் தன் கடமையைச் செவ்வனே செய்து முடித்ததைப்பற்றியும், நம்பிக்கைக்குரிய ஒரு செய்தியைக் கொண்டுபோகும்படி அமர்த்தப்பட்டக்கால் தன்னை அங்ஙனம் அமர்த்திய அன்புள்ள தன்தலைவரும், அச்செய்தியைத் தான் நம்பிக்கையொடு கொண்டுபோய்ச்சேர்க்க அதனை ஏற்கும் அரசியாரும் முழுதும் மனம் உவக்கும்படி தான் நடந்துகொண்டதைப்பற்றியும் அவன் தான் உறுதியாகத் தெரிந்துகொள்ள விழைவது இயல்பே யன்றோ?

“வழியில் எத்தகைய இடர்கள் எனக்கு நேர்ந்தனவாயினும், முடிவாக அவை என்னுடைய அலுவல்களைப் பழுதாக்கத்தக்கதொன்றையும் உண்டாக்கவில்லை. ஆதலால், அவற்றால் மனத்திற்கு இசையாத அனைத்தையும் நான் மறந்துவிடுதற்கு மிகவும் விருப்பம் உள்ளவனாய் இருக்கின்றேன். சந்திரா, உன்னைச்சுட்டி யான் சொல்லக்கூடிய குற்றம் ஒன்றும் இல்லை. மேலும், உன் தலைவர் உனது நடக்கையைப்பற்றி மகிழ்ந்திருப்பதை நீ அறிந்தால், அஃது உனக்கு இன்பந் தருவதாயிருத்தலால், சிறிது நேரத்திற்குமுன்னே உன் பெயரைச் சொல்லுகையில் நமக்கு நம்பிக்கையுள்ள ஏவற்காரன் என்று உன்னைக் குறிப்பிட்டு உன் தலைவர்

210493

சோமசுந்தரக் காஞ்சியாக்கம் ௩-ஆம் பதிப்பு

1901, பிப்ரவரி, 2-ஆம் நாள் சிவபிரான் திருவடி நீழல் எய்திய தம்மாசிரியர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களின் பிரிவினை ஆற்றாது, கையறுநிலை, தாபதநிலை, மன்னைக்காஞ்சி என்னுந் தலைப்புகளின்கீழ் மறைமலையடிகள் அக்காலத்திற் பாடிய மிக உருக்கமான இரங்கற்பாக்களும், அவற்றின் அருமை பெருமைகண்டும் அவற்றை வியவாமல், மனம்புழுங்கி அவற்றின்மேற் குறைகூறிய புலவர்சிலரின் மறுப்புக்கு அடிகள் அக்காலத்திலேயே வரைந்து வெளியிட்ட எதிர்மறுப்பும் அடங்கியது இந்நூல்.

அங்ஙனம் எதிர்மறுப்பாய் வெளிவந்த காஞ்சியாக்க உரைநூல் 'தொல்காப்பியப் பொருளிலக்கண' நுட்பங்களும் பிறவும் விளங்கவிரித்து உயர்ந்த தனிச்செந்தமிழ் உரைநடையில் வரையப்பட்டிருத்தலின் உயர்ந்த செந்தமிழ் கற்பார்க்கு இது மிகவும் பயன்றருநூலாயிருக்கின்றது; 88-பக்கம்; விலை ஒரு ரூபா நாலணா.

குமுதவல்லி 2-ஆம் பதிப்பு, முதலிரண்டுபாகமும் ஒன்றுசேர்ந்தது

குமுதவல்லி என்னும் மிக இனிய கதைநூல் இற்றைக்கு 30-ஆண்டுகளுக்குமுன் மறைமலையடிகளால் ஆங்கிலத்தினின்றுந் தமிழில் மொழிபெயர்த்துச்செய்து வெளியிடப்பட்டதாகும். இது முன்னே இரண்டுபாகங்களாக வெளியிடப்பட்டது; அவற்றுள் முதற்பாகப்படிகள் இன்னுஞ் சிலவே உள்ளன; இரண்டாம்பாகப்படிகள் எல்லாஞ் செலவாய்ப்போயின. முதற்பாகத்தைப் படித்தவர்கள் இரண்டாம்பாகத்தையும் படிக்க விரும்பி நெடுநாளாய் அதனை விலைக்குக் கேட்டுவருகின்றார்கள். அதனால், இரண்டுபாகங்களையும் ஒன்றாய்ச்சேர்த்து இப்போதொரே நூலாக வெளியிடலாயிற்று.

இவ்விரண்டாம் பதிப்பின்கட் செய்திருக்குஞ் சீர்திருத்தங்கள் சில. முதற்பதிப்பின்கண் இடையிடையே கலந்திருந்த வடசொற்கள் அத்தனையுங் களைந்தெடுக்கப்பட்டு இது தனித்தமிழாக்கப்பட்டிருப்பதும், இடையிடையே சில சொற்களுஞ் சொற்றொடர்களும் முன்னையிலும் இப்போது சுவைமிகுந்தனவாக மாற்றப்பட்டிருப்பதும் பிறவும் அங்ஙனஞ் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகும். இப்பதிப்பையும் முதற்பதிப்பையும் ஒத்துநோக்கிப்படிப்பவர்க்கு வடசொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்கள் இவையென்னும் அறிவுஞ், செந்தமிழ் உரைநடையை மேன்மேல் அழகுஞ் சுவையும் முதிர எழுதும்வகையும் நன்கு விளங்காநிற்கும்.

இன்னும், மக்களியற்கை உலக இயற்கைகளை ஆழமாக ஆராய்ந்துகண்டு, அவைதம்மைக் கதையாகப்பிணைத்து, இலக்கண இலக்கியப் பிழையில்லாத அழகிய தனிச்செந்தமிழ் உரைநடையில் எழுதிய இனிய கதைநூல் தமிழ்மொழியில் ஒன்றுதானும் இல்லை. அப்பெருங்குறையினை நீக்குதற்கே இக்கதைநூல் அடிகளால் வெளியிடப்பட்டது.

உயர்ந்த கதைநூல்கள் ஆக்குவதில் ஆங்கில ஆசிரியர்களும், மற்றை ஐரோப்பிய ஆசிரியர்களும் அமெரிக்க ஆசிரியர்களுமே நிகரற்ற புலமைவாய்ந்தவர்களாவர். மக்களின் இயற்கைக்குணங்களும், அக்குணங்களின் வழியே அவர் சொல்லுஞ்சொற்களுஞ் செய்யுஞ்செய்கைகளும், அவைதம்மால் அவர்க்குள் உண்டாம் உறவும் பகையும், அவ்வுறவுபகைகளால் அவர் அடையும் இன்பதுன்பங்களும், இவ்விரண்டால் அவர்க்குண்டாம் முடிவும், அவரவரியற்கையோடு ஒத்தோ ஒவ்வாமலோ அவரைச்சூழ்ந்துள்ள உலகியற்பொருள்களாலும் அவற்றின் மாறுதல்களாலும் மக்கள்வாழ்க்கையில் உண்டாம் மாறுதல்களுங் கூர்ந்து பார்த்து, அவைதம்மை இயைத்து ஒரு கதையாகத் தொடுக்கும் அவ்வாசிரியர்களின் திறம் பெரிதும் வியக்கற்பாலதாகும். அவ்வாசிரியர்களின் அவ்வியத்தகு திறனை நந்தமிழ்மக்களும் அறிந்து களித்தல்வேண்டியே, ஆங்கிலவல்லுநரிற் பெரும்புகழ்படைத்த ரெயினல்ட்ஸ் (Reynolds) என்னும் ஆசிரியர் இயற்றிய லீலா (Leila) என்னுஞ் சிறந்தகதையை, மூலத்துக்குமுழுதும் நேரான[illegible]கிய திருத்தமான தனிச்செந்தமிழ் உரைநடையில் அடிகள் மொழி[illegible]

வெளியிட்டலாயினர். ஆங்கிலம் உணர்ந்தவர் ஆங்கிலத்திற்கு நேரான தனிச்சொற்கள் இல்லையென்று சொல்லுஞ்சொல்லும், வடமொழியாளர் வடசொற்களைப் பின்றித் தனிச்செந்தமிழில் ஒருநூல் இயற்றல் இயலாதென்று கூறுங்கூற்றும் பொய்யாதலை, இந்நூலை மூலத்தோடு ஒத்துநோக்கிப் படிப்பாரெவரும் எளிதிலுணர்வர். பலமுயற்சிகளால் அலுப்புற்றுச் சோர்வடைவோர் இத்தகைய திருத்தமான கதைநூல்களைப்படித்து அயர்வுதீர்ந்து களிப்புறல்வேண்டுமன்றித், திருத்தமில்லாதவைகளைப்படித்து உணர்வுஞ்செயலுஞ் சிதைவுறல் ஆகாது. தமிழ்மாணவர் இந்நூலைப்படித்துப் பலவகையிலும் பயன்பெறுவாராக! 29)-பக்கம்; விலை மூன்று ரூபா.

தமிழர் மதம்

நூற்பொருளை விளக்கும் நீண்டதோர் ஆங்கில முகவுரையும் உடையது வெளிவந்துவிட்டது

ஆசிரியர்: மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம்: மறைமலையடிகள்

1940, அக்டோபர், 19, 20-ல் சென்னைமாநகரிற் கூடிய 'அனைத்திந்திய தமிழர் மாநாட்டுக்குத்' தலைவராய் அமர்ந்து ஆசிரியர் மறைமலையடிகள் நிகழ்த்திய தலைமைப்பேருரை இது. ஆரியர் இவ்விந்திய நாட்டுட் புகுந்து கலத்தற்குமுன், எல்லாத்துறைகளிலும் நாகரிகத்திற் சிறந்தாராய் வயங்கிய தனித்தமிழ்மக்களுக்கே யுரியனவாயிருந்த இம்மை மறுமைக் கொள்கைகளைப், பண்டைத் தனித்தமிழ் நூல்களான தொல்காப்பியம் முதலியவைகளைக்கொண்டு நன்கு விளக்குவது.

கடவுள் கண்ணுக்கும் மனத்திற்கும் எட்டாதவர் என்னும் பயனற்ற கொள்கையை மறுத்து, அவர் புறத்தே கண்ணுக்கும் அகத்தே மனத்திற்கும் என்றும் புலப்பட்டபடியாய் விளங்கும் அரும்பெருண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியென முதன்முதல் விரிவாக விளக்கிக்காட்டுவது இந்நூலேயாகும்.

கொல்லா அறம், காதலன்பு, ஒளிவடிவில் அம்மையப்பர், திருக்கோயிலமைப்பு, திருமணச் சடங்கு, ஊழ்வினை, தவப்பயிற்சி முதலியவற்றை முதன்முதற் கண்டவர்கள் பண்டைச் செந்தமிழ்ச் சான்றோரே என்பதனை வலிய அகச்சான்று புறச்சான்றுகளால் நன்குவிளக்குவது.

இதன் பொருளடக்கம்: தமிழர் இன்னாரென்பது—ஆரியர் இன்னாரென்பது—தமிழரின் உருவ அமைப்பு—திராவிட ஆரியர்—மநு ஒருதிராவிடமன்னன்—திராவிட ஆரியவகுப்பு—ஆரியருட் சாதி வகுப்பு இல்லை—திராவிட ஆரியரில் நாற்சாதி—தென்னாடு போந்த திராவிடஆரியர்—மதம் இன்னதென்பது—தமிழர் கொள்கை-கொல்லா அறம்—காதலன்பு—பன்மனைவியர் மணம்—பின்முறை மணம்—புதல்வர்ப்பேறு—மறுமை வாழ்க்கை—கடவுளே தாய் தந்தை—ஒளிவடிவே கடவுள் வடிவு—ஒளிவடிவு சிவமும் உமையும்—சைவ வைணவம்—தமிழர்தந் திருக்கோயில்கள்—திருக்கோயிற் றெய்வங்கள்—திருவிழாக்கள்—கார்த்திகை விளக்குவிழா-தீபாவலி—திருவாதிரைத் திருநாள்—திருமணச்சடங்கு-திருமணச்சடங்கை நடத்தும் முறை-திருமண வேள்விச் சடங்கு—பிணச்சடங்கு-ஊழ்வினை-சவவொழுக்கம்—தவப்பயிற்சி—சீர்திருத்தக் குறிப்புகள் முதலியன. 372 பக்கம்; எழுத்துக்குத்திய முழுக் கலிக்காக்கட்டிடம், நான்கு ரூபா.